பொழிவு - 17
குவிப்பு - 03
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
மார்ச் 2014
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 161/ News / 2014"


## இயேசு செல்வராயிருந்தும் நமக்காக ஏழையானார்

# ஏழைகளுடன் எம்மை இனம்காண்போம்!

### தவக்காலச் செய்தியில் திருத்தந்தை அழைப்பு

தன்னை ஏழையாக்கிய இயேசு ஏழ்மையை ஏழ்மையின் நிமித்தம் நாடவில்லை. தூய பவுல் கூறும், "அவரின் ஏழ்மையூடாக நீங்கள் செல்வந்தராய் ஆவதற்கு" என்ற வார்த்தைகள் வெறும் வார்த்தை ஜாலமோ அல்லது கவரும் வரிகளோ அல்ல; மாறாக அவை கடவுளின் வழிமுறை; அன்பின் வழிமுறை; மானிட ஏற்பு, சிலுவை என்பவற்றின் தொகுப்பாகும் எனத் தனது தவக்காலச் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார். எமது தலைவராகிய இயேசுவைப் பின்பற்றி கிறிஸ்தவர்களாகிய நாம் எமது சகோதரர்களினது ஏழ்மைக்கு முகங்கொடுத்து, அதை உணர்ந்து, அதை எமது உரிமையாக்கி அதை இல்லாதொழிக்கக்கூடிய செயல்முறை வழிகளைக் கையாள அழைக்கப்பட்டுள்ளோம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

(திருத்தந்தையினுடைய தவக்காலச்செய்தியின் முழு வடிவத்தை 8ஆம் பக்கத்தில் பார்க்கவும்)



## கோமரசன்குளம் கல்வாரிப் பாதயாத்திரை




இவ்வருட கோமரசன்குளம் கல்வாரிப் பாதயாத்திரை பங்குனி மாதம் 26ம் திகதி புதன்கிழமை அதிகாலை தூய செபஸ்தியார் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆரம்பமாகும் .

பாதயாத்திரிகர்கள் முதல்நாள் இரவு கன்னாட்டியிலும் இரண்டாம் நாள் இரவு வவுனியாவிலும் தங்கவைக்கப்படுவர். மூன்றாம் நாள் கல்வாரியில் ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும் கூட்டுத்திருப்பலியோடு இந்த யாத்திரை நிறைவுபெறும். (மேலதிக விபரங்கள் 13ஆம் பக்கத்தில்)

## தவக்காலம்

### அருளின் காலம் - மனமாற்றத்தின் காலம்






## சர்வதேச விசாரணை வேண்டும்!

### மன்னார் ஆயர் உட்பட 204 கிறிஸ்தவ மதகுருமார் ஐ.நா. விற்கு கடிதம்

இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரி மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை உட்பட வடக்கு கிழக்கைச் சேர்ந்த 204 கிறிஸ்தவ மதகுருமார் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

### அகவை ஒன்றின் நிறைவில்

## 'லெபாறா' நூல் நிலையம்



வறிய மாணவர்களின் வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்தோடு அமலமரித்தியாகிகள் சபையானது பல்வேறுபட்ட ஆக்கபூர்வமான செயற்பாடுகளை உலகளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக இலங்கையின் வடபுலத்தில் உள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் கனகாம்பிகைக்குளம் என்னும் கிராமத்தில் 'அன்னை இல்லம்' என்கின்ற சமூகப்பணி நிறுவனத்தில் **'Lebara'** (Le-லியோன், ba-பாஸ்கரன், ra-றதீசன் நன்கொடையாளர்கள்) என்ற நாமத்துடன் அமலமரித்தியாகிகள் சபையானது கல்விசார் வள நிலையம் ஒன்றினை நிர்வகித்து, இம்மாவட்ட மக்களுக்கும், மாணவர்களுக்கும் நன்மைபயக்கும் வகையில் பல செயற்திட்டங்களைத் தீட்டிவருகின்றது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# மன்னார் மண்ணில் விளைந்த அழைத்தலின் அறுவடைகள்!

### மன்னார் மறைமாவட்டத்திற்கு இரண்டு புதிய குருக்கள்



லே. றொணிஸ் நிமல் வாஸ் (ஜெனிபட்) வங்காலை



இ. அன்ரனி சோசை (லக்ஷன்) வங்காலை

### அமதிகளின் யாழ் மாகாணத்திற்கு இரண்டு புதிய குருக்கள்



சொ. வரதராஜன் குருஸ் (வரதன்) தாழ்வுபாடு



அ. ஜேசுராஜ் குருஸ் (றொக்சன்) தாழ்வுபாடு

### கிளரீசியன் சபைக்கு ஒருவர்



செ. யூட் சைலன் சுண்டிக்குளி, முருங்கன்

மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த ஐந்து அருட்சகோதரர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

வங்காலை புனித ஆனாள் ஆலயத்தைச் சார்ந்த அருட்சகோதரர் லேனாட் றொணிஸ் நிமல் வாஸ் மற்றும் அருட்சகோதரர் இசையாஸ் அன்ரனி சோசை ஆகியோர் மன்னார் மறைமாவட்டக் குருக்களாகவும்,

தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரர் சொர்ணம் வரதராஜன் குருஸ் மற்றும் அருட்சகோதரர் [illegible] குருஸ் ஆகியோர் யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களாகவும்,

முருங்கன் சுண்டிக்குளி கர்த்தர் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரர் செபமாலை யூட் சைலன் அவர்கள் கிளரிசியன் துறவற சபைக் குருவாகவும் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

யூட் சைலன் அவர்கள் அருட்பணி எஸ். வசந்தக்குமார் அடிகளாரின் சொந்தச் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

பணிக்களத்தில் காலடி பதிக்கும் இவர்களை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது. இவர்கள் பற்றிய விரிவான தகவல்கள் 12 ஆம் பக்கத்தில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

மனப்பொழிவு

பதிப்பாசிரியர் பகர்வது

## அர்த்தமும் ஆழமும் பெறவேண்டிய தவ முயற்சிகள்

இயேசுவின் கல்வாரிக் காலடியில் தடம்பதிக்கும் காலம் தவக்காலம். இத்தவக்காலம் அருளின் காலம், ஆண்டவரோடும் அயலவரோடும் ஐக்கியமாகும் காலம். இது மனமாற்றத்தின் காலம். மனம் திரும்புவதற்கேற்ற செயல்களைச் செய்யும் காலம். ''இதுவே தகுந்த காலம்'' (கொரி. 6:2).

### தவக்காலப் பாரம்பரியம்

நமது கிறிஸ்தவப் பாரம்பரியத்திலே – நமது கிறிஸ்தவ வாழ்வு அனுபவத்திலே - தவக்காலம் என்பது தனித்துவமான காலமாக அமைந்துள்ளது. உடல் ஒறுத்தல்கள், உபவாசங்கள், மாமிசத்தவிர்ப்பு என்பவற்றோடு கொண்டாட்டங்களை – ஆடம்பரங்களைத் தவிர்க்கின்ற நடைமுறைகள் நம்மிடையே இருந்து வந்துள்ளன. இதைவிட வழிபாடுகளில் பங்கெடுத்தல், சிலுவைப்பாதை தியானித்தல், பசான் வாசிக்கக்கேட்டல், திருப்பாடுகளின் காட்சிகளை நடித்தல் - பார்த்தல் போன்ற பக்திமுயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. இவை அனைத்துமே தேவையானவை; பாராட்டப்பட வேண்டியவை; ஊக்குவிக்கப்பட வேண்டியவை!

ஆனால் தவக்காலத்திலே இதுபோன்ற பக்தி முயற்சிகளையும் ஒறுத்தல் முயற்சிகளையும் மட்டும் நாம் மேற்கொண்டால் போதுமா? இவற்றுக்கு மேலேசென்று நம்முடைய வாழ்வு மாற்றத்தை நோக்கிய முயற்சிகளில் நம்மை ஈடுபடுத்த வேண்டாமா?

### எது முக்கியம்?

அமெரிக்காவில் கால்சால் என்ற ஓர் சிறு நகரில் ஒரு வயதான குருவானவர். ஒரு நாள் இரவு 11.00 மணிக்கு அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு. ''அப்பா இறந்து கொண்டிருக்கிறார்...'' என்ற சோகக்குரல். தொலைபேசியை வைத்துவிட்டு உடனே புறப்பட்டார். அது குளிர் காலம்! அந்த இடம் அருகில் இருந்ததால் நடந்தே சென்றார். ஒரு சிறு சந்து வழியாகப் போய்க்கொண்டிருந்தபொழுது திடீரென அவர்முன் ஓர் உருவம் துப்பாக்கியுடன் தோன்றியது. ''உனது பணத்தை எடு'' என்று கேட்டது. தன்னிடமுள்ள சில டொலர் நோட்டுக்களை எடுக்கக் கோட்டைத் திறந்தார். திறந்தபொழுது அவரது ரோமன் கொலர் - அதாவது குருவுக்குரிய அடையாள உடை – தெரிந்தது. அதைக் கண்டதும் ''நீங்கள் ஒரு பாதர் என்பது எனக்குத் தெரியாது. உங்கள் பணம் வேண்டாம். வைத்துக் கொள்ளுங்கள்'' என்று திக்கித்திக்கிச் சொன்னான் திருடன். மன ஆறுதல் அடைந்த குருவானவர் அவனுக்கு நன்றியுடன் ஒரு சுருட்டுக் கொடுத்தார். ''வேண்டாம் பாதர். நன்றி. தவக்காலத்தில் நான் புகை பிடிப்பதில்லை'' என்றான். இத்திருடனைப்பற்றி சிந்திக்கும்போது சிலவேளை நமக்கு சிரிப்பு வரலாம். அவனுடைய அறியாமையை எண்ணி நாம் ஏளனம் செய்யலாம். ஆனால் பல தடவைகளில் நாமும் இத்திருடனுடைய நிலையில்தான் இருக்கின்றோம் என்பதை மறந்துவிடுகின்றோம். தவக்காலத்தில் சுருட்டுக்குடிக்க மாட்டேன் என்று தீர்மானம் எடுத்தவன் தன் அடிப்படையான பாவமாகிய கொலை செய்வதிலிருந்து, கொள்ளை அடிப்பதில் இருந்து விடுபட அவன் விரும்பவில்லை.

### இயேசு கண்டிக்கும் வெளிவேடம்

இத்திருடன் ஓர் பரிசேயன்! யூதர்களும் இவனைப்போலவே தங்களது வெளி ஆசாரங்களை மிகவும் நுணுக்கமாக அனுசரித்து வந்தார்கள். மனிதர் கட்டளைக்கும் பரம்பரைக்கும் முக்கியத்துவம் கொடுத்து (மாற்கு 7:7) இறைவனின் முக்கிய கட்டளையை கைவிட்டார்கள். மனிதர் பார்க்கும்படி சில பரம்பரைகளைக் கவனமாய் அனுசரித்து வந்தார்கள். ஆனால் மனிதர் பார்க்கமுடியாத உள்ளத்தில் வஞ்சகமும் வெறுப்பும் நிறைந்தவர்களாய் இருந்தார்கள் (மாற்கு 3:2). உண்மையான ஆன்மீக வாழ்வு வெறும் சுத்திகரச் சடங்குகளிலும், வெளி ஆசாரங்களிலும், ஆடம்பரங்களிலும், வெளிக்கொண்டாட்டங்களிலும், அர்த்தமற்ற பரம்பரையை கடைப்பிடிப்பதிலும் தங்கியிருக்கவில்லை. உள்ளும், வெளியும் பொங்கி வழியும் இறையன்பில் அடங்கியுள்ளது (இசை 1:11 – 17, 58:1–14). எனவே தவக்காலத்தின் மையப்பொருளான மனமாற்றத்தை நோக்கி நாம் பயணம் செய்வோம். அப்போது நமது பக்திமுயற்சிகளும், தவமுயற்சிகளும் அர்த்தம்பெறும்; ஆழம்பெறும்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,

அன்புடன் அருட்பணி. தமிழ் நேசன்,

பதிப்பாசிரியர்

---

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையமான

# கலையருவி நடாத்தும்

## "மனித மாண்பும் குடும்ப வாழ்வும்"

# புத்தாக்கப் போட்டிகள்

கட்டுரை/ சிறுகதை/ கவிதை/ நாடகம் போன்ற ஆக்கங்கள் கோரப்படுகின்றன!.

"மனித மாண்பும் குடும்ப வாழ்வும்" என்ற இவ்வாண்டிற்கான மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையப்பொருளை முன்னிலைப்படுத்தி மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் ஏற்பாட்டில் புத்தாக்கப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

1. **கட்டுரை** - 1000 சொற்கள்
2. **சிறுகதை** - 1000 சொற்கள்
3. **கவிதை** - தாளின் (A 4) ஒரு பக்கத்தில் மட்டும். (மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக் கவிதையாகவோ அமையலாம்)
4. **நாடகப் பிரதி ஆக்கம்** - 20 நிமிடங்களுக்கு உட்பட்டதாக அமைதல் வேண்டும்.

**- ஒவ்வொரு போட்டியிலும் மூன்று இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு முறையே 3,000/=, 2,000/=, 1,000/= பரிசாக வழங்கப்படும்.**

**குறிப்புக்கள் :**

- இப்போட்டிகள் மன்னார் மறைமாவட்டத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டது.
- திறந்த போட்டி
- ஒருவர் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்ற முடியும். பிரதிகள் தாளில் ஒரு பக்கம் மாத்திரம் அமைதல் வேண்டும்.
- **முடிவுத்திகதி - 30.06.2014**
- போட்டியாளர்கள் தங்கள் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் போன்றவற்றை பிறிதொரு தாளில் தெளிவாகக் குறிப்பிட்டு ஆக்கங்களுடன் இணைத்து அனுப்பவும். அனுப்பவேண்டிய முகவரி: புத்தாக்கப் போட்டிகள், கலையருவி, 116/ 2, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்.
- தழுவல், மற்றும் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

---

## மன்னார் மறைமாவட்டத்தில் திருவழிபாடு பற்றிய கருத்தரங்கு

"மனித மாண்பைக் குடும்பங்களில் மதிப்போம்" என்னும் மறைமாவட்ட இலக்கை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் இவ்வாண்டிலே, இலங்கையில் உள்ள நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் இணைந்து ஏற்பாடு செய்த திருவழிபாடு பற்றிய கருத்தரங்கு மன்னார் மறைமாவட்டத்தின் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பங்கிலுள்ள வழிபாட்டுக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு மன்னார், மடு, வவுனியா ஆகிய இடங்களில் தை மாதம் 28ம், 29ம், 30ஆம் திகதிகளில் நடைபெற்றது.

தமிழ்நாடு திருவிவிலிய, மறைக்கல்வி, திருவழிபாடு முப்பணி நிலையத்தின் திருவழிபாட்டு ஆணைக்குழுவின் பொதுச்செயலாளர் தூத்துக்குடி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் ரோலிங்ரன் இக்கருத்தமர்வுகளை சிறப்பாக நடாத்தினார்.

குருக்கள் துறவிகளுக்கான கருத்தமர்வு மன்னார் பேராலயத்தில் இடம்பெற்றது. மன்னார், மடு, முருங்கன் மறைகோட்டங்களிலுள்ள அனைத்துப் பங்கு வழிபாட்டுக்குழு, பாடகர் குழாம், மறையாசிரியர்கள் ஆகியோருக்கான கருத்தமர்வு மடு தியான இல்லத்தில் இடம்பெற்றது. வவுனியா மறைக்கோட்டப் பங்குகளிலுள்ள வழிபாட்டுக் குழு, பாடகர் குழாம், மறையாசிரியர்களுக்கான இக்கருத்தமர்வு வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்றது.

இக்கருத்தமர்வை மன்னார் மறைமாவட்டத் திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. அலெக்ஸ்சாண்டர் ஆரோக்கியம் சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தார். நிகழ்வுகளின் பதிவுகள் சிலவற்றை கீழே காணலாம்.











---

## மன்னார் மறைமாவட்டம்

### திருவழிபாட்டு நாட்காட்டி - 2014

#### பங்குனி

19 - புனித சூசையப்பர் திருவிழா - தாழ்வுபாடு, காத்தான்குளம், இலுப்பைக்கடவை.
- மன்னார் ஆயரின் பெயர் கொண்ட தினம்

26 - கோமரசன்குளம் கல்வாரி திருத்தல பாதயாத்திரை ஆரம்பம்.

28 - கோமரசன்குளம் கல்வாரி திருத்தல திருவிழா.

#### சித்திரை

04 - ஓலைத்தொடுவாய் கர்த்தர் ஆலயத்திருவிழா.

07 - புனித அந்தோனியார் திருவிழா - குஞ்சுக்குளம் தொங்குபாலம்.

11 - பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயத் திலுவிழா.
- கோமரசன்குளம் கல்வாரி பங்கு திருவிழா.

13 - குருத்தோலை ஞாயிறு - புனித வாரம் ஆரம்பம்

14 - திரு எண்ணெய் அர்ச்சிப்பு திருப்பலியும் திருச்சடங்கும் மாலை 5.00 மணிக்கு தூய செபஸ்தியார் பேராலயம் மன்னார்.

18 - புனித வெள்ளி உண்ணா நோன்பும் மாமிச தவிர்ப்பும், குருமடங்களுக்கான நிதிசேகரிப்பு (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பப்படும்)

27 - இறை இரக்கத் திருவிழா
- புனித தோமையார் திருவிழா - நாகதாழ்வு, கொவ்வங்குளம், குமனாயன்குளம்.

■ *மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத்தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.*

---

## உண்மை உறைக்கும் கமிலஸ்





(நன்றி - தி மெசஞ்சர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. விசாரணை ஆணைக்குழுவை அமைக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுங்கள்!

## பேராயர் டெஸ்மண்ட் டுட்டு தலைமையிலான மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கோரிக்கை



இலங்கையில் விசாரணை ஆணைக்குழுவொன்றை ஐ.நா. ஸ்தாபிக்க வேண்டுமென தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு தலைமையிலான மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக ஐ.நா.வுக்கு பேராயர் டெஸ்மண்ட் டுட்டு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். தென்னாபிரிக்காவின் மனித உரிமைகள் மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, இலங்கையின் தமிழ் சிவில் சமூக அமைப்பின் தலைவரும், மன்னார் மறைமாவட்ட ஆயருமான மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், வடமாகாண முதலமைச்சரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான சி. வி. விக்னேஸ்வரன், தென்னாபிரிக்காவின் சிவில் சமூகப் பங்களிப்புக்கான உலகக் கூட்டணியின் செயலாளர் நாயகம் டேனி ஸ்ரீஸ்கந்தராஜா போன்ற 28 பிரதிநிதிகள் இந்தக் கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கையில் விசாரணை ஆணைக்குழுவை அமைத்து சுதந்திரமான சர்வதேச விசாரணையொன்றை ஏற்படுத்துமாறு 2014 மார்ச் அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென உலகளாவிய ரீதியிலுள்ள தனிப்பட்டவர்கள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த அக்கறைகொண்ட நாங்கள் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையை வலியுறுத்துகின்றோம் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார்ப் புதைகுழி புராதன மயானமாம்

## தொல்பொருள் திணைக்களம் கண்டுபிடிப்பு



மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பிரதேசம், புராதன மயானம் எனத் தொல்பொருள் திணைக்களம் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவொன்று மேற்கொண்ட பரிசோதனையின் பின்னர் இந்த முடிவுக்கு வந்துள்ளதாகத் திணைக்களத்தின் அகழ்வுப் பிரிவுப் பணிப்பாளர் நாமல் கொடித்துவக்கு கூறியுள்ளார். குறித்த மயானம் சுமார் 100 அல்லது 150 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குறித்த பகுதியில் இருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வுப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானம்

*"உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம். உங்கள் இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் வாருங்கள்" (யோவேல் ஆகமம்* 2:13). அருளின் காலமாகிய தவக்காலத்தில் இறைவார்த்தையால் ஊட்டம்பெற்று இறை உறவில் மகிழ்ந்திருந்து ஆன்மீக வளம் பெற,

### "ஆண்டவர் உங்களை அழைக்கிறார்"

இடம் : தியான இல்லம், மடுத்திருப்பதி.
காலம் : 21,22,23 பங்குனி 2014

**பங்கேற்க வாருங்கள்**

நேரம் : 21ம் திகதி வெள்ளி மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி 23ம் திகதி ஞாயிறு மதியம் 1.00 மணிக்கு நிறைவடையும்.

ஆசிரிய அர்ப்பணத்தை ஆழப்படுத்தும் அரிய வாய்ப்பைத் தவறவிடாது பங்கெடுத்துப் பயன்பெறுங்கள்.

**– கத்தோலிக்க ஆசிரியர் சங்கம், மன்னார் மறைமாவட்டம்.**

## மறைமாவட்ட கீதம் – போட்டி முடிவுகள்

மன்னார் மறைமாவட்டத்திற்கென்று தனியாகக் கீதம் ஒன்றை அமைக்க வேண்டுமென்ற ஆயரின் விருப்பத்திற்கமைய கடந்த டிசம்பர் மாதம் போட்டி ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டது. இதிலே கத்தோலிக்க இளைஞர்கள், வளர்ந்தவர்கள் என்று பலர் பங்கு ரீதியாகக் கலந்துகொண்டனர்.

இதிலே வவுனியா, தோட்டவெளி, பேசாலை வங்காலை, முருங்கன், நானாட்டான் என ஆறு பங்குகள் கலந்து சிறப்பித்தன. இப்போட்டியில் பங்குபற்றிய குழுக்களுக்கும் உற்சாகம் வழங்கிய பங்குத்தந்தையர்களுக்கும் எம் நன்றிகள். இதிலே முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற பேசாலை மற்றும் வவுனியா பங்குகளுக்குச் சிறப்பான வாழ்த்துக்கள். பேசாலைப் பங்கிலிருந்து பாடலை எழுதி இசையமைத்து வழங்கிய திரு. எட்வேட் பீரிஸ் அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

இளைஞர் பணியகம், இயக்குனர், அருட்பணி நெவின்ஸ் யோகராச்.

# இளைஞர் பணியகத்தின் செயற்பாடுகள்







"மனித மாண்பும் குடும்பமும்" என்ற கருப்பொருளை மையமாகக்கொண்டு மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க இளைஞர் பணியகமானது பல்வேறு கருத்தமர்வுகளையும் பயிற்சிப்பட்டறைகளையும் ஏற்பாடு செய்துவருகின்றது.

கடந்த தை மாதத்திலே இளைஞர்கள் தற்காலத்திலே எதிர்கொள்கின்ற சவாலாகக் 'காதலும் குடும்ப வாழ்வும்' என்ற தொனிப்பொருளில் மன்னார் மறைக்கோட்ட இளைஞர்கள், உயர்தர மாணவர்களுக்கு அருட்தந்தை - உளவியலாளர் கரவையூர்ச் செல்வம் (அமதி) அவர்களினால் முன்னெடுக்கப்பட்டது. அத்தோடு அருட்பணி. செபஸ்தியன் (அ.ம.தி) அவர்களினால் முருங்கன் மறைக்கோட்ட இளைஞர்களுக்கு நானாட்டான் பங்கிலே உளவியல் கருத்தரங்கும், வங்காலைப் பங்கிலே உயர்தர மாணவர்களுக்கு அருட்சகோதரி கிறிஸ்ரபெல் (தி. கு) அவர்களினால் "பாலியல் கல்வி - ஓர் உளவியல் பார்வை" என்ற கருத்தமர்வும் இடம்பெற்றது.

மேலும் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர்களுக்கு என்று தனியாக இடம்பெற்ற ஒன்றுகூடலில் "வன்முறையற்ற தொடர்பாடல் (Non – vialent communication) - காதலும் குடும்பப் பிரச்சினைகளும்" என்ற தலைப்பிலே முறையே RPR நிறுவனப் பணியாளர்களும், இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர் (மடு வலயம்) திரு. டெனிஸ் லெம்பேட் அவர்களும் நெறிப்படுத்தினார்கள். மேலும் இத்தவக்காலத்திலே இளைஞர்கள் உயர்தர மாணவர்களுக்கென்று மறைக்கோட்ட ரீதியில் தவக்காலத் தியானங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

## அணு ஆயுத எதிர்ப்பு! 84 வயது அருட்சகோதரிக்கு 3 ஆண்டுகள் சிறை



அணு ஆயுதத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்க, அமெரிக்காவில் யுரேனியம் சேமிப்புக் கிடங்கு ஒன்றில் அத்துமீறி நுழைந்ததற்காக 84 வயது கிறிஸ்தவ அருட்சகோதரி ஒருவருக்கு சுமார் மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் டென்னெஸி மாகாணத்தில் உள்ள ஓக் ரிட்ஜ் என்ற இடத்தில் அமைந்திருக்கும் இந்தக் கிடங்கில் 2012ம் ஆண்டு ஜூலை மாதத்தில் வேறு இருவருடன் சேர்ந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக அருட்சகோதரி மேகன் ரிஸ் மற்றும் அவ்விருவருக்கும் இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

அந்த மற்ற இருவருக்கும் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலான காலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. சிறைதண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறப்பட்டபோது, நீதிமன்றத்தில் இருந்து சகோதரி மேகன், தான் செய்த செயல் குறித்து தனக்கு எந்தவித வருத்தமும் இல்லை என்றும், இதைச் செய்வதற்குத் தான் 70 ஆண்டுகள் காத்திருந்தேன் என்பது குறித்து மட்டுமே தனக்கு வருத்தம் இருப்பதாகவும் கூறினார்.

## விவிலிய அறிஞர் பீற்றர் அபீர் அடிகளார் ஆயராக நியமனம்




இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள கல்தான்பேட்டை என்ற புதிய மறைமாவட்டத்தை உருவாக்கி அதன் முதல் ஆயராக அருட்பணி பீட்டர் அபீர் அந்தோனிசாமி அவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் நியமித்துள்ளார். இவர் கடந்த பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார். இம்மறைமாவட்டத்தில் கணிசமான தமிழ் மக்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாண்டிச்சேரி கடலூர் உயர் மறைமாவட்டத்தின் சாத்தியப்பட்டு என்ற ஊரில் பிறந்த பீட்டர் அபீர், பாண்டிச்சேரி – கடலூர் உயர் மறை மாவட்டத்திற்கென 1979ஆம் ஆண்டு மே முதலாம் திகதியன்று குருவாக அருள்பொழிவு செய்யப்பட்டார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## தோமஸ் அடிகளார் விண்ணகம் சென்ற 50வது ஆண்டு நிறைவு



செபமாலைதாசர் சபையின் ஸ்தாபகர் இறையடியார் வண. தோமஸ் அடிகளாருடைய இறப்பின் 50வது ஆண்டு நிறைவு கடந்த ஜனவரி மாதம் 26ம் திகதியாகும். இதனை நினைவுகூர்ந்து சிறப்பிக்கும் வண்ணம் கடந்த 27.01.2014 அன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள அருள் ஆச்சிரமத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மகிழ்ச்சிகொள்ளும் செபமாலைதாசர் சபை அங்கத்தவர்கள் அனைவரையும் மன்னா வாசகர்கள் சார்பில் வாழ்த்தி நிற்கின்றோம். அத்துடன் வண. தோமஸ் அடிகளார் புனிதராக உயர்த்தப்படவேண்டியும் மன்றாடுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருங்கனில் நடைபெற்ற

# புனித தோன் பொஸ்கோ பெருவிழா







காலத்தின் தேவைகளை கருத்துடன் ஆய்த்தறிந்த மன்னார்த் திருச்சபை, மக்களின் ஆன்மீக நலன் கருதி பல்வேறு துறவற சபைகளை தன்னகத்தே கனிவுடன் வரவேற்றது. அவ்வகையில் கடந்த 2004ம் ஆண்டு முதல் சலேசியர்கள் மன்னார் மறைமாவட்டத்தில் வேரூன்றி தங்களுடைய பணியை இயேசுக்கிறிஸ்துவின் அன்புக்கட்டளைக்கு இணங்க இன்றும் தொடர்ந்தாற்றுகின்றனர். இளைஞர்களின் இதயம் எனத்திகழும் முருங்கன் தொன் போஸ்கோ இல்லமானது கைவிடப்பட்ட, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கும் மற்றும் வேலைவாய்ப்பினை வாஞ்சையோடு தேடும் இளம் உள்ளங்களுக்கும் நிழலோடு கனி கொடுக்கும் கல்லூரியாகவும் திகழ்கின்றது.

கடின உழைப்பு மற்றும் விடாமுயற்சியுடன்கூடிய நிலையான வாழ்வாதாரத்தை எதிர்நோக்காகக்கொண்டு வாழும் பல்வேறு இளைஞர்களின் ஆசைகளை சாத்தியப்படுத்துவதற்காகப் பல பிரிவுகளைக்கொண்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தை சலேசியர்கள் வடிவமைத்துள்ளனர். அத்துடன் ஆங்கிலக் கற்கைநெறியானது நிகழ்கால இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கும் இன்னுமோர் ஊடகமாகத் திகழ்வதனால் ஆங்கில அறிவையும் தொன் பொஸ்கோ நிறுவனம் வழங்குகின்றது.

தூரப் பிரதேசங்களில் வாழும் மாணவர்களுக்கும், கல்வியைத் தொடரமுடியாமல் வறுமையில் வாடும் பல சிறார்களுக்கும், கைவிடப்பட்டவர்கள், வாழ்வைத் தொலைத்தவர்கள் என்று ஏங்கும் எல்லாருக்காகவும் இவ்வில்லத்தின் வாசல் எப்போதும் திறந்துவிடப்பட்டுள்ளது.

இளைஞர்களை மட்டும் கருத்தில்கொள்ளாமல் பாடசாலை செல்லும் சிறார்களுக்கு ஏற்றத்தாழ்வு இன்றி பிரத்தியேக மாலை நேர வகுப்புக்களை நாள்தோறும் நடாத்தி வருவதோடு, இங்கே தங்கிக் கல்வி கற்கும் விடுதி மாணவர்கள், தொழிற்பயிற்சி பயிலும் மாணவர்கள், ஆங்கிலக் கற்கைநெறி மாணவர்கள், மாலை நேர வகுப்பிற்கு வரும் அயல் கிராம பாடசாலை சிறார்களுக்குமாக அனைத்து மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு உளவளர்ச்சிக்கு உதவும்முகமாக தினந்தோறும் உளவியல் வகுப்புக்களும் தனிச்சந்திப்புக்களும் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.


இறைவனின் இம்மாபெரும் பணியைத் தொடர்ந்தாற்றுவதற்காக, தம் சொந்த மண்ணில் இருந்தும் பல சலேசியர்களை உருவாக்குவதற்காகவும் பணியின் சிறப்பியல்புகளை அறிந்து தெளிந்து தேறுவதற்காகவும் எங்களுடைய பணித்தளத்திலேயே குருமடமும் அமைக்கப்பட்டு உருவாகியிருக்கின்றது.

புனித தொன் பொஸ்கோவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் "டொன் பொஸ்கோ பாதர்ஸ்" என அழைக்கப்படும் சலேசிய துறவிகள் தொன் பொஸ்கோவின் நினைவு நாளை தை 31ம் நாள் பெருநாளாக கொண்டாடி மகிழ்கின்றனர். இப்பெருவிழாவை முன்னிட்டு தொன் பொஸ்கோ பற்றிய வினாவிடைப் போட்டி பாடசாலை மட்டத்தில் நடைபெற்று இறுதிச்சுற்றில் வெற்றியீட்டும் போட்டியாளர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவமும், இங்கே கல்வி பயின்று வெளியேறிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபம் மற்றும் கலை நிகழ்வும் திருப்பலி முடிவில் நடைபெற்றது.

# நாட்டு நடப்புக்கள்

## தருவது நாங்கள் ........ தீர்மானிப்பது நீங்கள்........

### மீண்டும் முதல்நிலையில் பில்கேட்ஸ்




கார்லோன் என்பவரைப் பின்னுக்குத் தள்ளி மீண்டும் நம்பர் 1 பணக்காரர் என்ற அந்தஸ்தை பில்கேட்ஸ் பெற்றுள்ளார். உலகின் நம்பர் 1 பணக்காரர் என்ற அந்தஸ்தை அமெரிக்காவின் கம்பியூட்டர் நிறுவன அதிபர் பில்கேட்ஸ் பெற்று இருந்தார். கடந்த 20 ஆண்டுகளில் 15 முறை நம்பர் 1 இடத்தை தக்கவைத்து இருந்தார். இதற்கிடையே, கடந்த வருடம் மெக்சிக்கோ தொழில் அதிபர் கார்லோன் சிலிம் அவரை முந்தினார். உலகின் நம்பர் 1 பணக்காரர் என்ற பட்டத்தைத் தட்டிச் சென்றார்.

இந்த நிலையில், மீண்டும் நம்பர் 1 பணக்காரர் என்ற அந்தஸ்தை பில்கேட்ஸ் பெற்றார். சமீபத்தில் அமெரிக்காவின் போர்ப்ஸ் பத்திரிகை சர்வதேச அளவில் பணக்காரர்களைக் கணக்கெடுத்தது. அப்போது 1,645 ஆண் மற்றும் பெண் கோடீஸ்வரர்கள் மற்றும் தொழில் அதிபர்களின் சொத்து விபரங்கள் சேகரிக்கப்பட்டன.

அதில் பில்கேட்ஸ் மீண்டும் உலகின் நம்பர் 1 பணக்காரர் என்ற அந்தஸ்தைப் பெற்றார். அவரது சொத்து மதிப்பு ரூ. 4 லட்சத்து 72 ஆயிரம் கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவருக்கு அடுத்தபடியாக மெக்சிகோவின் கார்லோன் சிலிம் 2வது இடம் பிடித்தார். அவரது சொத்து மதிப்பு ரூ. 4 லட்சத்து 46 ஆயிரம் கோடியாகும்.

### குண்டு வெடிப்பு ஆபத்து இந்தியாவிற்கு 3வது இடம்

உலக அளவில் குண்டு வெடிப்பு அதிகம் நிகழும் ஆபத்தான நாடுகளின் பட்டியலில் இந்தியா 3வது இடத்தைப் பிடித்துள்ளதாக தேசிய குண்டுவெடிப்பு புள்ளி விபர மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் ஈராக்கும், இரண்டாவது இடத்தில் பாகிஸ்தானும் இடம்பிடித்துள்ளன. இந்தியா உட்பட இந்த மூன்று நாடுகளிலுமே ஒட்டுமொத்தக் குண்டுவெடிப்புகளில் 75 சதவீத குண்டு வெடிப்புகள் நிகழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மன்னாரில் கடந்த வருடம் 120க்கும் மேற்பட்ட கடும் குற்றங்கள்

மன்னார் மாவட்டத்தில் கடந்த வ்ருடம் 128 கடும் குற்றங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் அதில் 65 குற்றங்களுக்கான சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மன்னார் பொலிஸ் நிலையத் தலைமையகப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை 128 கடும் குற்றங்கள் பதிவாகியுள்ளன. குறிப்பாகக் கடத்தல், கொள்ளை, கொலை முயற்சி உட்பட பல்வேறு கடும் குற்றங்கள் பதிவாகியுள்ளன.

இதில் 95 குற்றங்களுக்கான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், 65 குற்றங்களுக்கான சந்தேக நபர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் மன்னார் பொலிஸார் ஏனைய குற்றவாளிகளை கைதுசெய்து சட்டத்தின்முன் நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் 188 கிலோ, 560 கிராம், 367 மில்லிகிராம் கஞ்சாவும், 3 கிராம் 360 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இந்தப் போதைப் பொருள்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### ஜனவரியில் 2,920 விபத்துகள், 164 பேர் பலி

2014ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மட்டும் 2,920 விபத்துகள் இலங்கையில் இடம்பெற்றுள்ள அதேவேளை இவ்விபத்துகளில் 164 பேர் பலியாகியுள்ளதாக சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நாட்டில் 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற 42,145 விபத்துக்களில் 2,444 பேர் பலியாவதுடன் 286 பேர் அங்கவீனமடைந்தனர். இதேபோன்று 2013 ஆம் ஆண்டு இடம் பெற்ற 39,801 விபத்துக்களில் 2,339 பேர் பலியானதுடன் 320 பேர் அங்கவீனமடைந்தனர்.

இந்த 2014 ஆம் ஆண்டின் முதல் மாதமான ஜனவரியில் மட்டும் இவற்றில் 164 பேர் பலியாகியுள்ளனர். இவ்வீதி விபத்துகளில் அதிகளவில் மோட்டார் சைக்கிள்களே சிக்கிக் கொள்கின்றன.



### 364 புத்தகங்களை 7 மாதங்களில் வாசித்து ஒன்பது வயதுச் சிறுமி சாதனை!

பிரிட்டனைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமி 364 புத்தகங்களை வெறும் 7 மாதங்களில் வாசித்து சாதனை படைத்துள்ளார்.

செஷைர் பகுதியில் உள்ள ஆஷ்லே கிராமத்தைச் சேர்ந்த பெயித் என்ற சிறுமி, இன்றைய சிறுவர்களைப்போல தொலைக்காட்சியில் காட்டூன் சனல்களை பார்ப்பதையும் கம்ப்யூட்டரில் விளையாடுவதையும் விரும்புவதில்லை. மாறாக, உலகப் புகழ்பெற்ற ஹாரிபொட்டர், ரோல்டு தலின் நாவல்களை விரும்பிப் படிக்கிறார்.

பள்ளிக்குச்செல்ல ஆரம்பித்தது முதலே புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார். தனது ஆசிரியர்கள் அதிக புத்தகங்களைப் படிப்பதை அறிந்த அவருக்கு அதுவே உந்துதலாக அமைந்தது.

"விலங்குகள் அல்லது மேஜிக் அல்லது வீரச்செயல்களைக் கொண்ட கதாபாத்திரங்களுடன்கூடிய புத்தங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். அதேநேரம் புத்தகம் படிப்பது மட்டுமே எனது வாழ்க்கை அல்ல. வாரத்துக்கு 4 மணி நேரம் ஜிம்னாஸ்டிக் பயிற்சியில் ஈடுபடுகிறேன். தவிர கராத்தே பயிற்சி பெறுகிறேன். வலை பந்து மற்றும் டிரம் உள்ளிட்ட விளையாட்டுகளிலும் ஈடுபடுகிறேன்." என பெயித் தெரிவித்தார்.

### ஆண்டுக்கு 10 லட்சம் குழந்தைகள் பிறந்தவுடன் இறக்கின்றன



ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் குழந்தைகள் தாங்கள் பிறந்த முதல் நாளிலேயே இறந்துவிடுவதாக குழந்தைகள் நல தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகின் அனைத்துப் பெண்களும் சுகாதார சேவைகளைப் பெறமுடிந்தால் உலகம் முழுவதும் ஏற்படும் இந்த மரணங்களில் பாதிக்கும் அதிகமான மரணங்களை தடுக்க முடியும் என்று 'சேவ்த சில்ட்ரன்' எனப்படும் குழந்தைகள் நலத் தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. குறைப் பிரசவமும், பிரசவத்தின்போது ஏற்படும் சிகிச்சைகளும் முக்கிய அபாயங்களாகக் கருதப்படுகின்றன. சரியான பயிற்சி பெற்றவர்களின் உதவி இல்லாமல் ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 40 மில்லியன் பெண்கள், பிரசவிக்கும் நிலமையை மாற்ற அரசுகளை அந்த நிறுவனம் கோரியுள்ளது.

இந்த நிலைமையுள்ள மோசமான நாடுகளைச் சுட்டிக்காட்டிய அந்த அமைப்பு, அதில் குறிப்பாக தெற்குச் சூடானில் வாழும் 10 மில்லியன் மக்களுக்கு உதவிபுரிய வெறும் 300 மருத்துவத் தாதிகளே உள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# எங்களுக்கு உணவு தேவையில்லை, உண்மை தேவை!

## மன்னார் ஆயர் கோரிக்கை



எங்களுக்கு உணவு தேவையில்லை, உண்மை தேவை. அதாவது எங்கள் உறவினர்களுக்கும், ஏனைய தமிழர்களுக்கும் என்ன நடந்தது என்ற உண்மை தேவை என மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் திருக்கேதீஸ்வரம் கோயிலுக்கு அருகே புதைக்கப்பட்டிருந்த 80 பேருக்கும் அதிகமானவர்களின் எலும்புக்கூடுகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டமை அனைவரும் அறிந்ததே. அடையாளம் தெரியாமல் இறந்துபோன இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுத்த மன்னார் ஆயர் அவர்கள் அங்கு புதைக்கப்பட்டவர்களுக்கு உண்மையிலேயே என்ன ஆயிற்று என்பதைத் தெரிவிக்க அரசு கடமைப்பட்டுள்ளது என்று வலியுறுத்தினார்.

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போரில் இறந்தோர் மற்றும் காணாமற்போனோர் அனைவரையும் குறித்த உண்மைகளை மக்களுக்குத் தெரிவிக்கும் தார்மீகக் கடமை அரசுக்கு உள்ளதென்றும் மன்னார் ஆயர் தெரிவித்தார்.

### முதலைகுத்தி புனித லூர்து அன்னை கெபியின்
## இருபதாவது ஆண்டு நிறைவு

உயிலங்குளம் பங்கில் அமைந்துள்ள முதலைகுத்தி புனித லூர்து அன்னை கெபியின் இருபதாவது ஆண்டுத் திருவிழா கடந்த 11- 02 -2014 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் மரி டி கோல் தலைமையில் 08-02-2014 அன்று கொடியேற்றத்துடன் இவ்விழா ஆரம்பமாகியது.

நவநாட்களிலும் திருவிழா நாளன்றும் கிளறேசியன் சபையைச் சார்ந்த அருட்பணி. ரூபன் அடிகளார் மறையுரை ஆற்றினார். அத்தோடு திருவிழாத் திருப்பலியை முருங்கன் மறைகோட்ட முதல்வர் அருட்பணி. பீற்றர் மனோகரன் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். அன்னையின் ஆசீரோடு திருவிழா நிறைவுபெற்றது.

லூர்து அன்னையின் முன்னைய இருப்பிடம் மாற்றப்பட்டு புதிய இருப்பிடம் அழகான முறையில் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தகவல் : யோ. டிசாந்தன், முதலைகுத்தி, உயிலங்குளம்

### அன்பிய மத்திய குழுவின்
## வருடாந்த ஒன்றுகூடல்

கடந்த 28-12-2013 சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் மன்னார் மறைமாவட்ட அன்பிய மத்திய குழுவின் வருடாந்த ஒன்றுகூடல், மறைமாவட்ட அன்பிய இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார் தலைமையில் மன்னார் அன்பியத் தொடர்பகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

திரு. தோமஸ் மரியதாஸ் அவர்கள் 2013 நம்பிக்கை ஆண்டில் அன்பிய ஆணைக்குழு மறைமாவட்டப் பங்குகளில் முன்னெடுத்து நிறைவேற்றிய அன்பிய, விவிலியப் பணிகளின் தொகுப்பினை வாசித்தார். இந்நிகழ்வில் நாடகம், பாடல், கவிதை, போன்ற கலை நிகழ்வுகளை அன்பிய மத்தியகுழு உறுப்பினர் வழங்கிச் சிறப்பித்தனர். மறைமாவட்டக் குருமுதல்வர் அன்பிய மத்திய குழுவின் பணி முயற்சிகளைப் பாராட்டி ஆலோசனைகளும் வழங்கி உற்சாகப்படுத்தினார். மத்தியகுழு உறுப்பினர்களுக்கு சில அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன. இறுதியாக திரு. கை டி பொன்கலன் நன்றி உரை வழங்கினார். இரவு 8.30 மணியளவில் அன்பிய எழுச்சிப்பாடலுடன் அன்பிய மத்திய குழுவின் வருட இறுதி கிறிஸ்து பிறப்பு ஒன்றுகூடல் நிறைவெய்தியது.

தகவல்:- D.P.F. ஞானப்பிரகாசம், அன்பியச் செயலர்.

### கன்னாட்டி புனித பிலிப்பு நேரியார் திருச்சுருபக் கட்டிடம்
## புனரமைக்கப்பட்டுத் திறக்கப்பட்டது



அடம்பன் பங்கில் உள்ள துணை ஆலயக் கிராமமான கன்னாட்டிச் சந்தியில் வைக்கப்பட்டிருந்த புனித பிலிப்பு நேரியார் திருச்சுருபம் சென்ற ஆண்டு சில விசமிகளால் களவாடப்பட்டு, கட்டடமும் உடைத்து நொருக்கிச் சேதமாக்கப்பட்டது. இச்செயற்பாடு இப்பிரதேச மக்கள் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியிருந்தது.

கிராம மக்களின் விடாமுயற்சியியுடனும் பங்குத்தந்தையின் அனுசரனையுடனும் வேறு தனிப்பட்ட நபர்களின் உதவியுடனும் மீண்டும் அதே இடத்தில் புதிதாகக் கட்டிடம் அமைக்கப்பட்டு கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி புதிய திருச்சுருபம் ஸ்தாபிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

அன்றைய தினம் அவ்விடத்தில் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது. அடம்பன் பங்கு மக்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்வுகளை அடம்பன் பங்குத்தந்தை அருட்பணி. நியூட்டன் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

### சிறுக்கண்டல் – காத்தான்குளம்
## இளைஞர் உறவுப்பால நிகழ்வு



புதிதாக உருவாக்கப்பட்ட சிறுக்கண்டல் பங்கின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினருக்கும் காத்தான்குளப்பங்கின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினருக்குமான உறவுப்பால நிகழ்வு கடந்த 15.01.2014 அன்று காத்தான் குளப்பங்கில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வானது காத்தான் குளப்பங்குத்தந்தை அருட்பணி வசந்தக்குமார், சிறுக்கண்டல் பங்குத்தந்தை அருட்பணி எமில் எழில்ராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இரு பங்கின் கலைஞர்களது கலைநிகழ்வுகளும், இளைஞர் யுவதிகளுக்கான சினேக பூர்வ கரப்பந்தாட்ட போட்டியும் இடம் பெற்றது. இந்நிகழ்வில் 100ற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் பங்கு பற்றினர்.

கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம், சிறுக்கண்டல் பங்கு.

### முத்தரிப்புத்துறை
## காணிக்கை மாதா திருவிழா





முத்தரிப்புத்துறை புனித காணிக்கை அன்னையின் திருவிழா கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து ஒன்பது நாட்கள் நவநாள் வழிபாடுகள் இடம்பெற்றன. நவநாள் வழிபாடுகளை அருட்பணி. அன்ரனி பெனாண்டோ அடிகளார் நடாத்தினார். வேதாகமத்தை மையமாகக் கொண்டு மனித மாண்பும் குடும்ப வாழ்வும் என்ற மையக்கருத்தின்கீழ் மறையுரைகள் இடம்பெற்றன.

பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட குடும்பப்பணி நிலைய இயக்குனர் அருட்பணி. தேவராஜா கொடுதோர் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இறுதியாக முத்தரிப்புக் கீதம் ஒலிக்க வான வெடிப்புக்கள் வெடிக்க அன்னையின் ஆசீர் பங்குத்தந்தையினால் வழங்கப்பட்டு விழா நிறைவுபெற்றது. இவ்விழா ஒழுங்கமைப்புக்களை பங்குத்தந்தை ஒல்பன் இராஜசிங்கம் அடிகளார் சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

தகவல் - சாள்ஸ் மொறாயஸ்

### எழுத்தூர் பங்கில்
## தவக்காலச் செயற்பாடுகள்

எழுத்தூர் புனித அடைக்கல அன்னை ஆலயப் பங்குப்பணி மனையில் கடந்த 02.03.2014 அன்று பங்குத்தந்தை அருட்பணி. இ. செபமாலை அவர்கள் தலைமையில் பங்கு மேய்ப்புப் பணிச்சபைக் கூட்டம் இடம்பெற்றது. இதில் தவக்காலத்தில் பங்கில் மேற்கொள்ளப்படவுள்ள நிகழ்ச்சிகள் கலந்துரையாடப்பட்டன.

தவக்கால பங்குத் திருச்சிலுவைப்பாதை சித்திரை 11ம் திகதி மாலை 3.30 மணிக்கு தரவன்கோட்டை புனித மிக்கேல் சம்மனசு ஆலயத்தில் ஆரம்பித்து ஜீவபுரம்சந்தி, எழுத்தூர் ஊடாக கீரி கர்த்தர் ஆலயத்தில் திருப்பலியுடன் நிறைவுபெறும்.


சித்திரை 04ம் திகதி நடைபாதை யாத்திரையாக ஓலைத்தொடுவாய் கர்த்தர் ஆலயத்திற்குச் செல்லுதல். காலை 5.00 மணிக்கு எழுத்தூர் புனித அடைக்கல அன்னை ஆலயத்திலிருந்து இப்பாதயாத்திரை ஆரம்பிக்கப்படும்.

### அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான
## வருட இறுதி ஒன்றுகூடல்

கடந்த 17-12-2013, திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 2.30 மணி வரை 4 மறைக்கோட்ட பங்குகளின் பயிற்சிபெற்ற 111 அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான வருட இறுதி ஒன்றுகூடல் வவுனியாப் பங்கின் இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய பங்கு மண்டபத்தில் நடைபெற்றது. இதனை மறைமாவட்ட அன்பிய விவிலிய ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார் ஏற்பாடு செய்து நெறிப்படுத்தினார்.

இவ்வொன்றுகூடலுக்கு வருடாவருடம் வருகை தந்து அன்பிய பணியாளர்களின் சேவையைப் பாராட்டி ஆசீர் வழங்கி வரும் மறைமாவட்ட ஆயர் அவர்கள் பிரதம அதிதியாக பங்கேற்று ஆசீயுரை வழங்கி, அன்பிய பணியாளர்களின் சேவைகளைப் பாராட்டினார். இவ்வொன்றுகூடலில் 2013ம் ஆண்டில் அன்பிய ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்ட நம்பிக்கை ஆண்டை யொட்டிய பணிகள், காணொளி வழியாகக் காட்சிப்படுத்தப்பட்டன. பங்குபற்றிய மறைமாவட்ட 25 பங்குகளும் (கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி செய்தி அடங்கிய நிகழ்ச்சிகளை) கவிதை, பாடல், நாடகம், நடனம், வில்லுப்பாட்டு, போன்ற நிகழ்ச்சிகளாக வழங்கி தமது ஆற்றலை வெளிப்படுத்தினர்.

### மடு அன்னையின் ஆதி இருப்பிடமான
## மாந்தை மாதா திருவிழா



மடு அன்னையின் ஆதி இருப்பிடமான மாந்தை லூர்து மாதாவின் திருநாள் கடந்த பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி புதிதாக அமைக்கப்பட்டுவரும் ஆலயத்தின் முன்றலில் இடம்பெற்றது. பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இவ்விழாவின் ஆயத்த நாட்களை வெவ்வேறு பங்கு மக்கள் வருகைதந்து சிறப்பித்தனர்.

அருட்பணி. ஆர். அகஸ்ரின் தலைமையில் தாழ்வுபாடு பங்கு மக்கள், அருட்பணி. எஸ். ஸ்ரீபன்ராஜா தலைமையில் பள்ளிமுனை பங்கு மக்கள் ஆகியோர் ஆயத்த நாள் வழிபாடுகளில் கலந்து சிறப்பித்தனர். அருட்பணி. எஸ். ஜெயபாலன் தலைமையில் வந்திருந்த வங்காலைப் பங்கு மக்கள் நற்கருணை நாளைச் சிறப்பித்தார்கள். குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை நற்கருணைப் பவனிக்குத் தலைமை தாங்கினார்.

பெப்ரவரி 16ஆம் திகதி காலை 7.00 மணிக்கு இடம்பெற்ற திருவிழாத்திருப்பலியை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இவ்விழாவில் மண்ணின் மைந்தர்களான அருட்பணியாளர்கள் எல். ஞானாதிக்கம், அருட்பிரகாசம், எமில் எழில்ராஜ் ஆகியோரும் பங்கெடுத்தனர்.

இவ்விழாவின்போது ஆலயக் கட்டிட நிர்மாண வேலைகளுக்கு உதவிசெய்யும் நோக்கத்துடன் கற்களை மக்கள் அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. திருவிழாத் திருப்பலியின் நிறைவில் பக்தர்களுக்கு தாகசாந்தியும் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு காலை உணவும் வழங்கப்பட்டது. போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அடம்பன் பங்குத்தந்தை அருட்பணி. நியூட்டன் அவர்கள் இவ்விழாவிற்கான ஏற்பாடுளை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

தகவல் : சவேரியான், மாளிகைத்திடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மாண்பும் குடும்ப வாழ்வும்

கரவையூர்ச் செல்வம், அ.ம.தி. வவுனியா

**சென்ற மாதத் தொடர்ச்சி**

ஒருவருடைய நன்மைகளை, செயல்திறனை, வெற்றிகளைப் பாராட்டுதல் அவசியம். உறவுகளை வளர்க்கப் பாராட்டுதல், தட்டிக்கொடுத்தல், அவருடன் - அவளுடன் இணைந்து அவனுடைய - அவளுடைய மகிழ்வில் மகிழ்வது உறவை மேலும் வளர்க்கத் துணைசெய்கின்றது. இப்படிப்பட்ட சூழலில்தான் அன்பு வளருகின்றது. துவக்ககாலக் கவர்ச்சி அன்பாக மாறும். அன்றேல் கவர்ச்சி காய வெறுப்புணர்ச்சி வளரும். எவ்வளவு அன்பாக இருந்தாலும் ஒருவர் ஒருவருடைய தனித்துவத்தை மதித்து அதற்கு இடமளிப்பது மிக அவசியம். எந்த ஓர் உறவிலும் ஓர் இடப்பரப்பு (Space) தேவை. இந்த இடப்பரப்பு ஒரு தனிப்பட்ட மனிதனின் - மனுசியின் புற - அகத் தேவை. இதை மதிக்க வேண்டும். அப்போதுதான் அங்கு மனித மாண்பு மதிக்கப்படும்.

இத்தனையும் நடக்குமென்று திருமணத்தின் முன்னரே எதிர்பார்ப்பது யதார்த்தமாகாது. ஆனால் ஓரளவு பகிர்தல், ஒருவரைப்பற்றிய அறிவு, ஒருவரில் ஒருவர் நம்பிக்கை போன்றவை அவசியம். திருமணத்தன்று பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர் முன்னிலையில், குருவின் முன்னிலையில், இறைவனின் முன்னிலையில் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்வது திருமண வாழ்வின் நீண்ட பயணத்தில் முதல்படி என்று துணியலாம். இந்த "ஏற்றுக்கொள்ளுதல்" ஒரு படிமுறையாக வளரவேண்டும். ஆழப்படுத்தப்பட வேண்டும். அங்குதான் குடும்பம் உருவாகும்; மாண்பு மதிக்கப்படும்.

பெற்றோரின் விருப்புக்காக, உறவினரின் தேவைக்காக, பணத்திற்காக, பதவிக்காக, சீதனத்திற்காகத் திருமணம் செய்வோர் இப்படிப்பட்ட ஒரு படிமுறையில் வளரமாட்டார்கள். பிரச்சினைகள் உருவாகும்; உறவுகள் அழியும்; நாயும் பூனையுமாகச் சண்டை பிடிப்பார்கள். இவை சீர்குலைந்த குடும்பங்கள்! இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் கருவிலும், பிறப்பிலும், வளர்ப்பிலும், வாழ்விலும் பாதிக்கப்படுவார்கள் என்பதில் இன்று இரு கருத்துக்கள் இல்லை.

## இயக்காற்றல்

இருவர் இணைந்த வாழ்வில் இயக்காற்றல் இயல்பாகவே உண்டு. இருவர் ஒன்றுகூடும்பொழுது ஒருவரொருவருடைய செயல், நடத்தை மற்றவரில் எதிர்ச்செயலை, எதிர்நடத்தையை கொணர்கின்றது. இதில் அடிமன (Unconscious) அசைவுகள் பெருமளவில் பங்குகொள்கின்றன. உ+ம் ஒருவரின் நடக்கும் பாணி மற்றவரில் ஒரு எரிச்சலைக் கொணர்கின்றது. ஏன்? புறத்தூண்டுதலுக்கு எதிரான எதிரியக்கம். இதனால் பலவகையான பிணக்குகள், சச்சரவுகள், முரண்பாடுகள் உருவாகின்றன.

அடக்குமுறைகள் குடும்பங்களிலேயே ஆரம்பிக்கின்றன. கணவனின் ஆட்சியில் மனைவி அடிமை! பல குடும்பங்களில் பெண் ஆளுமையை அவதானிக்க முடியும். இங்கு கணவன் அடிமை (Petticoat Governent)! நானறிய ஒரு மகள் தன் தாய்க்குச் சொன்னாள், "அப்பாவை நீங்கள் உங்கள் சின்ன விரலில் சுற்றிவைத்துள்ளீர்கள்" இப்படிப்பட்ட சூழல்களில் உண்மையான உறவுகள் வளரா. மனித மாண்புகள் மறையும். இருவரிடையே இவ்வளவு இயக்காற்றல் இருக்குமாயின், குழந்தைகள் பிறக்கும்பொழுது இந்த இயக்காற்றல் சிக்கலாகின்றன. இவற்றை உணராதவர்கள் இச்சிக்கலில் சிக்கி பிரச்சினைகளை மேலும் வளர்க்கின்றார்கள்.

## எங்கள் கதைகள்

எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கதையுண்டு. கர்ப்பத்தில் ஆரம்பித்த இந்தக் கதை தொடர்கின்றது. இக்கதையில் பல்வேறுபட்ட அனுபவங்கள் பாதிப்புக்கள், தீர்க்கப்படாத பிரச்சினைகள், வெளிப்படுத்தாத தாக்கங்கள், தோல்விகள், பாராட்டுப்பெறாத வெற்றிகள், அன்பை அனுபவிக்காத வாழ்க்கையின் நோவுகள், நிறைவேறாத கனவுகள், விடிவைக்காணாத இருள்கள் என்று எனது கதை வளர்ந்திருக்கும். திருமணத்தின்பொழுது இரண்டு கதைகள் சந்திக்கின்றன. ஆனால் கதைகள் பகிரப்படுவதில்லை. மௌனத்தில் அனுபவிக்கும் நோவுகள், புரிந்துணர்வில்லாத புதிய நோவுகள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகின்றன. கணவன் யார் என்று மனைவிக்குத் தெரியாது. மனைவி யாரென்று கணவனுக்குத் தெரியாது. குழந்தைகளுக்கு தெரியாது. புறத்தில் பார்க்கும் நடத்தைகளை குணாதியங்களை மட்டுமே அறிவார்கள். இதை 'இருட்டறை உறவுகள்' என்று கூறுவேன். முகமூடிகள் போடப்பட்ட குடும்ப வாழ்வு சிக்கல் நிறைந்தது. மௌனத்தில் கண்ணீர், வேதனை! கோடிக்கணக்கான குடும்பங்களில் கணவன், மனைவி ஏன் பிள்ளைகள்கூட மௌனத்தில் கண்ணீர் வடிக்கின்றார்கள். இது குடும்ப வாழ்வா? இங்கெல்லாம் மனித மாண்பு தேய்கின்றது.

## குடும்பப் படிவங்கள் (Family Patterns)

தந்தையோடும் தாயோடும் நான் கொண்ட உறவுமுறைகள் இப்படிவங்களை உருவாக்குகின்றன. இந்த உறவுமுறைகள் திருமணத்தில் எதிரொலிக்கின்றன. இங்குதான் அடிமன அசைவுகள் இடம்பெறுகின்றன. உ+ம் தந்தையில் வைத்த நம்பிக்கைக்குத் தந்தை துரோகம் செய்தால், அவருடைய மகள் திருமணத்தில் கணவனில் நம்பிக்கைவைக்கத் தயங்குவாள். உணர்வு ரீதியான உறவொன்றை மகள் தாயிலும், தாய் மகளிலும் வைக்கவில்லையென்றால் அவள் மனைவியாக கணவனில் உணர்வு ரீதியான உறவை வளர்க்கத் தயங்குவாள்.

இவ்விடத்தே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். நீண்டகாலப் போரின் சூழலில் பிறந்து வளர்ந்தவர்கள், பதுங்குகுழிகளில் பிறந்த பயத்துடன் வளர்ந்தவர்கள், நெடுநாட்களாக அகதி முகாம்களில் வளர்ந்தவர்கள், பல இடப்பெயர்வுகளுக்கு ஆளாகியவர்கள்.... அவர்களெல்லாம் என்னென்னவெல்லாம் திருமணத்திற்கு கொண்டுவருவார்கள் என்பது ஒரு பெருங் கேள்வி. யாராவது கேட்கிறார்களா?



அந்த முழு வகைமுறையையும் சீர்குலைக்கும் இந்தக்கூற்றை குடும்பம் என்ற வகைமுறைக்கு முழுமையாகப் பொருத்தலாம். ஒரு குடும்பத்தில் ஒருவருடைய வாழ்க்கை சீர்குலையுமானால், அது அந்தக் குடும்பத்தையே சீர்குலைக்கும்.

இருவர் திருமணத்தில் இணையும்பொழுது அந்தப் பந்தத்தில் மறைமுகமாக இன்னமும் நான்கு பேர் புகுந்துவிடுகின்றார்கள்! அதிசயப்படுகின்றீர்களா? கணவனின் பெற்றோர், மனைவியின் பெற்றோர் என நான்கு பேர்! இருவர் இணைந்த திருமணம் என்று புறத்தில் தோன்றினாலும், உண்மையில் ஆழ உளவியலின்படி (Depth Psychology) ஆறு பேர் அந்த உடன்படிக்கையில் சந்திக்கிறார்கள். கையெழுத்துப்போட்டவர்கள் இருவர்; கையெழுத்துப்போடாதவர்கள் நான்கு பேர்.

மனைவி தனது பெற்றோருடன் அனுபவித்த உறவு முறைகள், அதனால் ஏற்பட்ட அனுபவங்கள் (நல்லவையும், நோவுகளும்) திருமண உறவில் தெரிந்தோ தெரியாமலோ (பெரும்பான்மையும் அடிமன அசைவுகளாக - ஆகவே தெரியாமல்) வந்துவிடுகின்றன. கணவனின் நிலைப்பாடும் அதுவே. திருமண வாழ்வின் பல்வேறு சிக்கல்களுக்கு இவை அடித்தளம்.

குழந்தைகள் பிறந்துவிட்டால் ஏற்கனவே தீர்க்கப்படாமல் இருந்த சிக்கல்கள், இடியப்பச் சிக்கல்களாக பின்னிப்பிணைந்து குடும்ப வாழ்வை சின்னாபின்னமாக்கிவிடும். இங்கெல்லாம் மனித மாண்பு எங்கே?

"ஒரு நாடு தனது கடந்த காலத்தோடு ஒப்புரவாகவில்லை என்றால், அந்த நாடு நிகழ்காலத்திலோ எதிர்காலத்திலோ தனது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது" (சொல் செனிஸ்ரல்) இக்கூற்று தனி மனிதனுக்கும் மனுசிக்கும் பொருந்தும்.

## இரு வாழ்க்கைமுறை உந்துதல்கள் (True Life forces)

குடும்ப வகைமுறை (Family System) கோட்பாட்டின்படி (பரவலான ஆய்வுகளின் முடிவு) - மனித வாழ்க்கையில் இரு உந்துதல்கள் உண்டு. ஒன்று உணர்வு ரீதியான இணைதல் (Emotional Closeness) இரண்டு தனியாகுதல் (Self Differentiation). இந்த இரு உந்துதல்களும் இரு வேறுபட்ட திசைகளில் வாழ்வை உந்துகின்றன. அதனால் வாழ்வில் தொடர்ச்சியான ஒரு பதட்டம். (Tenision / Anxiety) இந்தப் பதட்டத்தைச் சமாளிப்பதற்கு, சமநிலைப்படுத்தி வாழ்வதற்கு நிறையச் சக்தி தேவைப்படுகின்றது. ஆனால் சமநிலைப்படுத்தி வாழும்பொழுது மனித வளர்ச்சி, ஆரோக்கியமான வாழ்வு மலர்கின்றது. முதலில் இந்த இரு உந்துதல்களையும் சிறிது விரிவாகப் பார்ப்போம்.

## இணைதல்

உணர்வு வழியாக உறவுகளை உருவாக்கி, ஒருவரோடு ஒருவர் இணைந்து வாழ ஓர் இயல்பான உந்துதல். உ+ம் தாயின் வயிற்றில் தாய்க்கும் சேய்க்கும் ஓர் இணைப்புத் தேவையானது; அவசியமானது. ஆயினும் அப்படியே இருந்துவிட முடியாது. காலம் வரும்பொழுது, சேய் தாயின் வயிற்றில் இருந்து பிரிந்து - வேறாகி ஒரு குழந்தையாகப் புறத்தில் பிறக்க வேண்டும். இப்பிறப்பில் நோவுண்டு; நோவின் முடிவில் மகிழ்வுண்டு.

**தனியாகுதல்:** தாயின் வயிற்றில் இருந்து சேய் ஒரு தனிப்பிறவியாகப் பிறப்பதுதான் தனியாகுதல். வெளியில் பிறந்த குழந்தை தனது தொடர்வளர்ச்சிக்கு மீண்டும் தாயுடன் இணைவது அவசியம். பாலூட்டலில், அரவணைப்பில் குழந்தை மீண்டும் இணைகிறது. ஆயினும் வாழ்க்கைபூராக அவ்வாறு இருந்துவிட முடியாது. அது குழந்தையின் வளர்ச்சிக்குத் தடையாகும். தொட்டிலில் தனியாக இருப்பது ஆரோக்கியமானது. அந்தப் பிரிவு நோவாக இருப்பினும் வாழ்க்கையின் வளர்ச்சிக்கு அவசியம். இணைதலும், பிரிதலும், தனியாகுதலும் வாழ்க்கைபூராக நடக்கத்தான் வேண்டும்.

## பதட்டத்தின் விளைவுகள்

பதட்டத்தின் விளைவுகள் என்று கூறுவதைவிட, பதட்டத்தைச் சமநிலைபடுத்த முடியாமையினால் வரும் விளைவுகள் என்பது பொருத்தமாகும். அதாவது இரு வேறுபட்ட ஆளால் தேவையான உந்துதல்களைச் சமநிலைப்படுத்தி வாழ நிறையச் சக்தி தேவை. சமநிலைப்படுத்த முடியாமையினால் அன்றேல் இயலாமையினால் ஓர் உந்துசக்தியை மிகைப்படுத்தி மற்றயதை ஓரம் கட்டுவோமானால் ஆரோக்கியமற்றநிலை ஏற்படும்.

உதாரணமாக இணைதலை மிகைப்படுத்தி உணர்வு இணைதலில் ஒருவரில் சார்ந்து வாழ – தங்கி வாழ ஏற்படும். முரணாக இணைந்து வாழப் பயந்து, பின்வாங்கி தற்சார்புடையவராக தனித்தியங்க முற்படுவது தன்னிச்சை வாழ்வாக மாறிவிடும். ஒன்று (இணைதல்) சார்புடமையாக, பிறரை எதிர்நோக்கி வாழும் வாழ்க்கை. மற்றொன்று (தனியாகுதல்) தற்சார்புடமையாக தனித்தியங்கும் வாழ்வாக மாறும்.

சார்புடமை - அடிமை வாழ்வு; தற்சார்புடமை ஒரு மாயை. மூன்றாவதொன்றும் உண்டு. அதை நான் 'உடன் சார்புடமை' (Co-dependency) என்று கூறுவேன். இருவர், ஒருவர் ஒருவரில் எதிர்நோக்கி – சார்புடமையாக வாழ்தல். இது இன்றைய உளவியலில் ஒரு நோயாகக் கணித்துள்ளார்கள். "என்னுடைய மகிழ்ச்சிக்கு நீதான் வேண்டும்" என்ற நிலைப்பாடுதான் உடன் சார்புடமை.

Dependency - சார்புடமை, பிறரை எதிர்நோக்கி வாழ்தல் - அடிமை.

In dependency – தற்சார்புடமை, தனித்தியங்கும் நிலை – மாயை.

Co –Dependency – உடன் சார்புடமை - நோய்.

அப்படியாயின் ஆரோக்கியமான வாழ்வு என்றால் என்ன என்ற ஒரு கேள்வி எழலாந்தானே?

## ஒன்றையொன்று பின்னிச் சார்ந்த நிலை (Inter Dependncy)

நீ எனக்கு வேண்டும். நான் உனக்கு வேண்டும். நீ - நான் என்ற உறவில் நீ வளர வேண்டும். நானும் வளர வேண்டும். உனது தனித்துவத்தை நீ மதிக்க வேண்டும்: நானும் வளர வேண்டும். உனது தனித்துவத்தை நானும் மதிக்க வேண்டும். எனக்கு வேண்டிய இடவெளியை - இடப்பரப்பை (Speace) நீ விட்டுதர வேண்டும். உனக்கு வேண்டிய இடப்பரப்பை நான் உனக்கு விட்டுக்கொடுக்க வேண்டும். நீ வளர நான் வளர்வேன். நான் வளர நீ வளர வேண்டும். உனது வாழ்க்கைப் பயணத்தில் நான் துணையாவேன். எனது வாழ்க்கைப் பயணத்தில் நீ துணையாக வேண்டும். உனது ஆன்மீகப் பயணத்தில் நான் பயணிக்க நீ துணை வரவேண்டும்." இதை நான் 'உடன் பயணி' (Co –Dependency) என்று அழைப்பேன்.

இல்லற வாழ்க்கை சிறப்பாக மலரும்பொழுது இன்னுமோர் படி மேல்சென்று "எனது வாழ்க்கை இலட்சியம் கண்டு நான் செல்ல, நீ என்னை விட்டுவிட வேண்டும். நீ காணும் இலட்சியம் கண்டு நீ செல்ல நான் உனக்கு விட்டுக்கொடுக்க வேண்டும்." ஒன்றையொன்று பின்னிச் சார்ந்த நிலையின் உச்சக் கட்டம் இது என்று நான் துணிவேன். இங்கு மனித மாண்பு சிறப்புறுகின்றது; ஆன்மீக வாழ்வொன்று மலருகின்றது.

**முடிவாக**

கட்டுரை ஏற்கனவே நீண்டுவிட்டது. ஆயினும், குடும்ப வாழ்வு பற்றிய அனைத்துச் செய்திகளையும் நான் இங்கு தரவில்லை. ஆனால் இக்கட்டுரையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். எனது வாழ்க்கைக்கு நான்தான் பொறுப்பு. இவ்வாழ்க்கையில் ஏற்படும் நன்மை தீமைகளுக்கும் ஏற்றத்தாழ்வுகளுக்கும் நான்தான் பொறுப்புக் கூறவேண்டும். "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" (குறள் 502) என்று வள்ளுவன் குறள் பாடினான். எனது வாழ்க்கையை நெறிப்படுத்தி ஓர் இலட்சியம் கண்டு, அதை நோக்கி வாழ்வது என்னிலேதான் தங்கியுள்ளது. தேவை ஏற்படும்பொழுது நண்பர்களிடமும், பெரியோர்களிடமும், ஞானிகளிடமும் உதவி கேட்பது பலவீனம் அல்ல, பலம். அங்குதான் மனித மாண்பு மதிக்கப்படுகின்றது.

எனது பெற்றோரிடம் நான் இழந்தவற்றை, எனது இன்றைய உறவுகளால் நான் மீளப் பெறமுடியும். கடந்த கால நோவுகளுடன், பாதிப்புகளுடன் நான் இன்று வாழவேண்டிய அவசியம் இல்லை; தேவையும் இல்லை. வேண்டாத சுமைகளை நான் ஏன் சுமக்க வேண்டும்? வாழ்வில் மாற்ற முடியாதது எதுவும் இல்லை. குணப்படுத்த முடியாதது எதுவும் இல்லை. குணப்படுத்த முடியாத உடல் உள நோய்கள் இருப்பினும் அவற்றைச் சமாளித்து ஏற்று வாழவும் என்னகத்தே சக்தியுண்டு. வாழ்ந்தவர்கள் பலர் காட்டியுள்ளார்கள். வாழ்வில் மாற்றத்தை கொண்டுவரத் தடுப்பது மறுப்பின் பிரதிபலிப்பு.

1. கணவன், மனைவிக்கு இடையிலான உறவுதான் உலகில் எல்லா உறவுகளிலும் முதன்மையானது என்பதை செயல்களால் உறுதிப்படுத்துங்கள். வேறு எந்த உறவும் இந்தத் திருமண உறவுக்குத் தடையாய், இடையூறாய் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
2. உங்கள் துணையை புரிந்துகொள்ள அனைத்தையும் அவரவர் இடத்திலிருந்து, அவரது கோணத்திலிருந்து பார்க்க முயல்வது அவசியம்.
3. வாக்குவாதம் ஏற்படுகின்ற பிரச்சினைகளில் ஒருவர் மற்றவரை ஜெயிக்கவிட்டு மகிழ்ச்சியடையுங்கள், விட்டுக்கொடுப்பவர்கள் கெட்டுப்போவதில்லை ஒருபோதும்.
4. ஒரே சமயத்தில் கணவன், மனைவி இருவருமே கோபப்படாதீர்கள். விமர்சனத்தையே வாஞ்சையுடனும், அன்புடனும் செய்துபாருங்கள்.
5. கடந்தகாலத் தவறுகளைச் சுட்டிக்காட்டாதீர்கள், செய்த தவறை உணரும்போது அதை ஒத்துக்கொள்ளவும் அல்லது அதற்காக மன்னிப்புக் கேட்கவும் தயங்காதீர்கள்.
6. மிகுந்த கவனத்தோடும், பொறுமையோடும் வாழ்க்கைத் துணையைத் தேடுங்கள். அன்பார்ந்த, நல்ல விழுமியங்கள் கொண்ட பொருத்தமான நபரை வாழ்க்கை என்னும் நீண்ட நெடிய பயணத்தின் துணையாக தேர்ந்தெடுங்கள்.
7. வாழ்வு கடவுளின் கொடை என்பதை உணர்ந்து அதனை தற்காத்துக்கொள்ளும்படி பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்.

**வாழ்வோம்! வாழவிடுவோம்! மனித மாண்பை மதிப்போம்! அனைவரும் வளர்வோம்!** (முற்றும்)

## நாட்டு நடப்புக்கள் .....

### ஒரு நாளில் ஆறு பெண்கள்மீது இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகம்


**பாராளுமன்ற பெண்கள் அமைப்பு**

ஒரு நாளில் 6 பெண்கள் இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவர்களில் 4 பேரில் மூவர் 13 வயதுக்குக் குறைவான சிறுமிகள் என்று பாராளுமன்ற பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பெண்களுக்கு எதிராக 33,000 குற்றங்களும் பிள்ளைகளுக்கு எதிராக 24,000 குற்றங்களும் பதியப்பட்டுள்ளன. ஆனால் 617 பேர் மட்டும்தான் தண்டனைகளை அனுபவிக்கின்றனர் என்று அவ்வமைப்பின் உறுப்பினர் ரோசி சேனநாயக்க தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் முதற் தடவையாக
# தேசிய துறவறத்தார் தினம்



இலங்கையில் வாழும் மற்றும் பணியாற்றக்கூடிய துறவறத்தார் அனைவரும் **"ஒன்றிணைந்த மாற்றத்தின் சக்தியாக"** ஒன்றுகூடும் நாளாக கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி அமைந்திருந்தது. செபிப்பதற்கும், தியானிப்பதற்கும் மற்றும் கொண்டாடுவதற்குமான நாளாகவும் இது திகழ்ந்தது. இலங்கைத் திருச்சபை வரலாற்றில் முதல் தடவையாக தேசிய துறவறத்தார் தினம் கொண்டாடப்பட்டது.

**கருப்பொருள் : "இன்றைய சூழமைவில் அன்னை மரியாவின் இறைவாக்கினர் பணி"**

திருச்சபையின் வரலாற்றில் துறவற சபைகளின் தனிவரங்கள் எப்பொழுதும் அதன் புனிதத்தன்மையிலும், பணிவாழ்விலும் ஆரோக்கியமான மாற்றங்களைத் திருச்சபையின் வளர்ச்சிக்காக, காலத்தின் தேவைகளுக்கேற்ப, உருவாக்குகிற சக்தியாகவே இருந்துவருகிறது.

இவற்றை நாங்கள் புனிதர்களான பெனடிக்ட், பிரான்சிஸ், இக்னேசியஸ் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றில் காணக்கூடியதாக இருக்கிறது.

**துறவறத்தார் நிலைபற்றித் திருத்தந்தை பிரான்சிஸ்**

திருத்தந்தை பிரான்சிஸ் உலகிலுள்ள அனைத்துத் துறவற சபைகளின் முதல்வர்களைச் சந்தித்து உரையாடுகையில் 2015ம் ஆண்டை துறவற வாழ்வின் ஆண்டாக அர்ப்பணித்துள்ளதாக அறிவித்தார்.

துறவற வாழ்வைத் தேர்ந்தெடுத்தவர்கள் உலகை விழிப்படையச் செய்யவேண்டும். உலகின் பணித்தளங்களுக்குச் சென்று இறைவன் வெளிப்படுத்தியவாறு கூடுவிட்டுப் பறந்து சென்று சேவை செய்யவேண்டும். இதுவே இறைவனைப் பின்பற்றச் சிறந்தவழி. துறவிகள் தமது உதவியாளர்கள் அல்ல என்பதை ஆயர்கள், குருக்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

ஒவ்வொரு துறவற சபையும் தத்தம் தனிவரத்திற்கேற்ப தங்களது பணித்தளங்களைத் தெரிவுசெய்யவேண்டும். கல்விப் பணியில் ஈடுபடும் ஒவ்வொரு துறவற சபையும், கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து பணியாற்றவேண்டும்.

கல்வி என்பது அறிவின், முறைமையின், விழுமியங்களின் பரிமாற்றமாகும். இதன் வழியாக நாம் விசுவாசத்தையும் பகிர்கின்றோம். கல்விபுகட்டும் ஒவ்வொருவரும் தங்கள் கற்பித்தலின் மூலம் எவ்வாறு கிறிஸ்துவை இந்த மாறிவரும் தலைமுறையினருக்கு அறிவிக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

குருமட மாணவர்களை நெறிப்படுத்துவதென்பது ஒரு கலை. அது ஒரு காவல்துறை வேலையன்று. எவ்வாறு கனிந்த இதயமுள்ள துறவிகளை உருவாக்கவேண்டும் என்கின்ற இலக்கே முக்கியமானதாகும்.

**இலங்கையில் துறவறசபைகள் சில தரவுகள் :**

| | |
|---|---|
| **1. மொத்தத் துறவற சபைகள்** | **57** |
| - குருக்களுக்கான துறவறசபைகள் | 17 |
| - அருட்சகோதரர்களுக்கான துறவற சபைகள் | 04 |
| - அப்போஸ்தலிக்க அருட்சகோதரிகளுக்கான சபைகள் | 31 |
| - தியான அருட்சகோதரிகளுக்கான சபைகள் | 05 |
| **2. மொத்தத் துறவற சபை அங்கத்தவர்கள்** | **3,363** |
| - துறவற குருக்கள் சபை அங்கத்தவர்கள் | 705 |
| - துறவற அருட்சகோதர சபை அங்கத்தவர்கள் | 130 |
| - மொத்த ஆண் துறவறத்தார் | 835 |
| - அப்போஸ்தலிக்க அருட்சகோதரிகள் துறவற சபை அங்கத்தவர்கள் | 2331 |
| - தியான அருட்சகோதரிகள் துறவற சபை அங்கத்தவர்கள் | 197 |
| - மொத்த பெண் துறவறத்தார் | 2528 |
| **3. மறைபரப்புப் பணிக்காகத் துறவற சபைகளினால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட இலங்கைத் துறவறத்தார்** | **297** |
| - துறவறக் குருக்கள் | 48 |
| - துறவற சகோதரர்கள் | 8 |
| - மொத்தம் | 56 |
| - அப்போஸ்தலிக்க துறவற சகோதரிகள் | 233 |
| - தியான துறவற சகோதரிகள் | 8 |
| - மொத்தம் | 241 |

**இலங்கையில் துறவறசபைகளின் ஒருங்கமைப்பு**

இலங்கையில் பணிபுரியும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான துறவறசபைகள் தத்தமது தனிவரங்களினூடாகத் திருச்சபையில் பல்வேறு இடங்களில் பலவித பணிகளைச் செய்துவருகின்றனர். இவை தனித்தனி துறவற சபைகளாயிருந்தாலும் துறவற சபைகளுக்குரிய பொதுத் தன்மையைக் கொண்டும் ஒன்றிணைந்தும் செயற்படுகின்றனர். இவ்வாறான ஒருங்கிணைந்த செயற்பாடுகளைத் துறவற சபைகளின் அதியுயர் அதிபர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட அமைப்பு வழிகாட்டி வருகின்றது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## வவுனியாக தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி
# மணிவிழா நாயகன் திரு. க. பேணாட் அவர்கள்

திருமதி. அன்ரனி நெலோமி,
விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



முப்பது வருடங்களுக்கும் அதிகமான கல்விப்பணிச் சேவையில் இருபது வருடங்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் சேவையாற்றி, குறிப்பாக பதினொரு வருடங்கள் பீடாதிபதியாகவும் தனிமுத்திரை பதித்து 02 மாசி 2014 இல் மணிவிழா நாயகனாக ஓய்வுபெற்றிருக்கும் திரு க. பேர்ணாட் அவர்களை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம்.

அவரைக் கௌரவிக்கும் முகமாக வவுனியா கல்வியியற் கல்லூரிச் சமூகத்தால் மேற்கொள்ளப்பட்ட மணிவிழா கௌரவிப்பு நிகழ்ச்சியும், அவரை நன்கு அறிந்தவர்களால் எழுதப்பட்ட அவர் தொடர்பான பிரதிபலிப்புக் குறிப்புகள் அடங்கிய "பேரார்வம்" என்னும் நூலும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

உலகில் வாழும் மனிதர்கள் தாம் வாழும் சமூகத்திற்கு வழங்கிய சேவையைப் பொறுத்தே வரலாற்றில் மதிக்கப்படுகின்றனர். இங்கு கல்வி உலகில் காத்திரமான காலடித்தடத்தைப் பதித்திருக்கும் திரு. பேர்ணாட் அவர்கள் வாழ்ந்த சாதனை வாழ்க்கை, கல்விச் சமூகத்திற்கு ஒரு முன்னுதாரண வாழ்க்கையாகும்.

நெடிய மெலிந்த தோற்றம், ஆழமான பார்வை, இராணுவ வீரன் ஒருவரின் மிடுக்குக் கம்பீரம், நேர்த்தியான உடை, சிரிப்பதற்கு சற்று யோசிக்கும், சிரித்தால் நெஞ்சுக் கூட்டைத் திறந்து சுதந்திரப்பறவை பறப்பதுபோல... அவர்தான் பேர்ணாட்! பிறந்தோம் வாழ்ந்தோம் என்று வாழ்வது வாழ்க்கையல்ல, இப்படித்தான் வாழ வேண்டும் என்று கோடிட்டு வாழ்ந்து காட்டிய வரலாற்று வாழ்க்கை அவருடையது. தனிப்பட்ட வாழ்க்கையையும் பொது வாழ்க்கையையும் செவ்வனே வாழத் தலைப்பட்டு அதில் வெற்றியும் பெற்றவர்.

திரு. தமியான் கயித்தான் அவர்களுக்கும், திருமதி. லூக்காஸ் சூசானம் அவர்களுக்கும் 1954 இல் மகனாகப் பிறந்தார். யாழ் இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து 1981ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணி பொது நிதியும் வரிவிதிப்பும் (சிறப்பு) பிரிவில் இரண்டாம் வகுப்பில் உயர் சித்தியைப் பெற்று பட்டதாரியாக வெளியேறினார். தனது கிராமத்தின் முதல் பட்டதாரியாகவும், அதைத் தொடர்ந்து சிறந்த கல்விமானாகவும், கல்வித்துறையில் உயர் பதவி வகித்தவருமாக இன்றுவரை திரு. பேர்ணாட் அவர்கள் முன்னணியில் நிற்கின்றார் என்பது அவரும் அவரைச் சார்ந்தவர்களும் பெருமைப்படக்கூடிய விடயமாகும்.

கல்விச்சுவை கண்ட எவராலும் ஒரு பட்டத்தோடு மட்டும் நின்றுவிட முடியாது. அவர்களின் தேடலும் தேவையும், கல்விப்பற்றும் விரிவடைந்து செல்கின்றன. தொடர்ந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை கொழும்பு பல்கலைக்கழகத்தில் முடித்து அதிசிறப்புச் சித்தியடைந்தார், கல்வி முதுமாணிப்பட்டத்தை அவுஸ்திரேலியாவில் வூலோங்கன் பல்கலைக்கழகத்தில் சிறப்பாகப் பூர்த்திசெய்துகொண்டார்.

அவரின் ஆற்றலும் அறிவும் மேலும் கற்பதற்கான வாய்ப்புகளைப் பெற்றுத்தந்தாலும் 1993இல் அவரை இழுத்துக்கொண்ட வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி அவரை முற்றுமுழுதாகவே தன்வசப்படுத்திக்கொண்டது. அவருடைய வாழ்க்கை கல்லூரியாகியது. அது அவரின் இன்னொரு வீடுபோலாயிற்று என்றும் பிறர் கூறுவர். அவரது கற்றலுக்கும், தேடலுக்கும், தேர்ச்சிக்கும் கல்வியியற் கல்லூரியே களமாகி நின்றது.

வடமாகாணத்தில் சிறந்த கல்வியியற் கல்லூரியாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி திகழ்வதற்கான காரணத்தை தேசிய கல்வியியற் கல்லூரிகளின் முன்னைநாள் பிரதான ஆணையாளர் கே. மொகமட் தம்பி அவர்கள் பின்வருமாறு பட்டியல்படுத்துவார்,

- சிறந்த தலைமைத்துவம்
- சிறந்த ஆசிரிய கல்வியியலாளர் அணி
- சிறப்பான நிர்வாகம்
- சிறந்த ஆசிரிய மாணவர்கள்
- அணியாக இயங்கும் கல்விசார், கல்விசாரா அணியினர்
- அனைத்திற்கும் மேலான இனம், மதம், மொழிமீதான பற்று.
- கல்வியமைச்சின் எதிர்பார்ப்புகளை செவ்வனே நிறைவேற்றும் செயல்முனைப்பு என்பனவாகும்.

இவ்வகையில் க. பேர்ணாட் அவர்கள் செயற்றிறன் மிக்க ஒருவராக இனங்காணப்பட்டுள்ளார். ஒரு உண்மையான பணியாளன் எப்படி இருப்பான்? ஒரு சிறந்த நிர்வாகியின் நடத்தை எப்படி இருக்கும்? ஒரு ஊக்குவிப்பாளனின் இயல்புகள் என்ன? இலட்சியவாதி ஒருவர் எப்படி நடந்துகொள்வார்? என்பதற்கான ஒரு உதாரண நபரைக் காட்டுங்கள் என்று கேட்டால் தயங்காமல் திரு. பேர்ணாட் அவர்களைச் சுட்டிக்காட்டிவிடலாம்.

ஆரம்ப காலங்களில் உதவிக்கணக்காளர், பட்டதாரி ஆசிரியர், உதவிக் கல்விப்பணிப்பாளர் எனும் வகிபாகங்களில் சேவையாற்றினாலும் அவருக்கென்று விதி எழுதிவைத்த பாதை கல்வியியற் கல்லூரி சார்ந்ததாகவே அமைந்திருந்தது.

1993ம் ஆண்டில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளர் இணைப்பாளராகக் கடமையேற்றவர் உபபீடாதிபதி, பீடாதிபதி எனும் உயர்வுகளை அடைந்தார். இருபது வருடங்கள் ஒரே நிறுவனத்தில் சேவையாற்றியது மட்டுமல்லாமல் பீடாதிபதி என்னும் சிம்மாசனத்தை பதினொரு வருடங்கள் அலங்கரித்தவர் என்ற பெருமையும் அவரைச் சார்ந்ததாகின்றது.

பேர்ணாட் என்றால் கண்டிப்பு என்பது பொதுவான கருத்து "கல்லூரியிலும் அதற்கு வெளியிலும் ஒழுங்கைக் கடுமையாக கடைப்பிடிப்பவர். யாருக்கும் அஞ்சாதவர், முகத்துக்கு நேரே ஏசுபவர் என்றெல்லாம் கூறப்படுபவர்." ஒரு பீடாதிபதியின் உன்னத அளவுகோல் தான் விரும்பப்படுவதைவிட மதிக்கப்படுவதாகவே இருக்கும்" என ஓய்வு பெற்ற உபபீடாதிபதி திரு. இன்பதேவராஜா அவர்கள் தனது கருத்துரையில் குறிப்பிட்டுள்ளார். விடாப்பிடியான கடுமையான ஒழுங்குவிதிகளை கடைப்பிடிப்பவராக நடந்து கொண்டமையால்தான் ஒழுக்கம், கட்டுப்பாடு, நேரமுகாமை, திறமை, உழைப்பு, வாண்மை விருத்தி, தலைமைத்துவப் பண்பு, ஆளுமை விருத்தி, நம்பிக்கை போற்றவற்றை மாணவர்களிடத்தே வளர்க்க அவரால் முடிந்தது. இன்னும் கல்வியியற் கல்லூரியில் இருக்கும்போது அந்த வாழ்க்கை கஸ்டம் என்று கூறியவர்கள் அதைவிட்டு வெயியேறிய பின்னர் தம்மை நெறிப்படுத்திய கல்லூரியையும், பீடாதிபதியையும் மதிப்பதையும், போற்றுவதையும் கண்கூடாகக் காண்கின்றோம்.

"வல்ல குருநாதர் நம்மை வருத்துவது, கொல்லவல்ல கொல்லவல்ல பொல்லா வினையறுக்கவே" என்பது திரு. பேர்ணாட் அவர்களினால் மெய்ப்பிக்கப்பட்ட விடயமாகக் காணப்படுகின்றது. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் வெளியீடுகளான ஆசிரியர்களின் திறமைகள், நடத்தைகள் குறித்து சமூகம் உயர்ந்த கருத்தைக் கொண்டிருப்பதற்கு பேர்ணாட் அவர்களின் ஒழுக்க நடவடிக்கைகளே காரணம் என்பது பெருமைப்படக்கூடிய விடயம்தான்.

ஒரு விடயத்தை மற்றவர்களிடமிருந்து எதிர்பார்ப்பவருக்கு அதற்கான தகுதிநிலை இருத்தல் வேண்டும். இந்த வகையில் நேரமுகாமைத்துவம், கடுமையான உழைப்பு என்பவற்றை பிறரிடம் எதிர்பார்த்த அளவுக்குத் தானும் அவ்விடயங்களில் உறுதியாக இருந்துள்ளார். தான் செய்யாத எதனையும் அவர் தனது தொழில் அணியினரிடமோ, மாணவ ஆசிரியர்களிடமோ எதிர்பார்த்தது கிடையாது. தானே அதற்கு முன்னுதாரணமாகி வழிகாட்டியவர்.

தனது பொறுப்பில் இருக்கும் கல்லூரியின் செயற்பாடுகளில் பங்கம் ஏற்படுவதைச் சகிக்க முடியாதவர். எந்தக்கல்லூரி எப்படிச் செயற்பட்டாலும் வவுனியாக் கல்லூரியின் தனித்துவத்தைப் பேணுவதற்கும் அதன் தரத்தை எவ்விதத்திலும் குறைத்துவிடாத முன்னெடுப்புகள் பற்றிய சிந்தனையைச் சுவாசமாகக் கொண்டவர்.

கல்வியோடு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பவர். நூல் வெளியீடுகள், செயலமர்வுகள், மாநாடுகள், வாண்மைத்துவ உரைகள், மொழிவிருத்திச் செயற்பாடுகள், வாண்மை விருத்திச் செயற்றிட்டங்கள், ஆய்வரங்குகள் மூலம் மாணவர்களினதும், கல்வியியலாளர்களினதும் வாண்மை விருத்தியை தக்கவைத்துக்கொள்வதில் அதிக ஆர்வம் உள்ளவர்.

அவரின் அற்புதத் திறமைகளின் பின்னால் உந்துசக்தியாக இருப்பது அவரின் இறை நம்பிக்கையும் மதப்பற்றுமாகும். செபத்திலும் இறைவார்த்தையை அனுபவிப்பதிலும் இன்பம் காண்பவர். அருட்திரு போல் மதன்ராஜ் அவர்கள் அவரை செப மனிதன் என்று குறிப்பிடுவார். ஒரு முன்மாதிரியான கிறிஸ்தவனாக வாழ்வதும், ஏனைய மதங்களை மதிப்பதும் போற்றுவதும் அவரது இயல்பு.

"எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும், வளமையிலும் வாழத் தெரியும், வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ, குறைவோ, எதிலும் எந்தச்சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கின்றேன்; எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு" என்ற இறைவார்த்தை திரு. பேர்ணாட் அவர்களின் தாரக மந்திரமாகும். இறைவனின் வல்லமைமேல் அவர் கொண்ட நம்பிக்கைதான் பல்வேறு சவால்களுக்கும், துன்பங்களுக்கும் முகம் கொடுக்கும் தைரித்தைக் கொடுத்துள்ளது எனலாம்.

"கடமையைச் செவ்வனே செய். உயர்த்தப்படுவாய்" என்பதற்கிணங்க பல கௌரவங்களைப் பெற்றுக்கொண்டார். அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியத்தால் வழங்கப்பட்ட 'சாமஸ்ரீ' கௌரவம், மன்னார் தமிழ்ச்சங்கத்தால் வழங்கப்பட்ட 'நான்மறைக்கோன்' கௌரவம் என்பன குறிப்பிடக்கூடியன. இன்னும் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் பதவிவகித்து வருகின்றார்.

நல்லறிவும், தெளிந்த சிந்தனையும் நிறைந்தவர் என்பதற்கு அவர் எழுதிய கட்டுரைகள், ஆய்வுகள், செயலமர்வுகள் என்பன சான்றுகளாகி நிற்கின்றன. அண்மையில் அவர் எழுதி வெளியிட்ட 'பெற்றோரியம்' என்னும் நூல் குழந்தைகள் தொடர்பாக பெரியவர்கள் அறிந்திருக்கவேண்டிய விடயங்கள் பற்றிய அனுபவப் பதிவுகளாக இருக்கின்றன.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலச் சிறப்பிதழ்

### திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தவக்காலச் செய்தி – 2014

# கிறிஸ்து செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார்



**அன்பான சகோதர சகோதரிகளே,**

புனிதமான இத்தவக்கால நாட்களில், தனி நபர்களாகவும், சமூகமாகவும் எமது உளமாற்றத்திற்கான பாதையைப் பற்றி சில உபயோகமான கருத்துக்களைச் சமர்ப்பிக்க நான் விரும்புகிறேன். இத்தெளிவுறுத்தல் தூய பவுலடிகளாரின் வார்த்தைகளினால் தூண்டப்பட்டவையாகும். "நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் அருள் செயலை அறிந்திருக்கிறீர்களே. அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்"(2கொரி 8:9). தூய பவுல், கொரிந்து வாழ் கிறிஸ்தவர்களுக்கு உற்சாகமூட்டி ஜெருசலேமிலுள்ள உதவி தேவைப்படும் விசுவாசிகளுக்குத் தாராளமாய் உதவும்படியாகவே இதை எழுதினார். இக்காலக் கிறிஸ்தவர்களாகிய எமக்குத் தூய பவுலடிகளாரின் இவ்வார்த்தைகள் - அதாவது ஏழ்மைக்கான அழைப்பு, மறைபரப்புப் பணிக்கான ஏழ்மை வாழ்வு என்ற சொற்பதங்கள் தரும் அர்த்தம்தான் என்ன?

## 1. கிறிஸ்துவின் அருள்

முதலாவதாக, இறைவன் எப்படிச் செயலாற்றுகிறார் என்பதை இது எடுத்துரைக்கிறது. அவர் தம்மை இவ்வுலக அதிகாரங்கள், செல்வம் எனும் போர்வையூடாக வெளிப்படுத்துவதில்லை. மாறாக பலவீனம், ஏழ்மையூடாகவே வெளிப்படுத்துகிறார். "அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார்." இறைவனின் நித்திய மகனாகிய கிறிஸ்து தந்தையுடன் ஒன்றாக வல்லமையும் மாட்சியும் உடையவரானார். ஏழ்மையைத் தெரிவுசெய்தார். அவர் எங்கள் மத்தியில் பிரசன்னமாகி, எங்கள் ஒவ்வொருவரையும் தன்பால் ஈர்த்துக்கொண்டார். அவர் தனது மகிமையைப் புறந்தள்ளி தன்னை வெறுமையாக்கினார். ஏனென்றால் அவர் எல்லாவற்றிலும் எங்களைப்போல இருக்க விரும்பினார் (பிலி 2:7, எபி 4:15). இறைவனின் மானிட ஏற்பு ஒரு மாபெரும் புதிர்! ஆனால் இதற்கெல்லாம் காரணம் அவரது அன்பு, பெருந்தன்மை, அன்னியோன்னியமான கரிசனை. அன்பு, தான் நேசிப்பவர்களுக்காகத் தன்னைத் தயங்காமல் ஒப்புக்கொடுத்து, எதிலும் எல்லாவற்றிலும் தான் அன்பு செய்யும் ஒருவரோடு இரக்கத்தையும், அன்பையும் பகிர்ந்துகொள்ளும்.

அன்பு எம்மை ஒன்றாக அடையாளப்படுத்துகிறது. அது சமத்துவத்தை உருவாக்குகிறது. அது தடைகளை உடைத்து எம்மை ஒன்றிணைக்கிறது. இறைவன் எம்மோடு இதைச் செய்தார். உண்மையாக இயேசு, "மனிதக் கரங்களூடாக செயலாற்றுகிறார்; மனித எண்ணங்களூடாகச் சிந்தித்தார்; மனித தேர்வுகளூடாகச் செயற்பட்டார்; மனித இதயமூடாக நேசித்தார். கன்னிமரியாவிடமிருந்து பிறந்த அவர் உண்மையாகவே எம்மைப்போல் ஒருவரானார். பாவத்தைத்தவிர மற்ற எல்லாவற்றிலும் எம்மைப்போலானார்." (இன்றைய உலகில் திருச்சபை, 22).

தன்னை ஏழையாக்கிய இயேசு ஏழ்மையை ஏழ்மையின் நிமித்தம் நாடவில்லை. தூய பவுல் கூறும், "அவரின் ஏழ்மையூடாக நீங்கள் செல்வந்தராய் ஆவதற்கு" என்ற வார்த்தைகள் வெறும் வார்த்தை ஜாலமோ அல்லது கவரும் வரிகளோ அல்ல; மாறாக அவை கடவுளின் வழிமுறை; அன்பின் வழிமுறை; மானிட ஏற்பு, சிலுவை என்பவற்றின் தொகுப்பாகும். ஒருவர் தன் பக்தியின் நிமித்தம் தன் நிறைவிலிருந்து பொது நலத்தோடு தானம் செய்வதுபோல் கடவுள் வானத்திலிருந்து எமது மீட்பை விழச்செய்ய மாட்டார். கிறிஸ்துவின் அன்பு வித்தியாசமானது. இயேசு யோர்தான் ஆற்றின் நீரிலிறங்கி திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றபோது அதை ஏன் அவர் செய்தாரென்றால் தவறுகளுக்குப் பரிகாரம் தேடவோ உளமாற்றத்திற்கோ அல்ல. மன்னிப்புத் தேவைப்படும் பாவிகளான எம்மத்தியில் இருப்பதற்காகவும், எமது பாவத்தின் சுமையை அவரே ஏற்றுச் சுமப்பதற்காகவும்தான். இவ்வழிமுறை மூலம் எமக்கு ஆறுதல் அளிக்கவும், எம்மைக் காப்பாற்றவும் , எமது துன்பங்களிலிருந்து எம்மை விடுவிப்பதற்காகவும் அவர் அதை மேற்கொண்டார். நாங்கள் கிறிஸ்துவின் செல்வத்தினால் விடுவிக்கப்படவில்லை; அவருடைய ஏழ்மையினால் விடுவிக்கப்பட்டோம் எனத் திருத்தூதர் கூறுவது கவனத்தில் கொள்ளவேண்டியதாகும். மேலும் தூய பவுல், " கண்டுபிடிக்க முடியாத கிறிஸ்துவின் அளவற்ற செல்வத்தைப் பற்றியும் (எபே 3: 8) " அவர்தான் எல்லாவற்றிற்கும் உரிமையாளர்" ( எபிரே 1: 2) என்பது பற்றியும் நன்றாகவே உரைக்கிறார்.

ஆகவே எம்மை மீட்டு வளமாக்கிய கிறிஸ்துவின் ஏழ்மை என்றால் என்ன? இது எம்மை அவர் அன்பு செய்யும் வழிமுறைகளில் ஒன்று. எவ்வாறு நல்ல சமாரியன் பாதையோரத்தில் குற்றுயிராகக் கிடந்தவனுக்கு அயலவனானானோ அதுபோல் நாமும் எமது அயலவருக்கு நல்ல சமாரித்தனாக வேண்டும். ஆண்டவர் யேசு நம்மை அன்பு செய்வதுபோல் பிறரையும் அன்புசெய்து அயலவராக வாழவேண்டும் (லூக்கா 10:25).

எமக்கு உண்மையான சுதந்திரத்தை, விடுதலையை, மகிழ்ச்சியைத் தருவதென்றால் அவை கிறிஸ்துவின் அன்பான கருணை, இரக்கம், ஒருமைப்பாடு என்பவையேயாகும். கிறிஸ்துவின் அன்பு, அதாவது எம்மை வளப்படுத்தும் ஏழ்மை யாதெனில் அவர் மனுவுரு எடுத்ததன் மூலம் எமது பலவீனங்களையும், பாவங்களையும் தாங்கி கடவுளின் அளவிட முடியாத இரக்கத்தை எம்மீது வெளிப்படுத்தியதேயாகும். செல்வங்களிலெல்லாம் பெருஞ் செல்வம் கிறிஸ்துவின் ஏழ்மையே. இயேசுவின் செல்வமானது, தந்தையாகிய இறைவன்மீது அவர் கொண்டிருந்த எல்லையற்ற உறுதி, தொடர் நம்பிக்கை, தந்தையின் விருப்பங்களையும், அவரை மகிமைப்படுத்துவதிலும் அவருக்கிருந்த ஆழமான ஆவல் என்பனவாகும். எடுத்துக்காட்டாக எவ்வாறு ஒரு குழந்தை எவ்வித சந்தேகமும் இன்றி தனது பெற்றோரின் அன்பையும், அரவணைப்பையும் உணர்ந்து அவர்களை நேசிக்கிறதோ அதேபோல் இயேசுவும் அன்பு செய்வதில் உயர்ந்தவராக உள்ளார். இயேசுவின் செல்வம் அவர் கடவுளின் மகனாக இருப்பதில் நிலைகொண்டுள்ளது. தந்தையுடனான அவரின் தனித்துவ உறவு ஏழையாகிய கிறிஸ்துவின் இறையாண்மையுடைய உரிமையாகும். தன்னுடைய "நுகம் இலகுவானது" அதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று இயேசு எம்மை அழைக்கும்போது "அவரின் பெறுமதிமிக்க ஏழ்மையினால்" நாங்களும் செல்வம் மிக்கவர்களாக மாறுகிறோம். அவரின் பிள்ளைக்குரிய சகோதரத்துவத்தில் தூய ஆவியில் பங்குகொள்கிறோம். "தம் மகனின் சாயலுக்கேற்றவாறு இருக்க வேண்டுமென கடவுள் முன்குறித்து வைத்தார். அச்சகோதரர் சகோதரிகள் பலரும் தம் மகன் தலைப்பேறானவராய் இருக்கவேண்டுமென்றே இப்படிச் செய்தார் (உரோ 8: 29). "புனிதராகாமல் இருப்பதே மிகப்பெரிய வேதனை" என்று கூறப்படுகிறது. (எல். புளோய்) உண்மையான ஒரே ஒரு ஏழ்மைதான் உண்டு என்று நாம் கூறலாம். அது கடவுளின் பிள்ளைகளாகவும் கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளாகவும் வாழாமல் இருப்பதேயாகும்.

## 2. எமது சாட்சியம்

இந்த ஏழ்மை 'வழி'தான் இயேசுவின் வழி என்று நாங்கள் நினைக்கலாம். ஆனால் அவரைப் பின்பற்றிவரும் நாங்கள் முறையான, பொருத்தமான மனித வளங்கள் மூலம் உலகை பாதுகாக்கலாம் என்பது பொருத்தமற்ற கூற்று. ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒவ்வொரு இடத்திலும் கடவுள் கிறிஸ்துவின் ஏழ்மைமூலம் மனித இனத்தைப் பாதுகாப்பதைத் தொடர்கிறார். கிறிஸ்து அருட்சாதனங்களில், இறைவார்த்தையில், திருச்சபையில் தன்னை ஏழையாகக் காண்பிக்கிறார். திருச்சபை ஏழை மக்களின் திருச்சபை. கடவுளின் செல்வம் எமது செல்வங்களின் ஊடாகச் செல்வதில்லை. ஆனால் கிறிஸ்துவின் மனநிலையில் எமது தனிப்பட்ட, சமூக ஏழ்மையான வாழ்வினால் எவ்வித மாறுபாடுமின்றி தனித்துவமாக வாழ்ந்து காட்டப்படுகின்றது.

எமது எஜமானைப் பின்பற்றி கிறிஸ்தவர்களாகிய நாங்கள் எங்கள் சகோதரர்களினதும் சகோதரிகளினதும் ஏழ்மைக்கு முகங்கொடுத்து, அதை உணர்ந்து, அதை எமது உரிமையாக்கி அதை இல்லாதொழிக்கக்கூடிய செய்முறை வழிகளை கையாள அழைக்கப்பட்டுள்ளோம்.

ஆதரவற்ற நிலையும் ஏழ்மையும் ஒன்றல்ல; அவை வித்தியாசமானவை. ஆதரவற்ற நிலை என்பது விசுவாசமற்ற, உதவியற்ற, நம்பிக்கையற்ற ஏழ்மையாகும். மூன்றுவிதமான ஆதரவின்மை உள்ளது. பொருட்கள், ஒழுக்கம், ஆன்மீகம். சாதாரணமாகப் பொருட்கள் சார்ந்த ஆதரவின்மை பொருளாதார வசதியற்ற நிலையாகும். இது மனித மாண்புக்கெதிரான வாழ்க்கை நிலையை வாழ்பவர்களைக் குறிக்கின்றது. அடிப்படை உரிமை அற்றவர்கள், உணவு, நீர், சுகாதாரம், தொழில் தேவைப்படுகிறவர்கள் மற்றும் தங்களுடைய கலாச்சாரத்தை மேம்படுத்தி வளர்ப்பதற்கு சந்தர்ப்பம் கிட்டாதவர்கள் இதில் உள்ளடங்குவர்.

இவ்வாதரவின்மைக்கு முகம் கொடுப்பதற்காகவும், தேவைகளை நிறைவுசெய்வதற்காகவும் மானிடத்தின் உருவங்களைச் சிதைக்கும் காரணிகளுக்கு கட்டுப்போடுவதற்காகவும் திருச்சபையானது தன்னுடைய உதவியை, சேவைகளை பலவாறு செய்துவருகிறது. ஏழைகளிலும், கைவிடப்பட்ட, ஒதுக்கிவைக்கப்பட்ட மக்களிலும் நாம் கிறிஸ்துவைக் காண்கின்றோம். ஏழைகளை நேசித்து, அவர்களுக்குச் சேவை செய்வதன் மூலம் நாங்கள் கிறிஸ்துவை நேசித்து சேவை செய்கிறோம். மனித மாண்பு மீறப்படுதல், பாகுபாடு காட்டப்படுதல், துஸ்பிரயோகம் செய்தல் போன்ற உலக செயற்பாடுகள் அடிக்கடி ஆதரவின்மை நிலையைத்தூண்டும் காரணிகளாக உள்ளன. பலம், பணம், ஆடம்பரம் என்பன தெய்வத்திற்குரிய நிலையைக் கைப்பற்றும்போது வளங்கள் பகிரப்படுகின்ற சந்தர்பத்தில் அவை முன்னுரிமை வகிக்கின்றன. ஆகவே எமது மனச்சாட்சி நீதி, சமத்துவம், எளிமை, பகிர்வு நோக்கி திசை திரும்பவேண்டும்.

ஒழுக்க ஆதரவின்மை என்பதும் இன்றைய உலகில் பரவியுள்ளது. அடிமைத்தனம், தீமை, பாவம் போன்றவை தார்மீகம் இல்லாமைக்குத் தூண்டுதலாக அமைகின்றன. குடும்பங்களில் சிறப்பாக இளம் வயதினர் மது, போதைப்பொருள், சூதாட்டம், ஆபாசப் படங்கள் போன்றவற்றால் ஈர்க்கப்படுவதால் எத்தனை பேர் வாழ்கையில் துன்புறுகின்றனர். வாழ்வில் அர்த்தமிழந்து, விரக்தியுற்று, எதிர்பார்ப்பின்றி எதிர்காலத்தை சூனியமாக்கியுள்ளார்கள். இதனால் ஓர் குடும்பத்திற்கு எவ்வளவு வேதனைகள் இழைக்கப்படுகின்றன. எத்தனை குடும்பங்கள் நீதியற்ற சமுதாயக் கட்டுப்பாடுகளால் சமூக நீதியற்ற முறையில் தொழில் வழங்குதல் நிமித்தம் பாதிக்கப்படுகின்றன. இதனால் அக்குடும்பப் பொறுப்பாளர் தகுதி பறிக்கப்பட்டு பலர் கைவிடப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் கல்வி கற்பதற்கான வசதியின்மை சுகாதார வாழ்விற்கான சமமான வாய்ப்புக் கிட்டாமல் உள்ள குடும்பங்கள் எத்தனை. இவ்வாறான நிலைகளால் எதிர்பார்க்கப்படும் ஒழுக்க ஆதரவின்மை தற்கொலையாகக் கருதப்படலாம். இவ்விதமான ஆதரவு அற்ற நிலை பொருளாதார அழிவை ஏற்படுத்தி ஆன்மீக ஆதரவின்மையுடன் அசைக்க முடியாத தொடர்பை ஏற்படுத்துகின்றது. இது நாம் இறைவனைப் புறந்தள்ளி அவரின் அன்பை வெறுத்து அனுபவிக்கும் ஆன்மீக ஆதரவின்மைக்கு சமமாகும். கிறிஸ்துவின் ஊடாக இறைவன் எங்களை அணுகும்போது கடவுள் எமக்குத் தேவையில்லையென நாம் நினைத்தால் - அதாவது நாங்கள் எல்லாவற்றையும் எம்மால் செய்ய முடியும் என்று நம்பினால் நாங்கள் தடம்புரள்வது உறுதி. கடவுளால் மட்டுமே உண்மையாகக் காப்பாற்றவும், விடுதலை செய்யவும் முடியும்.

நற்செய்தி ஆன்மீக ஆதரவின்மையின் மாற்று மருந்தாகும். நாம் கிறிஸ்தவர்கள் என்பதால் எங்கு சென்றாலும் விடுதலைச் செய்தியைப் பறைசாற்ற அழைக்கப்பட்டுள்ளோம். அதாவது புரிந்த பாவச்செயல்களுக்கு மன்னிப்பு உண்டு. பாவச் செயலைவிட இறைவனே உயர்ந்தவர். எல்லா வேளைகளிலும் அவர் எங்களை அன்புசெய்கிறார். நாம் அவரோடு ஒன்றிணைந்து முடிவில்லாத வாழ்வைப்பெற அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் என்பதே அதன் உள்ளடக்கமாகும்.

ஆண்டவர் எம்மை இரக்கமும் நம்பிக்கையும் நிறைந்த இச்செய்தியின் எடுத்துரைப்பாளராக இருக்கும்படி கேட்கிறார். நற்செய்தியைப் பரப்புவதில் ஏற்படும் மகிழ்ச்சி உணர்வு எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. அத்துடன் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொக்கிசத்தில் பங்குகொள்ளவும், உடைந்த உள்ளங்களுக்கு ஆறுதலளிக்கவும், இருள்மயமான அனுபவத்தை எதிர்கொள்ளும் எமது சகோதரர் சகோதரிகளுக்கு நம்பிக்கை வழங்கவும் ஒத்தாசை புரிகிறது. காணாமல்போன ஆடுகளை அன்போடு தேடும் ஆயன்போல் பாவிகளையும் ஏழைகளையும் தேடும் இயேசுவைப்பின்பற்றி அவர்வழி நடப்பதே இதன் அர்த்தமாகும். இயேசுவோடு ஒன்றிணைதல் மூலம் நாம் தைரியமாக நற்செய்தி பரப்புவதற்கு மனித மேம்பாட்டிற்குரிய வழிகளைத் திறந்துவிடலாம்.

**அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,** இத்தவக்காலம் லௌகீக நடத்தைசார் மற்றும் ஆன்மீகத்தில் கைவிடப்பட்டோரை நற்செய்தியூடாக எமது தந்தையாகிய கடவுளின் இரக்கம் நிறைந்த அன்பிலும் கிறிஸ்துவிலும் இணைக்க ஆயத்தமாக உள்ளது. எவரையும் அரவணைக்கத் தயாராக உள்ளது என்பதற்கு முழுத்திருச்சபையும் சாட்சி பகருகின்றது.

ஏழையாக உருவெடுத்து, ஏழ்மை மூலமாக எம்மைச் செல்வந்தராய் ஆக்கிய கிறிஸ்துவை எவ்வளவு தூரம் பின்பற்றுகிறோமோ அவ்வளவு தூரம் நாம் இதைச் செய்ய முடியும். தவக்காலமானது எம்மை மறுப்பதற்கு பொருத்தமான வேளையாகும். எம்முடைய சொந்த ஏழ்மையின் மூலம் மற்றவர்களைச் செல்வந்தராக்குவதற்கு உதவிசெய்ய எவற்றை கைவிடலாமென நம்மை நாமே கேட்டுக்கொள்வது சாலப்பொருத்தமானது. உண்மையான ஏழ்மை வருத்தம் தரவல்லது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பரித்தியாகம் இல்லாத பரிமானம் ஒருபோதும் உண்மையான சுயமறுப்பு ஆகாது. எனக்குப் பெறுமதியற்ற, வருத்தம் விளைவிக்காத இரக்கத்தின்மீது நம்பிக்கையில்லை. தூய ஆவியானவர் ஊடாக "நாம் ஏழையர் எனத்தோன்றினாலும் நாம் பலரை செல்வராக்கிறோம். எதுவும் இல்லாதவர் எனத்தோன்றினாலும் எல்லாவற்றையும் பெற்றிருக்கிறோம்" (2 கொரி 6:10).

எமது தீர்மானங்களில் நிலைத்துநின்று மனித அபலைகளுக்கு எமது கடமையையும் கடப்பாடுகளையும் அதிகரிக்க உழைப்போமாக! அதன் மூலம் நாங்கள் இரக்கம் நிறைந்தவர்களாகவும் இரக்கத்தோடு செயலாற்றுபவர்களாகவும் மாறலாம். இந்த நம்பிக்கையை வெளிப்படுத்துவதில் நான் ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசியுடனும் திருச்சபையின் ஒவ்வொரு சமூகத்துடனும் பயன் அளிக்கும் இத்தவக்கால யாத்திரையை முன்னெடுக்கின்றேன். எனக்காக செபிக்கும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

"ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக, எமது தேவ அன்னை உங்களைப் பாதுகாப்பாராக"

**வத்திக்கானிலிருந்து – 26 மார்கழி 2013**
**மறைசாட்சியான முதல் திருத்தொண்டர் தூய முடியப்பர் திருநாள்**
**திருத்தந்தை பிரான்சிஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்


# உலகுக்கும் திருச்சபைக்கும் துறவிகள் தேவைப்படுகின்றார்கள்

## – திருத்தந்தை பிரான்சிஸ் –

அர்பணிக்கப்பட்ட துறவிகள், கடவுளின் அன்புக்கும் கருணைக்கும் வழங்கும் சாட்சி வாழ்வு, உலகுக்கும் திருச்சபைக்கும் தேவைப்படுகின்றது. வாழ்வின் பல்வேறு நிலைகளில் இது கடவுளின் அடையாளமாக உள்ளது என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கொட்டும் மழையிலும் குடைகளைப் பிடித்துக்கொண்டு வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் நண்பகலில் நின்றுகொண்டிருந்த 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட விசுவாசிகளுக்கு மூவேளைச் செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ், அருள்சகோதரிகள் இல்லாத உலகத்தையோ, திருச்சபையையோ நினைத்துப் பார்க்க முடியாது என்று கூறினார்.

மாசி மாதம் 02ம் திகதி சிறப்பிக்கப்பட்ட, அர்ப்பணிக்கப்பட்ட துறவிகள் தினத்தையொட்டி மூவேளைச் செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ், நீதியும் அமைதியும் நிறைந்த சமூகத்தின் வளர்ச்சிக்கும், இளையோரோடும், ஏழைகளோடும் இறைவாக்கை பகிர்ந்துகொள்வதிலும் துறவிகள் புளிக்காரமாய் உள்ளனர் எனவும் கூறினார்.



கடவுளின் கொடை வழியாக, கன்னிமை, ஏழ்மை, பணிவு ஆகிய வார்த்தைப்பாடுகளின் மூலம் இயேசுவின் அடிச்சுவடுகளைத் தங்கள் வாழ்வு முழுவதையும் கொடையாகக் கொடுப்பதன் அடையாளமாக இந்நாளில் நற்செய்தி விளக்குகின்றது என்றும், கடவுளுக்குத் தன்னையே காணிக்கையாக்குவது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் பொருந்தும் என்றும் திருத்தந்தை கூறினார். இயேசுவோடு, இயேசுவைப்போல, நாம் அனைவரும் நம் வாழ்வை, நம் குடும்பங்களிலும், பணியிலும், திருச்சபைக்கான சேவையிலும், கருணைப் பணிகளிலும் தாராளமாக வழங்குவதற்கு அழைக்கப்பட்டுள்ளோம். இருந்தபோதிலும் இந்த அர்ப்பணம், வார்த்தைப்பாடுகளில் தங்களை முழுமையாக, கடவுளுக்கு மட்டுமே அர்பணித்துள்ள துறவிகளால் சிறப்பாக வாழப்படுகின்றது. இத்தகைய பல காரணங்களுக்காக, 2015ஆம் ஆண்டு துறவிகளுக்கென அர்பணிக்கப்பட்டுள்ளது என்பதையும் இறுதியுரையில் கூறினார்.

### தூய யோசேப்பின் பெயரை நற்கருணை மன்றாட்டில் இணைத்தல்



தூய யோசேப்பு கன்னிமரியாவின் துணைவர். இயேசுவின் வளர்ப்புத் தந்தை. உலகத் திருச்சபையின் பாதுகாவலர். மேலும் குடும்பங்களின் பாதுகாவலராகவும் இறைமக்களினால் போற்றப்படுகின்றார். இருப்பினும் அவருடைய பெயர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னதாகப் பயன்படுத்தப்பட்ட முதலாம் (உரோமை) நற்கருணை மன்றாட்டில் இடம்பெறவில்லை.

இப்பொழுது திருப்பலியில் இடம்பெறும் நற்கருணை மன்றாட்டில் தூய யோசேப்பின் பெயர் இணைக்கப்பட்டுள்ளது. ஆகவே நற்கருணை மன்றாட்டு 2,3,4ல் தூய கன்னி மரியாளின் பெயரைத் தொடர்ந்து அவரது துணைவர் யோசேப்பு என்று கூறப்படுகின்றது.


### அமெரிக்க ஜனாதிபதி திருத்தந்தையைச் சந்திக்கிறார்



வருகிற மார்ச் 27ம் திகதி வியாழக் கிழமையன்று அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசுத் தலைவர் பராக் ஒபாமா திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்திக்க வத்திக்கானுக்கு வருகை தருகிறார் என்று அமெரிக்க அரசும் திருப்பீடமும் அறிவித்துள்ளன.

ஒபாமா அவர்கள் முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களை 2009ல் வத்திக்கானில் சந்தித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### திறமைகள் தோற்பதில்லை
### எடிசன் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி



தோமஸ் ஆல்வா எடிசன் மின்விளக்கு முதல் பலநூறு புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டறிந்த உலகம் அறிந்த விஞ்ஞானி. தனக்குக் கிடைத்த அத்தனை இலாபத்தையும் முதலீடு செய்து அவர் உருவாக்கியிருந்த அவரது மிகப்பெரிய ஆய்வுகூடம் 1914ஆம் ஆண்டு முழுவதுமாகத் தீப்பிடித்து எரிந்தது. அப்போது எடிசனின் 24 வயது மகன் அவரைத் தேடிக்கொண்டிருந்தபோது, அவர் ஆய்வுகூடத்துக்கு வெளியே நின்று எரியும் ஆய்வுகூடத்தை பார்த்துக்கொண்டிருந்தார்.

வேதனையோடு அங்கு ஓடி வந்த மகனிடம், "உன் தாயை அழைத்துக்கொண்டு வா. அவளது வாழ்நாளில் இப்படியொரு தீ விபத்தைப் பார்த்திருக்க மாட்டாள்" என்று பொறுமையோடு கூறினார். மேலும் "மகனே, இந்தப் பெரிய அழிவிலும் நமக்கு ஒரு பெரிய உதவி காத்திருக்கிறது. ஆம் நம் குறைபாடுகள் எல்லாம் இத்தோடு அழிந்துவிட்டன" என்று கூறிய எடிசனின் அப்போதைய வயது 67.

இந்தத் தீ விபத்து நடந்த மூன்றே வாரங்களில் போனோகிராபைக் கண்டறிந்து உலகிற்கு வழங்கியவர் எடிசன் என்றால் சாதனைதானே!

தன்மீதும், தன் திறமைகள்மீதும் நம்பிக்கை கொண்டவர்களை வெளிப்புறத் தோல்விகள், தாக்குதல்கள் ஒன்றும் செய்வதில்லை.

பெரிய வெற்றிகள் கிட்டும்போதும், பெரிய தோல்விகள் ஏற்படும்போதும் அமைதியுடன் செயல்பட வேண்டும். – பெர்ட்ரண்ட் ரஸ்ஸெல்

### சித்திரை மாதம் இங்கிலாந்து அரசி திருத்தந்தையைச் சந்திக்கிறார்




பிரிட்டன் அரசி எலிசபெத் அவர்கள், வருகிற ஏப்ரல் 3ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வத்திக்கானில் சந்திப்பார் எனத் திருப்பீட பத்திரிகை அலுவலகம் அறிவித்துள்ளது.

இத்தாலிய அரசுத்தலைவர் ஜார்ஜோ நாப்போலித்தானோ அவர்களின் அழைப்பின்பேரில் வருகைதரும் அரசி வத்திக்கானுக்கு வந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்திப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசி எலிசபெத் அவர்களுடன் எடின்பெரோ பிரபுவும் வருகை தருவார் எனவும் அரசியின் பத்திரிகை அலுவலகச் செயலர் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

### 19 புதிய கர்தினால்கள்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 19 புதிய கர்தினால்மாரை நியமித்துள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களும் கலந்துகொண்டார்.

## புனிதர்களின் பாதையில்

### எருசலேம் நகர் புனித சிரில்

(ஆயர், மறைவல்லுநர் - கி.பி. 315 - 386)

திருவிழா – மார்ச் 18



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

எருசலேம் நகரின் ஆயராக பணியாற்றிய நாட்களில் சிரில் மும்முறை நாடு கடத்தப்பட்டார். ஆரியப் பேதகத்தைப் பூண்டோடு ஒழிக்கும் திட்டத்தில் புனித அத்தனாசியாருடன் இவர் ஒத்துழைத்தார். இவர் எழுதி வைத்துச்சென்ற திருமறை விளக்கம் இன்றுவரை விலைமதிக்கப்படாத செல்வமாகத் திகழ்கிறது.

இவரது நூல்களுள் 10 விளக்க நூல்கள் தவக்காலத்தில் திருமுழுக்குப்பெறத் தயாரிக்கப்படுவோருக்காக எழுதப்பட்டவை. எஞ்சி உள்ளவை உயிர்த்த விழாவுக்குப் பிறகு புதிதாக நீராட்டுப் பெற்றவர்களை உறுதிப்படுத்தும் முறையில் அமைந்துள்ளன.

நமது ஞான வாழ்வுக்கு மையமாக விளங்கும் நற்கருணையைப் பற்றி இவர் தரும் போதனையில் இவருக்கு நிகர் இவரே.

இன்று இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் எதிரொலியாக, திருச்சபையில் பல நாடுகளிலும், திவ்ய நற்கருணையை விசுவாசிகள் தங்கள் கைகளில் பெற்றுப் பக்தியுடன் உட்கொள்ளும் வழக்கம் பரவிவருகிறது. சங்கம் இதனை ஏற்கிறது.

ஆனால் என்னே வியப்பு! புனித சிரில் தமது காலத்திலேயே இதனைப்பற்றி மிக ஆழமாகச் கூறிச்சென்றுள்ளார்.

"திருவிருந்தில் பங்குபெறச் செல்கின்றாயா? கையை வீசிக்கொண்டோ, தொங்கப்போட்டு ஆட்டிக்கொண்டோ செல்லாதே. மாறாக அரசர்களை ஏற்றிவரும் தேர்போல, உன் இடக்கை வலக்கையைத் தாங்கும் தேராக அமையட்டும். பின்னர் திருவுடலை நீ பற்றுறுதியுடன் பார்ப்பதனால் உன் கண்கள் தூய்மையடையட்டும். பிறகே நீ அதனை உட்கொள்ளலாம். இவ்வேளையில் ஒரு கடுகு அளவுத்துண்டுகூட விழாது பார்த்துக்கொள். அப்படி நீ இழக்கநேரிட்டால் உன் உடலில் ஒரு பகுதியையே இழந்ததாக நினைத்துக்கொள்.

யாராகிலும் ஒருவர் தங்கத் தூள்களை உன் கையில் ஒப்படைக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதில் எதையும் இழக்காதிருக்கவும் அதனைப் பத்திரப்படுத்தவும் எத்துணை முயற்சி எடுத்துக்கொள்வாய்? பொன்னைவிடப் பன்மடங்கு விலை மதிப்புள்ளதை நீ இழக்கலாமா?"

"இங்கு கூறப்பட்ட கருத்துக்களை மனதிலிருத்து. யாருடைய குற்றச்சாட்டுக்கும் ஆளாகாதே. திருப்பந்தியை விட்டு ஒதுங்கிவிடாதே. உனது பாவத்தின் காரணமாக இத்தகைய புனிதமான மறை பொருளைக் கறைப்படுத்தாதே"

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 29.

## சாதிச் சாக்கடையில் நீச்சலடித்து நீராடுகிறது தமிழ்ச்சாதி!

### 'மீண்டும் வேதாளம் முருக்கை மரத்தில்'

அரசன் அமைச்சரைப் பார்த்துச் சிரித்தான். சிரிப்புக்கான காரணத்தை அமைச்சர் வினவினான். அரசனோ, "நானும் நீயும் நீராடச் சென்றதாக ஒரு கனவு கண்டேன். அதில் சிரிப்பு என்னவென்றால் இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டு நான் பன்னீரிலும் நீ ஒரு குட்டையிலும் கிடக்கக் கண்டேன்" என்றான். இப்போது அமைச்சர் சிரித்தான். அரசன் ஆச்சரியப்பட்டான், காரணத்தை வினவினான். அமைச்சரோ, "நானும் ஒரு கனவு கண்டேன்! நீங்கள் கண்ட கனவுவின் தொடர்ச்சிதான்! ஆனால், மிகுதியைக் கூறினால் நீங்கள் மிகுந்த மனவேதனை அடைவீர்கள்...!" என்றான். அரசனோ அமைச்சர் கண்ட கனவினை அறியாமல் அவனை விடுவதாக இல்லை. அதனால் அமைச்சர், "அரசே, நீரில் அடித்துச் செல்லப்பட்டு நீங்கள் பன்னீரிலும் நான் குட்டையிலும் கிடந்தது உண்மைதான்! அதன்பின் நான் கண்ட கனவில், நாம் இருவரும் நாய் உருவம் எடுத்து ஒருவரை ஒருவர் நக்கிக்கொண்டோம்!" என்றபோது அரசனின் புருவங்கள் அன்றுதான் அவ்வாறு அகல விரிந்தன.

கடந்த மூன்று தசாப்த இடம்பெயர்வு வாழ்க்கையில் நாம் ஒருவர் ஒருவரில் தங்கி, ஒருவர் ஒருவரைத் தாங்கி, ஒருவர் ஒருவருக்கு உதவிசெய்து, ஒரு குடும்பத்தவர்கள் தேவையில் உள்ளபோது அடுத்த குடும்பத்தவர்கள் அவர்களுக்கு இடம்கொடுத்து, உணவுபடைத்து, உதவியளித்து, ஆதரித்து, ஆறுதலளித்து எனப் பலவழிகளில் ஒன்றாக வாழ்ந்தோம். இப்போது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குடும்பங்களைத் தவிர ஏனையவர்கள் தங்கள் சொந்தக் கிராமங்களுக்கு நிரந்தரமாகச் சென்றுவிட்டதால் பழையபடி 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்!' ஏறிய கதையாக நம் வாழ்வு மாறிக்கொண்டிருக்கிறதா என்று கேள்வி எழுப்பக்கூடிய அளவிலான சூழ்நிலைகளே உருவாகி வருகின்றன.

### புழுத்துப் புரையோடிப் போனவைகள்!

ஒரு சேமக்காலைக்குக் குறுக்கே சுவர் ஒன்று நீண்ட பல தசாப்தங்களாகக் கட்டப்பட்டிருந்தது. ஆராய்ந்தபோது ஒருபக்கம் 'உயர் சாதியினருக்கு', மற்றைய பக்கம், 'தாழ்ந்த சாதியினருக்கு'! எனக் கூறப்பட்டது. அச்சுவரினைப் பல இளைஞர்கள் சேர்ந்து இடித்துத் தகர்த்துக்கொண்டிருந்தார்கள். இதனைக் கண்ணுற்ற ஒரு பெரியவர், "பழைய புழுத்துப்போன - புரையோடிப்போன சமூதாய முறைமைகளை மாற்ற இளம் தலைமுறை ஒன்று முகிழ்ந்திருக்கிறது" என அவர்களை வெகுவாகப் பாராட்டினார். அவர்களில் ஒருவன், "நீங்க ஒன்று! விபரம் தெரியாமப் பேசுறீங்க! எத்தனை நாளா இந்த மண்சுவரை இடித்து 'கொங்கிறீற்' (Concrete) போடவேணும் என்றிருந்தோம்! அது, இப்போதுதான் கைகூடியிருக்கிறது!..." என்றான். பெரியவரின் தலையில் கோடை இடி விழுந்ததுபோல் இருந்தது!

### கடந்த காலத்தில் கற்றுக்கொண்டதை கைவிட்டு விட்டோமா?

2005ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 26ஆம் நாள் காலை ஏற்பட்ட 'சுனாமி'த் தாண்டவம் ஓரிரு நிமிடங்களிலேயே முடிந்துபோனது. ஆனால், இப்பேரழிவில் இறந்த ஆயிரமாயிரம் பேர்களின் உடலங்களை மீட்டெடுக்க நாட்கள் - வாரங்கள் ஆகின. 'பக்கோ'வால் கிடங்குகள் கிண்டி ஒரே கிடங்கில் ஐம்பது பேர், நூறு பேர் என்று அடுக்கி அடக்கம் செய்ததையெல்லாம் மறந்துபோனோமா? முப்பது ஆண்டுகால யுத்தத்தில் பல தடவைகளில் பெரும் தொகையில் கொல்லப்பட்டவர்களை ஒன்றாகச் சேர்த்து அடக்கம் செய்தவை நினைவுகளில் இருந்து நீங்கிவிட்டனவா? என மீள் கேள்விகள் எழுப்பவேண்டி இருக்கிறது.

குறிப்பாக, 2009ஆம் ஆண்டு வன்னிப்பிரதேசத்தில் நடந்தேறிய பெரும் போரில் இறந்துபோன ஆயிரமாயிரம் பேர்களை அவசர அவசரமாக ஒன்றாகப் போட்டு அடக்கம்செய்துவிட்டதை செளகரியமாக மறந்துவிட்டோமா? அல்லது அவற்றை நினைக்க இப்போது எமக்கு நேரம் இல்லாமல்போனதா? கொல்லப்பட்டவர்களைப் பதறிப்பதறி, அகப்பட்ட இடத்தில் நிலத்தைக் கிளறி, உடலங்களை அரையும் குறையுமாக அடக்கம் செய்துவிட்டு, உயிரைக் காப்பாற்ற ஓடியது எம் மனங்களில் ஏன் இன்னும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை? மனங்கள் மரத்துப்போய் விட்டனவா? அல்லது மரணித்துப்போய் விட்டனவா? மனங்கள் இன்னும் மாற மறுக்கின்றனவா?

### சமத்துவம் எப்போது சாத்தியமாகும்?

"சமரசம் உலாவும் இடமே, நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே. சாதியில் மேலோர் என்றும் தாழ்ந்தவர் தீயோர் என்றும் பேதமில்லாது, எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு; தொல்லை இன்றியே தூங்கிடும் வீடு; உலகினிலே இதுதான் நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே..." என ஒரு பழைய பாடலை சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் இன்றும் கேட்கலாம். நம்முடைய பிரதேசங்களில் உள்ள சில சேமக்காலைகளிலேயேனும் இச்சமரசம் எப்போது ஏற்படுமோ என ஏக்கத்தோடு காத்திருக்கவேண்டி இருக்கிறது.

### உயர்குடி மக்கள் அவர்கள்!

நம்முடைய 'உயர்ந்த ...', 'தாழ்ந்த ...' என்ற பாரம்பரிய வகைப்படுத்தல் அப்படியே இருந்துகொண்டிருக்க, இதன் நவீன வடிவங்கள் வெவ்வேறு கோலங்களில் தோன்றிக் - கொண்டிருக்கின்றன.

இதனை 2009 சித்திரை 'பெண்கள் மலர்'இல் பொன். கண்ணன் 'நாங்கள் மேட்டுக்குடி மக்கள்' என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதியிருந்தார். "நாங்கள் மேட்டுக்குடி மக்கள் (உயர்குடி மக்கள்). வீட்டில் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ள மாட்டோம். நாங்கள் அறையில் அடைந்து கிடப்போம். நாங்கள் எங்கு செல்கிறோம், எப்போது வருகிறோம் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது. வீடே பற்றி எரிந்தாலும் அவரவர் உடமைகளைப் பாதுகாத்துக் கொள்வோம். அடுத்த வீட்டில் துக்கமா? அது எங்களுக்குக் கவலை இல்லை. மொத்தத்தில் எங்கள் வீடு ஒரு தீவு. அதில் வாழும் நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தீவு. ஏனென்றால் நாங்கள் மேட்டுக்குடி மக்கள்" எனக் கோடிட்டுக் காட்டுகிறார்.

### தமிழருக்குரிய தனிக்குணம்!

'முத்தமிழன் முகவரி' என்ற நூலில் அப்துல் ரகுமான் தமிழரின் தனிக் குணத்தினைக் கோடிட்டுக் காட்டுவான். "...'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு' என்று நாமக்கல்லார் பாடினார். அதென்ன தமிழனுக்கென்றோர் தனிக்குணம் என்று சிந்தித்தேன், புரிந்தது, தனித் தனியே பிரிந்து சண்டையிடும் குணம். சாதி எனப் பிரிந்தான்; சமயம் எனப் பிரிந்தான்; மீதி இருந்தவனோ கட்சி எனப் பிரிந்துவிட்டான்..." எனத் தொடர்கிறார்.

### சமுதாயம் என்பது சம+ஆதாயம்

'சமூகம்' என்ற சொல்லுக்குச் 'சாதி' என்றொரு பொருளுண்டு. ஆக, 'சாதி' என்ற பழைய சொல்லுக்குப் பதிலாக 'சமூகம்' என்ற சொல்லை இப்போது அதிகமாகப் பயன்படுத்துகிறோம். இவ்வாறு அழைப்பது நாகரிகமாகத் தோன்றுவதுபோல நினைத்துக் கொள்கிறோமே தவிர, 'உயர்ந்தவன்', 'தாழ்ந்தவன்' என்ற மனநிலையில் இருந்து நாம் மாறவில்லை - விடுபடவில்லை என்பதையே இது புலப்படுத்துகிறது. கலப்புத் திருமணங்கள் நடக்கின்றன, அதனால் உறவுகள் உருவாக்கப்படுகின்றன, எனினும் முழு அளவிலான சமூதாய மாற்றம் (Radical Change) இடம்பெற்றதற்கான அறிகுறிகளோ அடையாளங்களோ தெரியவில்லை. இவ்விடயத்தில், கலப்புத்திருமணம், நட்புறவை ஏற்படுத்துதல் போன்ற புற மாற்றங்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அக மாற்றம், உதாரணமாக எல்லா மனிதர்களும் உயர் - சம மதிப்புக்குரியவர்கள் என்ற மனப்பாங்கு இன்னும் எம் தமிழ் சமூகத்தில் வளர்ச்சியடையவேண்டிய நிலையில்தான் இருக்கிறது.

சமூகத்தை, சமூதாயம் என்றும் அழைக்கிறோம். சமூதாயம் என்ற சொல்லிற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் முதல் பொருளாக, 'மக்கள் தொகுதி' (Society) என்றும், அடுத்து 'ஒரு குறிப்பிட்ட தொழில், துறை முதலியவற்றைச் சேர்ந்தவர்களின் தொகுதி, 'இனம்' எனவும் அர்த்தப்படுத்துகிறது. நான்குபேர், பத்துப்பேர், நூறுபேர் கூடி வருவதால் - சேர்ந்து வாழ்வதால் அது சமூதாயமாகாது. 'சம+ஆதாயம்' எங்குள்ளதோ அங்குதான் சமூதாயம் இருக்கிறது - வளர்கிறது என்பார் கவிமணி சி. தேசிக விநாயகம்பிள்ளை. 'சம+ஆதாயம்' என்னும்போது சமத்துவம், சம உரிமை, சம கடமை, சம கண்ணியம், சம(க) வாழ்வு, சம உடைமை எங்குள்ளதோ அங்கு சமூதாயம் இருக்கிறது – வாழ்கிறது என்பார்.

### ஓடும் உதிரமும் வழிந்தோடும் கண்ணீரும் ஒன்றே

ஆகவேதான், 'ஆசிய ஜோதி'யை எழுதிய கவிமணி சி. தேசிக விநாயகம்பிள்ளை புத்தபிரான் சிறுவனுக்குக் கூறும் அறிவுறுத்தல் பகுதியில், "ஓடும் உதிரத்தில் - வடிந்து ஒழுகும் கண்ணீரில், தேடிப்பார்த்தாலும் - சாதி தெரிவ துண்டோ அப்பா? எவர் உடம்பினிலும் சிவப்பே இரத்த நிறமப்பா எவர் விழிநீரும் உவர்ப்பே இயற்கைக் குணமப்பா" என்று மனித குலத்தின் ஒற்றுமையைக் கூறுவார். தொடர்ந்து, "பிறப்பினால் எவர்க்கும் - உலகில் பெருமை வாராதப்பா! சிறப்பு வேண்டுமெனில் - நல்ல செய்கை வேண்டும், அப்பா! நன்மை செய்பவரே - உலகம் நாடும் மேற்குலத்தார், தின்மை செய்பவரே - அண்டித் தீண்ட ஒண்ணாதார்" என்று பாடும் கவிமணி குறுகிய சமூக வரையறைகளை - ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்தெறிந்து சமத்துவ - சகோதரத்துவ சமூதாயம் படைப்பதை அவரின் கவிதைகளில் அவதானிக்கலாம். எனினும், "சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை, சாற்றும்கால் நீதி வழுவா நெறிமுறையில் - மேதினியில் இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கில் உள்ளபடி" என 'நல்வழி'யில் காணக்கிடக்கிறது. பொருள் என்னவெனில், 'இரண்டே சாதிகள்தான் உலகிலே உள்ளன. துன்புறுவோருக்குத் துணைபுரிவோர் உயர்ந்த சாதியினர், உதவிபுரியாதோர் தாழ்ந்த சாதியினர், உண்மை நூல்கள் போதிப்பதும் இதுவே' என்பது உயரிய நோக்கில் வகுக்கப்பட்டிருக்கிறது என்பது நம் கவனத்திற்குரியது.

### இலக்கியமாக இருக்கிறதே தவிர இலட்சியமாகவில்லை!

"சாதிகள் இல்லையடி பாப்பா! - குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்; நீதி, உயர்ந்தமதி, கல்வி – அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்" எனப் பாப்பா பாடலில் கூறுகிறார் மகாகவி பாரதி. தொடர்ந்து 'முரசு'இல், "சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில் தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார். நீதிப் பிரிவுகள் செய்வார் - அங்கு நித்தமும் சண்டைகள் செய்வார். சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு தன்னில் செழித்திடும் வையம். ஆதர வற்றிங்கு வாழ்வோம், - தொழில் ஆயிரம் மாண்புறச் செய்வோம்" என முரசறைந்து மனிதர் தங்களுக்குள்ளே உருவாக்கிக்கொண்ட சாதி அடிமைத்தளைகளை வேரறுத்தான் மகாகவி பாரதி. "மயானத்தில் புதைக்க வேண்டிய சாதிப் பேயின் விதைகளை இந்த மனித இதயங்களில் விதைத்தது யார்?" எனக் குமுறுகிறான் கவிப்பேரரசு வைரமுத்து. அறிஞர்களும் கவிஞர்களும் சமத்துவம் - சகோதரத்துவம் பற்றி எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். ஆனால், அவற்றை இலக்கியமாக மக்கள் சுவைக்கிறார்களே தவிர வாழ்வின் இலட்சியமாகக் கொள்ளவில்லை! கலைவடிவங்களாக இரசிக்கிறார்களே தவிர அவற்றைக் கருத்தில் எடுத்துச் செயற்படுத்துவதாகத் தெரியவில்லை!

### உயர்வு மனப்பான்மை

2001ஆம் ஆண்டு யாழ். போதனா மருத்துவமனையில் ஆன்மகுருவாக நான் பணியாற்றிக்கொண்டிருந்த மிக இக்கட்டான காலமது. மிகக்கடுமையான மோதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. குழந்தை ஒன்றுக்கு 'ஒ நெகற்றிவ்' ('O' Negative) இரத்தம் அவசரமாகத் தேவைப்பட்டது. இவ்வகை இரத்தம் உடையவர்கள் ஒப்பீட்டளவில் மிகமிகக் குறைவு! அப்படியிருந்தும் ஒருவாறு ஒருசிலரைக் தேடிக்கண்டுபிடித்து அவர்களைச் சம்மதிக்க வைத்து குருதி நன்கொடைக்குத் தயார்ப்படுத்தியாயிற்று. இருப்பினும், அக்குழந்தையின் பெற்றோர் தாங்கள் 'உயர் சமூகத்தினர்' என பெருமைப்பட்டுக்கொள்வதோடு மற்றவரைக் 'குறைந்த' நிலையில் வைத்துப் பார்ப்பவர்கள் என்பதால் - மனிதம் ஒன்றுதான் - அவர்களில் ஓடும் இரத்தம் ஒன்றுதான் என்பதை இவர்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும் என்ற காரணத்தினால், "ரத்தம் கொடுக்க இருவர் ஆயத்தம். ஆனால், அவர்கள் உங்கள் சமூகத்தைச் சாராதவர்கள்!" எனத் தெரியப்படுத்தவேண்டி இருந்தது. "ஐயோ! அதையெல்லாம் இப்ப பார்க்கேலுமோ? தயவுசெய்து உடனடியா ஆக்களை வரச்சொல்லுங்கோ!" என்றார் குடும்பத் தலைவன் கைகளைக் கூப்பிக்கொண்டு! அவர் சொன்னது சரிதான்! அந்நேரத்தில் 'அதை'ப் பார்க்க இயலாததுதான். "ஒரு நேரம் வரும்! அப்போது நாங்கள் யார் என்பதைப் பார்ப்பீர்கள்?" எனச் சூசகமாகச் சொன்னாரோ என்னவோ! ஐயனே அப்பனே! ஒப்பிலா மணியே!... நம்மவர்களின் மேற்குறிப்பிட்ட மனநிலை எப்போது மாறுமோ என்றுதான் அப்போதும் மன்றாடவேண்டி இருந்தது, இப்போதும் மன்றாடவேண்டி இருக்கிறது!

### ஏன் இங்கு மட்டும் பார்ப்பதில்லை!

"ஐயா, என்ர பிள்ளையின்ர உயிரக் காப்பாத்துங்கோ!..." எனக் கதறி அழும்போது மருத்துவர் என்ன சமூகத்தினன் எனப் பார்த்தா மருத்துவம் செய்யப் போகிறார்கள்? தங்கள் பிள்ளைகள் முதல்நிலை பெறவேண்டும் என முண்டியடித்துக்கொண்டு முன்னணி ஆசிரியர்களிடம் செல்லும்போது அவர் எந்த சமூகத்தவர் என்று பார்த்தா செல்லுகிறார்கள்? தொழில் கிடைக்கவேண்டும், காரியங்கள் கைகூடவேண்டும் என்று முயற்சிக்கும்போது அதிகாரிகள் எச்சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்று பார்த்தா சலுகைகளை நாடுகிறார்கள்? கூடிக் குடிக்கும்போது - அடிக்கும்போது 'சோசலிசம்; '(Socialism) பேசுகிறார்கள், விடிந்ததும் - வெறி முறிந்ததும் 'சாதிசம்' (யான் உருவாக்கிய புதிய சொல்! அகராதிகளில் காணமுடியாது! வேண்டுமென்றால் இனி எழுதப்படும் அகராதிகளில் சேர்த்துக்கொள்ளலாம்!) பார்க்கிறார்கள்.

### 'கோட்டை' தகர்ந்துகொண்டிருக்கிறது!

புலம்பெயர் மண்ணில் வாழ்ந்துகொண்டிருக்கும் நம் முதலாவது தலைமுறையினர் 'சாதிக் கோட்டை'யை தக்க வைத்துக்கொண்டுதான் இருந்திருக்கிறார்கள்! ஆனால், புலம்பெயர் மண்ணில் பிறந்து வளருகின்ற நம் இளம் பிள்ளைகள் இச்சமூகத் தீமைக்கு 'ஆப்பு அடிக்க' ஆரம்பித்திருக்கிறார்கள். நம் தமிழ்ப் பெற்றோர் தங்கள் பிள்ளைகள், "அப்பனே முருகா! இவன் தமிழ்ப் பிள்ளையா பாத்துப் பிடிச்சாலே போதும்!" - "என் ஆண்டவனே! இவள் தமிழ்ப் பெடியனாப் பாத்துக் கட்டினாலே காணும்!" என்ற கட்டத்தில் வந்து நிற்கிறார்கள் என்றால் நிலமை எப்படி மாறியிருக்கிறது என்பதைக் கணித்துக்கொள்ளலாம். தங்கள் சமூகப் பெருமைகளையும் அந்தஸ்துக்களையும் வைத்துப் பெருமை பேசியதோடல்லாமல் மற்றவர்களைக் கீழ்த்தரமாகக் கருதிய பலர் இன்று பேசா மடந்தையராக கூனிக்குறுகி நிற்கிறார்கள். கால - உலக - சூழல் - சமூக மாற்றம் இவர்களை மாற்றிக்கொண்டிருக்கிறது. சாதிபோன்ற நம் அடிமைத்தனங்களை அழித்தொழிப்பதற்கு ஆண்டவனால் வந்த வரப்பிரசாதம்தான் புலம்பெயர் வாழ்வு என்றுகூடச் சொல்லலாம்போல தெரிகிறது.

### நாய்களின் வால்களை நிமிர்த்த முடியாது; நறுக்கவே முடியும்!

"யாதும் ஊரே யாவரும் கேளிர்..." (எல்லா ஊரும் என்னுடைய ஊரே; எல்லா மனிதரும் என் உறவினரே) என 2000 ஆண்டுகளுக்கு முன்பே உலகளாவிய சகோதரத்துவத்தை, 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி'யாகிய தமிழ்க்குடி முன்மொழிந்து வழிமொழிந்து வாழ்ந்து காட்டியது. இப்பெரும் பெருமைக்குரிய அக்குடியே சாதி என்ற சாக்கடையில் இன்று நீந்தி, நீராடி, நீச்சலடித்து மகிழ்கிறது. இச்சமூதாயத் தீமையை கவிக்கோ அப்துல் ரகுமான், "...'இல்லை இன்னும் நான் இந்தச் சாதிதான்' என்கிறாயா? அப்படியென்றால் பிரேதமே! உயிருடையவர்கள் மத்தியில் உனக்கென்ன வேலை?..." என்கின்ற வார்த்தைகள் மூடப்பட்டிருக்கும் உள்ளக்கதவுகளை ஊடறுத்து இற்றைவரையில் உள்நுழைந்திருக்கவேண்டும்! எனினும், இவ்விடயத்தில், என்னத்தைச் சொன்னாலும் நாய்களின் வால்களை நிமிர்த்த முடியாது, நறுக்கவே முடியும்!

அதிர்வுகள் தொ...ட....ரு......ம்........

கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் : anpuomi@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலச் சிறப்பிதழ்

# உண்மைத்தவம் என்றால் என்ன?

## முன்னுரை

கிறிஸ்துவின் பாடுகள் இறப்பு, உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைபொருளில் பங்கெடுத்து மீட்பின் மக்களாக உய்வடைய நாம் மனமாற்றம் பெறுமாறு திருச்சபை அழைப்பு விடுக்கிறது. இம்மனமாற்றத்திற்காக நாற்பது நாள்களை ஏற்படுத்தித் 'தவக்காலம்' என திருச்சபை அழைக்கிறது. கிறிஸ்தவ வாழ்வு எல்லாக் காலங்களிலும் தவத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். என்றாலும் இச்சிறப்புக் காலத்தில் சிறப்பான முறையில் தவங்கள் செய்ய திருச்சபை வலியுறுத்துகிறது. பழைய ஏற்பாட்டில் யோனாவின் அருளுரை கேட்டு நினிவே மக்கள் தவம் செய்தது போலவும், இயேசுபிரான் தம் பணி வாழ்வைத் தொடங்குமுன் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தது போலவும் நாம் நோன்பு செய்திடத் திருச்சபை வகை செய்துள்ளது.

பழைய ஏற்பாட்டில் மனமாற்றம் சடங்குபூர்வமான செயல்களுடன் தொடர்புகொண்டிருந்தது. உண்ணா நோன்பு, கோணி உடுத்திக்கொள்ளல், சாம்பலில் உட்காந்திருத்தல், அழுதல் ஆகியவை இச்சடங்குகளாகும். "தாவீது உண்ணா நோன்பு மேற்கொண்டு இரவெல்லாம் தரையில் படுத்துக்கிடந்தார்". (2 சாமு. 12-16) நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லோரும் நோன்பு இருக்க முடிவுசெய்தார்கள். நினிவே அரசன் தன் அரியணையை விட்டிறங்கி அரச உடையைக் களைந்துவிட்டு சாக்கு உடை உடுத்திக்கொண்டு சாம்பல்மீது உட்கார்ந்தான் (யோனா 4:5-6). இஸ்ரேயல் மக்களின் வழிபாட்டில் பாவம் பற்றிய மனம் வருந்துதல் அழுகையாகக் கலந்திருந்தது.

இவ்வகைச் சடங்குகளில் ஆழமான மனமாற்றம் இருக்கவேண்டும் என அடிக்கடி வலியுறுத்தப்பட்டாலும் பெரும்பாலும் இவை பாவம் குறித்த ஒரு சிறு மனம் வருந்துதலாகவும் நடந்த நிகழ்வுகளின் விளைவுகளினின்று தப்புவதற்கான விருப்பமாகவும் மட்டுமே இருந்தன. கடவுளுடன் புது உறவை ஏற்படுத்தவோ, நீதியின் வழியில் நடக்கவோ வேண்டும் எனும் உணர்வு அவ்வளவாக இருந்ததில்லை. ஆனால் இறைவாக்கினர்கள் மனமாற்றத்திற்காகக் கொடுத்த அழைப்பில் இதயபூர்வமான மாற்றத்தை வலியுறுத்தினர். "இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்" (யோனா 2:12-13). மனமாற்றத்திற்கான இத்தகு அழைப்பு மனிதனின் இருப்பையும், கடவுள் முன்னால் அவனுடைய நிலைப்பாட்டையும் வலியுறுத்தியது. இத்தகு அழைப்பு கடவுளுடன் உள்ள உறவை வலியுறுத்தியது. வரலாற்று நூல்கள் இஸ்ரயேல் எனும் இனத்தின் மனமாற்றத்தை வலியுறுத்தின. ஆனால் இறைவாக்கினர் நூல்கள் தனிப்பட்ட நபர்கள் கடவுளுக்கெதிரான கீழ்ப்படிதலற்ற வாழ்வை விட்டு விட்டு கடவுளை நம்பிட அழைப்பு விடுத்தன. முக்கியமாக எரேமியா, எசேக்கியா நூல்கள் இக்கருத்தை வலியுறுத்தின (எரே 4:1,16:3,36:3, எசே 18:21-28, ஒசே 6:1-6).

இறைவாக்கினரின் இத்தகு அழைப்பு திருமுழுக்கு யோவானின் போதனையில் எதிரொலிக்கிறது. அவரது போதனையின்படி மன மாற்றத்திற்கான காரணம் இறையாட்சியின் வருகையாகும் (மத் 3:2). இயேசுபிரான் இவ்வழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தினார் (மத் 4:17). அது சீடத்துவத்திற்கான அழைப்பாகவும் மாறியது. இது நாம் குழந்தைகளாக மாறுவதற்கான அழைப்பாகவும் (மத் 18:3), எல்லாவற்றையும் விட்டுவிடுவதற்கான அழைப்பாகவும் (லூக் 14:33) அமைந்தது.

திருத்தூதர்கள் இவ்வழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தினர். (திப. 3:19, 26:20) பிற இனத்தாருக்கான போதனையில் இம் மனமாற்றம் தாங்கள் தொழுதுவந்த கடவுளை மறந்து உண்மைக் கடவுளையும் இயேசுவையும் ஏற்றுக்கொள்வதாகவும் அமைந்தது. அது இருளிலிருந்து ஒளிக்கு வருவதாகும் (1 தெச 1:9).

மனமாற்றத்தையும் அதனை அடையாளப்படுத்தும் தவத்தையும்பற்றி திருவிவிலியம் மேற்கண்ட கருத்துக்களைக் கொண்டுள்ளது. இத்தகு கருத்துக்களின் ஒளியில் திருச்சபை மேலும் பல கருத்தாக்கங்களைத் தருகிறது. இப்பின்னணியில் தவம் குறித்து நாம் சற்றுச் சிந்திக்கலாம் .

## தவத்தின் இலக்கணம்

தவம் என்பது கிறிஸ்தவ அருள் வாழ்வின் இயக்காற்றலாகிய மனமாற்றத்தின் பரிமாணம் ஆகும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் பாவத்தையும் தீமையையும் எதிர்த்து நிற்கும் மனப்பான்மை அல்லது நற்பண்புதான் தவம் எனலாம். கிறிஸ்தவ அருள்வாழ்வு திருச்சபை வாழ்வுடன் பின்னிப்பிணைந்தது. எனவே தவம் எனும் நற்பண்பு அருள்சாதனக்கொண்டாட்டத்துடன் நெருங்கிய தொடர்புகொண்டதாக உள்ளது. (பழைய ஏற்பாட்டின் சடங்குமுறைகளும் இங்ஙனம் இருந்தன எனக் கண்டோம்).

ஒரு காலத்தில் விவிலியம் கூறும் மனமாற்றம் தவம் என்று மட்டுமே பார்க்கப்பட்டது. தவம் தனிநபர் சம்மந்தப்பட்டதாகவும், பாவத்திற்கான வெறுப்பாகவும், அதற்கான பரிகாரமாகவும் பார்க்கப்பட்டது. தவம் என்பது ஒருவரின் கடந்தகாலப் பாவத்திற்கான பரிகாரமாகவும், ஒறுத்தலாகவும், அருள்சாதன முறையிலான தனிப்பாவ அறிக்கையாகவும் பார்க்கப்பட்டது. எனவே தவத்தை மனம் வருந்துதலாகவும் பாவத்திற்குப் பரிகாரம் செய்யும் முயற்சியாகவும் அருள் வாழ்வு கருதியது.



தவம் என்பது நீதி மற்றும் பிறரன்பு ஆகிய நற்பண்புகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்பட்டது. கடவுளோடு உள்ள உறவு, அடுத்திருப்போருக்கான நம் கடமை ஆகியவை வலியுறுத்தப்பட்டன. தற்காலச் சிந்தனை இத்தகு கருத்துக்களை உள்ளடக்கினாலும் ஆழமான விளக்கங்களையும் தருகிறது. தற்கால அருள்வாழ்வுச் சிந்தனையாளர்கள் தவத்தை சமுதாயக் கடமையுடன் இணைத்துப் பார்க்கின்றனர். தவம் என்பது எப்போதோ ஒருமுறை மட்டும் நடக்கிற அல்லது அவ்வப்போது மட்டும் நடக்கவேண்டிய செயலன்று. தனிப்பட்ட மற்றும் திருச்சபை சார்ந்த பொறுப்பை ஒருவரின் செயல்பாடுகள் பிரதிபலிக்க வேண்டும். ஆவியின் வழிகாட்டுதலில் கிறிஸ்துவின் சாயலில் நாம் வளர வேண்டும். இத்தகு கண்ணோட்டம் கிறிஸ்தவத் தவத்திற்கு முக்கியத்துவம் நல்குகின்றது.

அருள் வாழ்வில் வளர்ச்சி என்பது பாவம் பற்றிய உணர்வைக் கொண்டதாக இருக்கிறது. இது நம் தனிப்பட்ட பாவம் பற்றியது மட்டுமன்று, மற்றவர்களின் பாவத்தையும் பற்றியதாகும். அத்துடன் சமூகத்தில் மலிந்துள்ள தீமையைக் குறித்த உணர்வும் இதில் உள்ளடங்குகிறது. மேலும் கடவுளின் அன்பை உணர்தல், மற்றவர்களுடன் நமக்குள்ள உறவுகளை உணர்தல் ஆகியவை நம்மை வெட்க உணர்விற்கும், அச்சத்திற்கும், குற்றப்பழி உணர்வுக்கும் தள்ளலாகாது; மாறாக பாவத்தையும் நம்மிடத்திலும் சமுதாயத்திலும் இருக்கும் தீமையையும் செயலூக்கத்துடன் எதிர்க்கும் நோக்கத்தைத் தரவேண்டும்.

நம் பாவத்திற்கோ அல்லது அடுத்தவரின் பாவத்திற்கோ பரிகாரம் செய்வது என்பது ஒருவர் தன்னையே தண்டிப்பதோ அல்லது கடவுளுக்கு ஒரு நேர்ச்சைக் கடன் செலுத்துவதோ அன்று. மாறாக ஒருவரின் கடமைகளையும் தூய வாழ்விற்கான அழைப்பையும் இதயபூர்வமாக ஏற்றுக்கொள்வது. இக்கடமைகளையும் அழைப்பையும் நிறைவேற்ற நன்முயற்சி எடுப்பது. இதில் மற்றவர்களின் கடமைகளைப் பகிர்ந்துகொள்வது அடங்கும். பழைய காலங்களில் இது நோன்பிருத்தல், புலால் உண்ணாமை அல்லது மற்ற ஒறுத்தல் முயற்சிகளாகப் பார்க்கப்பட்டன. தற்கால அருள்வாழ்வு தவத்தின் தனிநபர் சார்ந்த மரபுகளை உள்ளடக்கிக்கொண்டே அதனை விரிவாக்கி, அடுத்திருப்போருடனான உறவுகளையும், கடவுளுடனான உறவுகளையும், மற்றவர்கள் மட்டில் நமக்குள்ள பொறுப்புக்களையும் வலியுறுத்துகின்றது. பழைய காலங்களில் பரிகாரச் செயல்கள்பற்றி அதிகம் பேசப்பட்டது. தற்போது அடுத்தவருக்கு நாம் செய்த தீங்கினை விடுவிப்பது குறித்தும் பேசப்படுகிறது.

## சங்க ஏடுகளும் திருத்தந்தையர் மடல்களும் கூறுபவை

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு தவத்திற்கும் சமூக நீதிக்கும் இடையே உள்ள தொடர்பு மிகுதியாய் வலியுறுத்தப்படுகிறது. திருவழிபாடு பற்றிய இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு தவக்காலம் பற்றிக் கூறுகையில் திருமுழுக்கு மனமாற்றத்தையும் தவத்தின் சமூகப் பரிமாணத்தையும் வலியுறுத்துகிறது. "தவக்காலம் இரு பண்புகளைக் கொண்டுள்ளது. திருமுழுக்கை நினைவிற்குக் கொணர்தல் அல்லது இதற்கென ஆயத்தப்படுத்தல், ஒப்புரவாதல் ஆகியவையே இப்பண்புகள் (திருவெளிபாடு 109).

தவக்கால ஒப்புரவு முயற்சிகள் அகம் சார்ந்தவையாகவும், தனிமனிதர் சார்ந்தவையாகவும் மட்டுமிராமல், புறம் சார்ந்தவையாகவும், சமூகப்பண்புடையவையாகவும் இருக்க வேண்டும். நாம் வாழும் காலத்திற்கும், வேறுபட்ட மண்டலத்திற்கும் நம்பிக்கைகொண்டோரின் நிலைமைகளுக்கும் ஏற்ற ஒப்புரவு முயற்சிகளை ஆதரிக்க வேண்டும் எனவும் அந்த ஏடு கூறுகிறது (திருவழிபாடு110).

திருத்தந்தை 6ஆம் பவுல் வெளியிட்ட பெனித்தேமினி எனும் மடல் மனமாற்றத்தின் சமூகப்பரிமாணத்தையும் தவத்திற்கும் உலகின் முன்னேற்றத்திற்கும் இடையேயான தொடர்பையும் வலியுறுத்துகிறது. மத்தியகால மற்றும் திரிதெந்தின் சங்கப் போதனைகளான ஒறுத்தல், தன்னல மறுப்பு ஆகியவை குறித்து இம்மடல் பேசினாலும் தவமுயற்சிகளைச் சமூகச் செயல்பாடாகவும் காண்கிறது.

தவம் என்பது நம்பிக்கையைக் காத்தல், தன் வாழ்வின் நிலைக்கேற்ற கடமைகளைச் செய்தல், தன் பணியில் ஏற்படும் துன்பங்களைத் தாங்குதல் ஆகியவற்றில் அடங்கியிருக்கிறது என இம்மடல் கூறுகிறது (அதி 2-3). மேலும் நோயினாலும், ஏழ்மையினாலும் துரதிஷ்டங்களாலும் பாதிக்கப்பட்ட திருச்சபையின் உறுப்பினர்கள், அல்லது நீதிக்கான ஆர்வத்தின் காரணமாக துன்புறுத்தப்பட்டோர் தங்கள் துயரங்களை கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைப்பதிலும் தவம் அடங்கியுள்ளது. இதன்மூலம் தவத்திற்கான கட்டளையை நிறைவேற்றுவது மட்டுமன்று சகோதரர்களுக்கும், தங்களுக்கும் அருள்வாழ்வைப் பெற்றுத்தர இயலும். இவ்வருள் வாழ்வு நற்செய்தி போதிக்கும் பேறுபெற்ற நிலையாகும் எனவும் இம்மடல் கூறுகிறது (அதி 3-B). திருத்தந்தை 6ஆம் பவுல் பரிபூரண பலன்கள் குறித்த புதுக்கருத்துக்களையும் 'இந்துல் ஜென்கியரும் தோக்திரினா' – Indul gentiarum Doctrina எனும் மடலில் தந்துள்ளார். அதில் பாவநீக்கம் குறித்த புதுவிளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. கடவுளுடன் உள்ள உறவைப் புதுப்பித்தலும், பாவத்தினால் வலுவிழந்துபோன தனிமனித மற்றும் சமூக மதிப்பீடுகளை புதுப்பிக்கச் செய்தலும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளன. (எண் 2-3).

திருத்தந்தை 2ஆம் ஜோன் போலும் தம் உரைகளிலும் மடல்களிலும் இத்தகு க்ருத்துக்களை நல்கியுள்ளார். இவை அனைத்திலும் தவம் என்பது திருச்சபையின் சமுதாயம் குறித்த போதனைகளுடனும், சமுதாயப்பணிகளுடனும் பார்க்கப்படுகிறது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# கல்வாரி கற்பிக்கும் வீரம்

கி. அருளப்பு,
தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர். விடத்தல்தீவு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குற்றமற்ற, கபடமற்ற ஒருவரைப் பிடித்துச் சட்டத்திற்கு விரோதமாக மரண தட்டனையை விதித்து, சிலுவையில் அறைந்து கொன்றதை விவிலியத்தில் நாம் வாசிக்கின்றோம். அன்பின் ஊற்றும் நீதியின் இருப்பிடமான ஒருவரை, இறைவனும் மனிதனும் ஆனவரை, மூன்று ஆணிகளில் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே தொங்கச் செய்கிறார்கள். யூதேயா, ஜெருசலேம், சமாரியா என்று இறையரசைப்பரப்பி, நற்செய்தியை எடுத்துரைக்க நடந்து நடந்து தேய்ந்த திருப்பாதங்களை இதோ மரக்கட்டையென சிலுவை மரத்தோடு ஒன்றிக்கச் செய்கிறார்கள்.

அன்பின் வார்த்தைகளை, இரக்கத்தின் வார்த்தைகளை, மீட்பளிக்கும் வார்த்தைகளை எப்போதுமே ஒலிபெருக்கியென முழங்கிக்கொண்டிருந்த யேசுவின் நாவோ, தம்முடைய வார்த்தைகளால் உலகத்தைப் படைத்த பரமனின் நாவோ, தாகத்தால் வறண்டு வெதும்புகிறது. அன்று அவருக்கு நடந்த கொலையில் பல ஆட்கள், பல சக்திகள் பலவாறாகத் துணை நிற்கின்றார்கள். பரிசேயர், சதுசேயர், தலைமைக் குருக்களின் சூழ்ச்சியில் சிக்கிய யூதாஸ் கரியோத், உண்மையை மறைத்து, நீதியை மறந்து, குற்றமற்ற யேசுவிற்கு மரணதண்டனை விதித்த பிலாத்து என இக்கொலையில் பலர் சம்மந்தப்பட்டிருந்தனர்.

உண்மைக்காக உயிர் கொடுக்கத் துணிவோமென்று பெருமை பாராட்டின அன்புச் சீடர்களில் ஒருவன் இயேசுவை முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்தான். மற்றொருவன் அவரைத் தெரியவே தெரியாதென்று மறுத்துச் சொன்னான். மற்றவர்களோ ஓடிமறைந்தார்கள். யேசுவைக் கொலைசெய்த அதே சக்திகள் இன்றும் இறைமக்களைக் கொலைசெய்துகொண்டேதான் இருக்கிறார்கள். உண்மையும் நீதியும் உறங்கும்போதெல்லாம் இந்தக் கொலை நம் சமுதாயத்தில் தொடர்ந்து நடக்கிறது.

கல்வாரி மலைக்கு பல சிறப்புக்கள் உண்டு. இரண்டு உலகங்களும் சந்தித்து சங்கமமாகும் இடம் கல்வாரிமலை. சாவின் முடிவும், வாழ்வின் தொடக்கமும், பாவத்தின் முடிவும், புண்ணியத்தின் தொடக்கமும் இந்தக் கல்வாரி மலைதான். மனித பாவத்தின் கொடூரமும், இறை அன்பின் ஆழமும் சந்திக்குமிடம் கல்வாரி மலை. மனித பலவீனமும், இறைவனின் பலமும் சந்தித்து சவால் ஏற்கும் இடம் இந்தக்கல்வாரி மலை. இறைமகன் செபிக்க, கொலைகாரக்கூட்டம் ஆனந்த ஆர்ப்பாட்டம் செய்த மலை கல்வாரி. நரகத்தை மோட்சத்திற்கு பண்டமாற்றம் செய்த இடம் இந்தக்கல்வாரியே. இறைவனும் மனிதனும் இரண்டறக்கலந்த இடம் கல்வாரிமலைதான். பரமனின் அன்பையும், மன்னிப்பையும் பெறும் இடமும் இந்தக் கல்வாரி மலைதான். எதற்காக இந்தக் கல்வாரி மலையை நம் சிந்தனைக்கு எடுத்துள்ளோம் என்றால் ஆண்டவர் யேசுவின் ஆறுதலான மன்னிப்பு வார்த்தைகளைக் கேட்டு, மன்னிப்பையும் மறுவாழ்வையும் நமதாக்கிக்கொள்ளவே கல்வாரியை நம் சிந்தனைக்கு எடுத்துள்ளோம்.

இன்னும் எத்தனையோ முறை "தந்தையே இவர்களை மன்னியும்" என்று செபித்தார். "உன் பகைவர்களை அன்பு செய். உன்னைப் பழிப்பவர்களுக்கு ஆசி கூறு. உன்னை வெறுப்பவர்களுக்கு நன்மை செய். உன்னைத் துன்புறுத்துவோருக்காகச் செபி." என்ற இயேசுவின் போதனை கல்வாரி மலையில் காவியமாகிறது. மத்தேயு 5:42-45 வார்த்தைகள் இதை விபரிக்கின்றன. இவை கிறிஸ்தவ வாழ்வில் ஊறிப் போகவேண்டிய ஒன்று.

எங்காவது எப்போதாவது எண்ணத்தில் வருபவனல்ல இறைவன். எங்கும் எப்போதும் எண்ணத்தில் நிறைந்திருப்பவன் - உள்ளத்தில் உறைந்திருப்பவன் இறைவன். அந்த இறைவனை இனம் கண்டுகொள்வதுதான் கல்வாரி கற்பிக்கும் வீரம். உயிர்த்த யேசுதான் உலகிற்கு மையம்; சரித்திரத்திற்கு மையம். யேசு உயிர்த்த நிகழ்ச்சிதான் கிறிஸ்தவத்திற்கும் யேசுவின் வரலாற்றிற்கும் அடிப்படை. "கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் எங்கள் போதனைகள் பொருளற்றதே" என்று புனித பவுல் தனது நிருபத்தில் கூறியுள்ளார் (1 கொரிந்தியர் 15:13-15).

*மண்ணில் சிலுவை தாங்காதவன்*
*விண்ணில் மகிமையின் முடி தாங்குவதில்லை!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநிலைப்படுத்தப்படவுள்ள புதிய குருக்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

### லேனாட் றொணிஸ் நிமல் வாஸ் (ஜெனிபட்)

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர், வங்காலைப் பங்கு, வங்காலைக் கிராமம் புனித ஆனாள் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. அந்தோனி லேனாட் வாஸ், சந்தியா எப்போமியா பறுனாந்து தம்பதிகளின் புதல்வனாக 23.07.1984இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை வங்காலை மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்னார் மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

வங்காலைப் பங்குத்தந்தையாக இருந்த அருட்பணியாளர் ஜே. தேவசகாயம்பிள்ளை அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

28.11.2013 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் நானாட்டான், பள்ளிமுனை ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 27.04.2014 அன்று காலை 6.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### இசையாஸ் அன்ரனி சோசை (லக்ஷன்)

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர் வங்காலைப் பங்கு, வங்காலை புனித ஆனாள் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. பிரான்சிஸ் இசையாஸ் சோசை, பத்தினாதன் லூர்து நாயகி சோசை தம்பதிகளின் புதல்வனாக 07.05.1985 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை வங்காலை மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்னார் மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

வங்காலைப் பங்குத்தந்தையாக இருந்த அருட்பணியாளர் ஜே. தேவசகாயம்பிள்ளை அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர் மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்பக் குருத்துவ உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து யாழ்ப்பாணம் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

28.11.2013 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் தாழ்வுபாடு, விடத்தல்தீவு ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை நிறைவுசெய்தார்.

இவர் தனது முதல் திருப்பலியை 27.04.2014 அன்று காலை 6.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### சொர்ணம் வரதராஜன் குரூஸ் (வரதன்)

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த இவர் தாழ்வுபாடு பங்கு, தாழ்வுபாடு கிராமம் புனித சூசையப்பர் ஆலயத்தைச் சேர்ந்த இவர் திரு. திருமதி. யோ. சொர்ணம் குரூஸ், ச. அன்னம்மா குரூஸ் (வனிதா) தம்பதிகளின் புதல்வனாக 24.01.1980இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மன்/ தாழ்வுபாடு றோ.க.த.க. பாடசாலையிலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

இவர் அருட்பணி. ஒல்பன் இராஜசிங்கம் அ.ம.தி அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்று யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித வளனார் அ.ம.தி சிறிய குருமடத்தில் இணைந்து அங்கு தனது ஆரம்ப குருத்துவ உருவாக்கலைப் பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், தொடர்ந்து யாழ்ப்பாணம் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

09.12.2013 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயத்தில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 26.04.2014 அன்று காலை 08.00 மணிக்கு தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### அடைக்கலம் ஜேசுராஜ் குரூஸ் (றொக்சன்)

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த இவர், தாழ்வுபாடு பங்கு, தாழ்வுபாடு கிராமம் புனித சூசையப்பர் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. எஸ். அடைக்கலம் குரூஸ், எ. இசபெல்லா பீரிஸ் தம்பதிகளின் புதல்வனாக 11.12.1982இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மன்/ தாழ்வுபாடு றோ.க.த.க. பாடசாலையிலும், கொழும்புத்துறை யாழ்/ சென் ஜோசப் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணி. ஒல்பன் இராஜசிங்கம் அ.ம.தி அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித வளனார் அ.ம.தி சிறிய குருமடத்தில் இணைந்து அங்கு தனது ஆரம்ப குருத்துவ உருவாக்கத்தைப் பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், தொடர்ந்து யாழ்ப்பாணம் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

09.12.2013 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் ஹப்புத்தளை புனித வனத்து சின்னப்பர் ஆலயத்தில் தனது திருத்தொண்டர் பணியை நிறைவுசெய்தார்.

இவர் தனது முதல் திருப்பலியை 26.04.2014 அன்று காலை 08.00 மணிக்கு தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### செபமாலை யூட் சைலன்

கிளரிசியன் துறவற சபையைச் சேர்ந்த இவர், முருங்கன் பங்கு சுண்டிக்குளி கிராமம் கர்த்தர் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. அலசு செபமாலை, செபமாலை ஞானப்பு தம்பதிகளின் புதல்வனாக 18.08.1981இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மன்/ முருங்கன் மகாவித்தியாலயத்திலும், உயர் கல்வியை நீர்/ தோப்பு மகா வித்தியாலயத்திலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர்கள் மரியதாசன் (சீமான்) மற்றும் அருள்ராஜா. CMF ஆகியோரினால் அழைத்தல் ஊக்கம் பெற்று கட்டுவ புனித கிளாரட் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தனது ஆரம்ப குருத்துவ உருவாக்கத்தைப் பெற்றுக்கொண்ட இவர் பின்னர் 1ம் வருடம் புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும், 2ம் வருடம் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்திலும் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

19.10.2013 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் கிரபத்தெனிய புனித அந்தோனியார் ஆலயம், பலாங்கொட, வழுத்தோட்ட ஆங்கிலக் கல்வி நிலையம், சூரியகந்த ஆகியவற்றில் தனது திருத்தொண்டர் பணியை நிறைவுசெய்தார்.

இவர் தனது முதல் திருப்பலியை 25.04.2014 அன்று காலை 09.00 மணிக்கு சுண்டிக்குளி கர்த்தர் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

# சர்வதேச விசாரணை வேண்டும்!

## மன்னார் ஆயர் உட்பட 204 கிறிஸ்தவ மதகுருமார் ஐ.நா. விற்கு கடிதம்

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 25வது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் ஒரு வலுவான மற்றும் செயற்பாட்டு ரீதியான தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வடக்கு கிழக்கில் திருப்பணியில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவ மதகுருமார் இதற்கு முன்னர் மனித உரிமை ஆணைக்குழுவின் 19 மற்றும் 22வது கூட்டத் தொடரில் இலங்கையில் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தோம். இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நேரடியான மற்றும் கேட்டறிந்த அனுபவங்கள் எமக்குள்ளது. எமது சொந்த அனுபவங்களையும் நாம் கண்டறிந்த விடயங்களையும் நாங்கள் ஐ.நா நிபுணர்கள் குழு, ஐ.நா மனித உரிமை ஆணையாளர், நன்கு அறியப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகளில் பரிந்துரைத்துள்ளோம்.

நாங்கள் உட்பட பல நாடுகளும், அமைப்புகளும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பனவும் இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணைகளை நடத்துமாறு அரசாங்கத்திடம் கோரி வந்தபோதும் கடந்த 5 வருடங்கள் உள்நாட்டுக் கட்டமைப்பின் ஊடாக உண்மை மற்றும் நீதியான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை. மறுபுறம் உள்நாட்டு வழிமுறையில் ஈடுபடுமாறு வலியுறுத்தும் நாங்கள் உட்பட ஏனையோர் மிரட்டல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றோம். வரையறுக்கப்பட்ட பரிந்துரைகளை செய்துள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் அமுல்படுத்தப்படவில்லை.

குறைந்த பட்சமாக இரண்டு மொழிகளில் தேசிய கீதம் பாடப்பட வேண்டும். இறந்தவர்களுக்கான பொதுவான நினைவுதினம் அனுஸ்டிக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரைகள்கூட இதுவரை அமுல்படுத்தப்படவில்லை.

காணாமல்போதல் பாலியல் துஸ்பிரயோகங்கள், பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழான கைதுகள், தடுத்து வைத்தல், சித்திரவதைகள் ஒன்றுகூடும் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் தொடர்ந்தும் மீறப்பட்டு வருகின்றன. அத்துடன் மதச்சுதந்திரமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள், அதன் கொள்ளைகளுக்கு சவால் விடுப்பவர்கள், மனித உரிமைகளை ஊக்குவிப்போர் அது சம்பந்தமாக சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவோர் பயங்கரவாத ஆதாரவாளர்கள் அல்லது தேசத்துரோகிகள் என முத்திரை குத்தப்படுகின்றனர். இவர்கள் அரசாங்க பாதுகாப்பு படையினரின் அச்சுறுத்தல்களுக்கும் இடையூறுகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். இதனைக் காரணமாக வைத்து எங்களில் சிலரும் இலக்கு வைக்கப்படுகின்றனர் என அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக்காணும் அருட்பணி. யூட் குலாஸ்

மன்னார் மறைமாவட்டத்தில், தேவ அழைத்தலின் விளை நிலம் என குறிப்பிடப்படுகின்ற வங்காலையில் திரு. சந்தியா குலாஸ் திருமதி. சலோமை பறுனாந்து தம்பதிகளின் மகனாக பிறந்த அருட்பணி. யூட் குலாஸ் வங்காலைப் பங்கின் 13வது குரு ஆவார். இவர் ஆரம்பக் கல்வியை மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை யாழ்/ புனித பத்திரிசிரியார் கல்லூரியிலும் கற்றார். செபமாலைத்தாசர் சபையில் சேர்ந்து இறைவனின் பணி செய்ய அழைத்தலூக்கம் பெற்ற அடிகள் அவர்களின் திறமை கண்டு இந்தியாவின் பெங்களுர் நகருக்கு மெய்யியல் கல்வியையும், இறையியல் கல்வியையும் பயில்வதற்காக அனுப்பப்பட்டார். பின்னர் 30.3.1989ம் ஆண்டில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் அப்போதைய மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

பின்பு 1992ம் ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்து ஐந்து ஆண்டுகளாக பிரான்ஸ் நாட்டில் குருத்துவப் பணியாற்ற ஆர்வம்கொண்டு செயற்பட்டார். 1996ஆம் ஆண்டில் டென்மார்க் ஆயரின் அழைப்பைப் பெற்று டென்மார்க்கில் வாழும் தமிழ் மக்களுக்குச் சேவையாற்ற அழைக்கப்பட்டார். 2002ம் ஆண்டில் செபமாலைத்தாசர் உயர் சபையின் தலைவர் டென்மார்க் நாட்டிற்கு வருகை தந்து அடிகள் அவர்களை டென்மார்க் மேற்றாசனக் குருவாக இணைப்பதற்கு தேவையான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டார். 2005ம் ஆண்டளவில் டென்மார்க் நாட்டின் பிரஜாவுரிமையைப் பெற்றார். குலாஸ் அடிகளது சேவையில் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்த டென்மார்க் மறைமாவட்ட ஆயர் அவர்கள் இவரை அங்குள்ள மறைமாவட்டத்தில் நான்கு பெரிய ஆலயங்களுக்குப் பங்குத்தந்தையாக்கி 1.2.2008ம் ஆண்டில் நியமித்தார்.

தற்போது அருட்தந்தை யூட் குலாஸ் அவர்கள் டனிஸ் மக்களுக்குப் பங்குத்தந்தையாகவும், டென்மார்க் வாழும் தமிழ் மக்களுக்கு ஆன்மீகக் குருவாகவும் சேவையாற்றி வருகின்றார்.

2014ம் ஆண்டு பங்குனித் திங்கள் 30ம் நாள் இவர் தனது குருத்துவப் பணியில் 25 ஆண்டுகள் நிறைவை டென்மார்க் நாட்டில் கொண்டாடுகின்றார். அருட்தந்தை யூட் குலாஸ் அடிகளை டென்மார்க் பங்கு மக்களோடும், புலம் பெயர்ந்து அங்கு வாழும் தமிழ் மக்களோடும் இணைந்து மன்னார் மறைமாவட்ட மக்களாகிய நாமும் உளமாற வாழ்த்துகின்றோம்.

**பிறின்ஸ் டயஸ், வலயக் கல்வித் திணைக்களம், மன்னார்.**

# மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்கப் பெண்கள் பணிக்குழு

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு கடந்த 15.012014 அன்று மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க பெண்கள் பணிக்குழு இயங்கிவரும் பங்குகளிலிருந்து வருகை தந்த உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து பொங்கல் விழாவைக் கொண்டாடினர். இதன் இயக்குனர் அருட்பணி S.K. தேவராஜா அடிகளின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு விழாசிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அதன்பிறகு இந்த அமைப்பிற்கான ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் புதிய செயற்குழு உறுப்பினர்களாக தலைவர் - அருட்சகோதரி சகாயராணி (CIC), துணைத்தலைவர் - அருட்சகோதரி சாந்தி (மினிம் சபை,) செயலாளர் - திருமதி T.S. லீலாவதி, சாந்திபுரம், பொருளாளர் - திருமதி வு. அமலஜோதி, சாந்திபுரம், இணைச்செயலாளர் - திருமதி மஞ்சு பீரிஸ், பள்ளக்கமம், நியமன உறுப்பினர் - திருமதி ஜெசி அரியரெட்னம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பின்னர் பங்குமட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களும், பொதுவான திட்டங்களும் ஆராயப்பட்டன. இறுதியாக மாலை 3.00 மணியளவில் ஒன்றுகூடல் இனிதே நிறைவுபெற்றது.

### பெண்கள் பணிக்குழு பற்றிய ஓர் பார்வை

மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்கப் பெண்கள் பணிக்குழுவானது மன்னார் மறைமாவட்ட குடும்பநலப் பணி ஆணைக்குழுவின் ஒரு அங்கமாக, கத்தோலிக்கப் பெண்களின் பங்கேற்பையும் தலைமைத்துவத்தையும் மேம்படுத்த உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு.

**குறிக்கோள்: (Mission)**

1. திருச்சபையிலும் சமுதாயத்திலும் பெண்களின் முழுமையான விடுதலைக்காக உழைத்தல்.



2. பெண்களின் பங்கேற்பையும் தலைமைத்துவத்தையும் வளர்த்தல்.
3. பெண் - ஆண் என்ற ஏற்றத்தாழ்வின்றி பெண்கள் அனைத்திலும் சமத்துவம் பெற்றுவாழும் இறையாட்சிச் சமுதாயத்தை உருவாக்குதல்.

**தொலைநோக்குப் பார்வை: (Vision)**

1. கத்தோலிக்கப் பெண்கள் அனைவரும் இறைஉணர்வால் தூண்டப்பெறல்.
2. நற்செய்தி விழுமியங்களான அன்பு, நீதி, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம், மனித மாண்பு ஆகியவற்றின் அடிப்படையில் வாழ்ந்து பெண் விடுதலைக்குத் தங்களையே அர்ப்பணித்தல்.
3. திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் அமைப்பிலும் முழுமையான உரிமைகளைப் பெற்று அனைத்திலும் தங்களுக்குரிய பங்கேற்பும் தலைமைப் பொறுப்பும் ஏற்று இவற்றின் நிறைவாக ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குதல்.

**தலைவர், கத்தோலிக்கப் பெண்கள் பணிக்குழு,மன்னார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் – 09 மாணவர்களுக்கான

# வினா – விடைத் தொகுப்பு - 2013 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ அல் - அஸ்ஹர் ம.வி

01. இயேசுவின் நான்கு வகைப் புதுமைகளும் எவை?
அ. குணமளித்தல் ஆ. இறந்தவர் உயிர்பெறச் செய்தல்
இ. அசுத்த ஆவியை விரட்டுதல் ஈ.இயற்கை சீற்றத்தை அடக்குதல்
02. தம் ................ வாயிலாக இயேசுக்கிறிஸ்து பசாசின் பிடியிலிருந்து மக்களை விடுவித்தார். புதுமைகள்
03. இயேசு கை சூம்பியவரை நோக்கிக் கூறியது என்ன?
"உமது கையை நீட்டும்"என்றார்.
04."ஐயோ! நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு என்ன வேலை? ................" இவ்வாறு கூறியவர் யார்?
பேய்பிடித்திருந்த ஒருவர்
05. "கட்டுக்களை அவிழ்த்து அவனைப்போக விடுங்கள்" இது யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
இயேசுவால், அங்கு நின்றவர்களிடம், இலாசரை உயிர்ப்பித்தபோது.
06. என் தந்தையிடமிருந்து .......... பெற்றவர்களே, வாருங்கள்; உலகம் தோன்றியதுமுதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ......... உரிமைப்பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆசி, ஆட்சியை
07. திருவிவிலியத்தில் இறை ஏவுதல் பயன்படுத்தப்படும் மூன்று வழிகளும் எவை? செயல், பேச்சு, எழுத்து
08. திருவிவிலியத்தின் பயன்பாடு பற்றி புனித பவுல் 2 திமொத்தேயு 3:16இல் கூறும் கருத்தை எழுதுக?
மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும், கண்டிப்பதற்கும், சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப்பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது.
09. பெரிய இறைவாக்கினர்கள் நால்வரின் பெயரைத் தருக?
எசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல்.
10. உலகத் தொடக்கத்திலே இயேசு என்ன வடிவில் இருந்தார்?
வார்த்தை வடிவில்.
11. பொதுத் திருமுகங்களைப் பட்டியற்படுத்துக.
எபிரேயர், யாக்கோபு, 1பேதுரு, 2பேதுரு, 1யோவான், 2யோவான், 3யோவான், யூதா
12. வெளிப்படுத்தப்பட்ட இறைவாக்கு எது? திருவெளிப்பாடு
13. புனித பவுலின் திருமுகங்கள் எத்தனை? 13
14."நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" இவ்வார்த்தைப் பகுதி திருவிவிலியத்தில் எந்தப்பகுதியில் கூறப்பட்டுள்ளது? லூக்கா 4:21
15. நல்லதை விரும்பித்தேடி செயற்படுத்தவும் தீமையை அகற்றவும் எமக்கு அறிவுறுத்துவது எது? மனச்சான்றின் குரல்
16. புதிய ஏற்பாட்டிலுள்ள வரலாற்று நூல்களைப் பெயரிடுக?
மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், திருத்தூதர்பணி
17. .......... இறைவார்த்தையில் செயற்பட்டார். தூய ஆவி
18. "இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும் என்றேன்" இவ்வாறு கூறியவர் யார்? எசாயா
19. எசாயா செபித்துக்கொண்டிருக்கையில் இறைவனது மகிமையைக் .................... கண்டார். காட்சியில்
20. "கடவுள் முன்னிலையில் எல்லோரும் சமம்" என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர் யார்?
புனித மாட்டீன் தெ போரஸ்
21. ஒன்றித்திருத்தல் என்பது எதில் உருவாகவேண்டும்?
உள்ளத்தில்
22. எச்செயற்பாடுகளில் ஒற்றுமை வரவேண்டும்?
கருத்துப்பரிமாற்றத்தில், ஏற்றுக்கொள்ளுதலில், பாராட்டுதலில்.
23. ................ செயற்படுவதே கிறிஸ்தவ அழைப்பு.
அர்ப்பணிப்புடன்
24. இயேசு ஏன் இவ்வுலகிற்கு வந்தார்?
தன்னலமற்ற அன்பின் நிமித்தம் உலக மாந்தர் அனைவரையும் மீட்பதற்காக.
25. ....... செயல்களில் ஈடுபடுவது சட்டத்தைவிட மேலானது.
இரக்கச்
26. ........... மென்மையான உணர்வுகளினால் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். மனிதம்
27. "இதோ என் ................. உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன்." உள்ளங்கைகளில்
28. ............... குரலுக்கு செவிமடுத்து அறிந்து பின்பற்றி வாழ்வது மந்தையின் பண்பாகும். நல்லாயனின்
29. .................. மனுவுருவானார் என் உள்ளத்தில் குடிகொண்டாரே.
தெய்வீகமே
30. மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்கு இன்றியமையாதது எது?
இறைவார்த்தை
31. வானமும் பூமியும் அழிந்துபோனாலும் என்றும் அழியாதது எது? இறைவார்த்தைகள்
32. உலகில் முதன்முதலில் அச்சேறிய நூலும், புகழ் பெற்ற நூலும் எது? திருவிவிலியம்
33. பழைய ஏற்பாட்டின் முக்கிய நிகழ்வுகள் இரண்டைக் குறிப்பிடுக?
விடுதலைப்பயணம், 10 கட்டளைகள்.
34. நல்ல ஆயனின் பண்புகள் இரண்டு தருக?
- ஆடுகளைப் பெயர் சொல்லி அழைத்தல்.
- ஆடுகளுக்காக உயிரைக் கொடுத்தல்
35. இயேசு திராட்சைச் செடி நாம் அவரது ................. கிளைகள்.
36. ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தவர்கள் யார்?
நம்பிக்கைகொண்ட மக்கள்
37. மறையுடலென அழைக்கப்பட்டது எது? திருச்சபை
38. மனமாற்றத்திற்கென விசேடவிதமாக ஒதுக்கப்பட்ட காலம் எது? தவக்காலம்
39. இயேசு மரணம் வரை ................ எமக்கு மீட்பு கிடைத்தது.
கீழ்ப்படிந்தமையால்

## புனிதரின் பாதையில் .........

### 09ஆம் பக்கத் தொடர்ச்சி

எருசலேமின் ஆயராக நியமனம் பெற்ற மறு ஆண்டில் மிகப்பெரிய சிலுவை, ஒளிமயமாய் விண்ணில் காணப்பட்டுக் கல்வாரி மலையின்மேல் இறங்கி, இன்னும் மிக ஒளிமயமாக பல மணி நேரம் ஒளிர்ந்ததை இவரும் ஜெருசலேம் மக்களும் கண்டு வியந்தார்கள். இக்காட்சிக்குப்பின் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் உறுதிப்பட்டனர். இயேசுவை அறியாத பலர் மெய் மறையில் வந்து சேர்ந்தனர்.

உரோமைப் பேரரசனும் கிறிஸ்தவ மறையின் பகைவனுமான ஜுலியன், இப்புதுமையைக் கேட்டு வெறிபிடித்தவன்போல் சத்திய வேதத்தை அழித்து ஒழிக்கும் நோக்கத்துடன் யூதர்களையும், புத்தர்களையும் தூண்டிவிட்டான். யூதர்களின் பழைய ஆலயங்களைப் புதுப்பிக்க ஏராளமான பொருள் உதவி கொடுத்தான். ஆனால் சிரில் இதைக்கண்டு நகைத்தார். ஆண்டவரின் உறுதிமொழி நிறைவேறும் என்று விசுவசித்தார். அவ்வண்ணமே ஆயிரக்கணக்கான யூதர் வேலை செய்து கொண்டிருந்தபோது அடித்தளத்தினின்று புறப்பட்ட நெருப்பாலும் நிலநடுக்கத்தாலும் பலர் மாண்டதைக்கண்டு அரசரும் மற்றவர்களும் நாணி உடனே வேலையைவிட்டு விலகினர்.

**செயற்பாட்டிற்கு :**

நாம் அன்னை திருச்சபையின் போதனையைத் தளராத விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்வோம்.

## தவக்கால கல்வாரி....

### 01ஆம் பக்கத் தொடர்ச்சி

இது தொடர்பாக பாதயாத்திரைக் குழு சார்பாக வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. எம். ஜெயபாலன் அவர்கள் பங்குத்தந்தையர்களுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

இப்பாதயாத்திரைபற்றி இறைமக்களுக்கு அறிவுறுத்தி ஆயத்தம் செய்யும்படியாக அன்போடு வேண்டிக்கொள்கிறோம்.

- ஒவ்வொரு பங்கும் இரண்டு பொறுப்பான தொண்டர்களை தெரிவுசெய்து அவர்களின் பெயர்களை எமக்குத் தரவேண்டும்.
- பாடசாலை மாணவர்கள் இதில் பங்கெடுப்பது வரவேற்கப்படவில்லை.
- ஒவ்வொரு நபருக்கும் தலா ரூபா 300.00 கட்டவேண்டும். (உணவிற்கு மட்டும்)
- பங்குபற்றுபவர்களின் பெயர்ப்பட்டியல் பணத்தோடு எமது வாழ்வுதயத்திற்கு இம்மாதம் 23ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

## வவுனியா தேசிய கல்வியியற் ......

### 7ஆம் பக்கத் தொடர்ச்சி

திரு. பேர்ணாட் பற்றி கூறுவதற்கு ஆயிரம் விடயங்கள் இருக்கின்றன. அவரின் மறுபக்கம் ஒன்று இருக்கின்றது. அதுதான் இரக்கமும் இனிமையும் எளிமையும் நிறைந்தவர், குழந்தைகள்மேல் அதீத பிரியம் கொண்டவர். இல்லறத்தில் நல்ல தலைவனாக, தகப்பனாக தனது கடமையை நிலைநாட்டியவரும்கூட. ஆனால் நிர்வாகம் என்று வந்தால் அங்கு முகமூடி ஒன்று அணியப்பட்டிருக்கும். கரடுமுரடான ஒரு நபர் நாற்காலியில் அமர்ந்திருப்பார் என்பதுதான் உண்மை. அது கடமையின் தேவைப்பாடும்கூட!

தனது வாழ்க்கையை உயர்ந்த இலட்சியங்களுடனும், கொள்கைகளுடனும் வாழ்ந்துகொண்டிருக்கும் பேர்ணாட் அவர்கள் ஓய்வுபெற்றிருப்பது வயதின் நிமித்தமே தவிர பணியின் நிமித்தமல்ல. அவரின் அறிவும் ஆற்றலும் கல்விச் சமூகத்தின் வற்றாத தேவையாக இருக்கின்றது. அவர் இன்னும் நீண்ட காலங்கள் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ்ந்து பணியாற்ற வேண்டும் என்பது கல்விச் சமூகத்தின் வாழ்த்தாகவும் விருப்பமாகவும் இருக்கின்றது.

**மன்னார் மறைமாவட்டம் சார்பாக இவருக்கு மன்னார் ஆயர், குருக்கள், துறவியர் மற்றும் இறைமக்கள் அனைவரினதும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மன்னா பத்திரிகை மகிழ்வடைகின்றது.**

**இறையாசீர் என்றும் அவரோடு இருக்கும்.**

## உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி- 127

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திலிருந்து எரேமியாவின் நூலுக்குச் செல்கின்றோம், எரேமியாவும் எசாயாவைப்போல ஒரு முக்கியமான இறைவாக்கினர்.

எசாயா கி.மு (8ம்) நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். அப்படியென்றால் கி.மு 750ம் ஆண்டுகளுக்குப் பின்பு வாழ்ந்தவர். இந்நாட்களில் தென்னாடு யூதா அசீரியாவின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருந்தது. எரேமியா கி.மு 7ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 6ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். அப்படியானால் அவர் கி.மு 625 முதல் 575ம் ஆண்டுகளுக்குள் வாழ்ந்திருக்கலாம் எனக் கொள்ளலாம். அந்நாட்களில் அதே யூதா பபிலோனின் அடிமைத்தனத்துக்குள் நுழையவேண்டி ஏற்பட்டது.

கைநிறைந்த வளங்களும் - மகிழ்ச்சியான வாழ்வும் மனிதனை இலகுவாகத் திசைமாற்றி சீர்கேடான வாழ்வுக்கு இழுத்துச் சென்று கொண்டிருந்த அவ்வேளையில் தம் நெறிகேடுகளுக்கு இயைந்த கடவுள்களை உருவாக்கி, தமக்கு விருப்பமான வழிபாட்டு முறைகளையும் புகுத்தி, பாவ வாழ்வு வாழ்ந்து இறைவனைவிட்டுத் தூரமாய் மக்கள் விலகி நின்றார்கள். தங்கள் சொந்தப் பிள்ளைகளைக்கூட உயிரோடு பலியிடும் அளவுக்கு அவர்கள் மனம் கடினப்பட்டிருந்தது.

இவ்வித இழிந்த வாழ்வு வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கை முறையை மாற்றி, அவர்கள் அனைவரும் ஆண்டவராம் கடவுளிடம் திரும்பி வரவேண்டும் என்ற அழைப்பைத் தருவதற்காகவே இறைவன் இறைவாக்கினர்களை அழைக்கின்றார்.

இறைவாக்கினர் மட்டுமல்ல நாம் ஒவ்வொருவரும் இறைவனால் அழைக்கப்பட்டவர்களே. A என்ற ஒரு மனிதன் உலகில் பிறக்க வேண்டும் என்றால் அவன் ஒரு தாயின் கருவில் உருவாக வேண்டும். அப்படி உருவாவதற்கு முன்பே - பல கோடி வருடங்களுக்கு முன்பே A என்ற அவன் இறைவனின் சித்தத்தில் உருவாகி இருக்கின்றான். காலம் வருபோது உலகில் பிறக்கின்றான்.

**இனி எமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் எரேமியா 1ம் அதிகாரத்திலிருந்து 06ம் அதிகாரம் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.**

01. - எரேமியா யாருடைய மகன்?
- அவர்கள் எங்கே வாழ்ந்தார்கள்?
02. அந்நாட்களில் (எரேமியாவின் நாட்களில்) யூதாவின் அரசனாய் இருந்தவர் யார்?
03. எந்த அரசனின் காலத்தில் ஜெருசலேம் மக்கள் பபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டார்கள்?
04. "தாய் வயிற்றில் உன்னை உருவாக்கு முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன். மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்" என்று இறைவன் சொன்னபோது எரேமியா அளித்த பதில் என்ன?
05. எரேமியா நீ காண்பது என்ன என்னும் கேள்வி எழ 'வாதுமை' மரக்கிளையைக் காண்கின்றேன் என்றேன். எபிரேயத்தி (மொழி)ல் வாதுமை என்றால் பொருள் என்ன?
06. மரத்தாலும் கல்லாலும் ஆன உருவங்களைக் கடவுளாக்கி உண்மையான கடவுளை இஸ்ராயேலர் புறக்கணிக்கின்றனர். என எரேமியாவின் இரண்டாம் அதிகாரத்தில் கூறப்படுகின்றது. அந்த வாக்கியம் எது?
07. நம்பிக்கையற்ற இஸ்ராயலே என்னிடம் திரும்பி வா என்கிறார். ஆண்டவர் நான் உன்மீது சினம் கொள்ளமாட்டேன் எனவும் சொல்கின்றார். ஏன்?
08. ஜெருசலேம் விடுவிக்கப்பட வேண்டுமானால் அது என்ன செய்ய வேண்டும் என்று இறைவன் சொல்கின்றார்?
09. நீதியைக் கடைப்பிடித்து உண்மையை நாடும் ஒரு மனிதனைக் கண்டுபிடிக்க முடியுமா என எருசலேம் தெருக்களில் சுற்றிப்பார்த்துத் தெரிந்து கொள். கண்டுபிடித்தால் எருசலேமுக்கு என்ன நடக்கும் என ஆண்டவர் கூறுகின்றார்.
10. கேணியில் நீர் சுரந்துகொண்டு இருப்பதுபோல அவள் தீமைகளைச் சுரந்துகொண்டிருக்கின்றாள். வன்முறை அழிவு என்பதே அவளிடம் இருந்து எழும்பும் குரல். இந்த அவள் யார்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 125 இற்கான கேள்விகளுக்கு 15 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

**அ. லூட்ஸ் அனிஸ்ரா, பற்றிமா வீதி, மாதகல், யாழ்ப்பாணம்.**

## பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
2. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
3. நி. நிவேதா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
4. ச. மேரிமறினி, அ.சி.இ, பூவரசங்குளம், வவுனியா.
5. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
6. வி. நிலோமி, பெரியகடை, மன்னார்.
7. செ. அன்ரனி, மாதகல், யாழ்ப்பாணம்.
8. யு. போசன்னா பீரிஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
9, ச. சாளினி, மரியாள்வீதி, தாழ்வுபாடு.
10. அ. தீபீகா, அளவக்கை, முருங்கன்.


## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**



**கறுப்பு வெள்ளை 4,500/=**
**கலர் 7,500/=**

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.140

## தானியேல் இணைப்புக்கள் : 1 மக்கபேயர்

உங்கள் விடைகளை ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | 02 |
| | | | | 03 | | | | 04 | |
| 05 | 06 | | | | | | ❖ | | |
| | ❖ | | | 07 | | | ❖ | 08 | |
| | | ❖ | 09 | 10 | | 11 | | | |
| | | | | | | 12 | | | |
| | 13 | | | | | 14 | | | |
| | | | | 15 | | | | 16 | |
| 17 | | | | 18 | | | 19 | | 20 |
| 21 | | | | | | | | | 22 |

*உங்கள் விடைகளை, குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.*

### இடமிருந்து வலம்
1. அவர் அந்தச் ..................... அதன் கோவிலையும் இடித்துத் தகர்த்தார்.
5. மன்னனின் கட்டளைப்படி நடவாதவர்கள் ..................
11. இப்போது விண்ணக இறைவனைத் ..................... அழைப்போம்.
12. "இது ........... தெய்வம் என்பதை உம்மால் மறுக்க முடியாது.
13. கொலையுண்டவர்களைத் .................. நகரைக் கடந்து சென்றார்.
14. அவர்கள் மன்னனிடம் சேர்ந்ததும் அவர்களின் .................. அவன் மகிழ்ச்சி கொண்டான்.
21. அவர் உன்னை ...................... வெட்டிப் பிளப்பார்." என்றார்.

### வலமிருந்து இடம்
2. இதனால் இஸ்ரயேலருக்குப் .............. விளைவித்து வந்தார்கள்.
3. பின் .................. வந்து கதவைமூடி, மன்னரின் கணையாழியால் முத்திரையிட்டுச் சென்றார்கள்.
4. ஆண்டவருக்கு .................. செலுத்துங்கள்: ஏனெனில் அவர் நல்லவர்.
7. ஏனெனில் இது உள்ளே வெறும் ............... வெளியே வெண்கலம்.
12. இவ்வாறு மிக ................ நிலையை அடைந்துள்ளார்கள்.
15. நீங்கள் ................ கோட்டைகள் உங்களுக்கே சொந்தமாகும்.
18. தன் குடிமக்கள் ..................... நாடே நடுநடுங்கியது.
22. ..................... மூடுபனியே, ஆண்டவரை வாழ்த்துங்கள்.

### மேலிருந்து கீழ்
2. இவ்வாறு இஸ்ரயேல்மீது ................. வந்துற்றது.
9. ஏனெனில் அது ................... அடைக்கல நகர்.
10. மாட்சியும் தூய்மையும் நிறைந்த உம் ................ வாழ்த்துக்குரியது.
12. இப்பொழுது நாங்கள் முழு உள்ளத்துடன் ......................... பின்பற்றுகிறோம்.
14. அவர்கள் தங்கள் .............., ஆட்சி அனைத்தையும் இழந்து இகழ்ச்சியுறட்டும்.
16. அவ்வாறே வீரர்களும் .................. அமைத்தார்கள்.

### கீழிருந்து மேல்
5. இவளோ எங்களுக்கு மறுமொழிகூற மறுத்துவிட்டாள். இவற்றுக்கு நாங்களே ........................
6. அப்பொல்லோனின் ......................... யூதா எடுத்துக்கொண்டார்.
8. எனினும் அவரைக் ................... ஒவ்வொரு நாளும் ஆவலோடு காத்திருப்பார்கள்.
11. படைக்கலம் ஏந்துங்கள்: ..................... கொள்ளுங்கள்.
12. "பாவம் செய்வதைவிட, அதைச் செய்யாமல் ......................... மாட்டிக்கொள்வதே மேல்" என்றார்.
13. எனவே இஸ்ரயேலர் ................... கோட்டைக்குத் தப்பியோடினர்.
17. தன் செயல்கள் பற்றிப் .............. பேசி வந்தான்.
19. அவை எருசலேமில் ................. முன்னிலையில் படிக்கப்பட்டன.
20. நிலம் நல்ல விளைச்சலைத் தந்தது சமவெளி மரங்கள் ................... கொடுத்தன.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 138ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ச. மேரி அஞ்சலா,
கள்ளப்பாடு தெற்கு, முல்லைத்தீவு.

**இரண்டாம் பரிசு:**
என். ஜெஸ்மன்,பாடசாலைவீதி,
முதலியார்குளம், செட்டிகுளம்.

**மூன்றாம் பரிசு:**
அ. செபஸ்ரியாம்பிள்ளை,
சாளம்பன், ஆண்டான்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 92 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 74 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 138ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. தே. ஆன் லக்ஷனா, சிறுக்கண்டல்.
2. டி. டிலக்ஷனா, மகா றம்பைக்குளம், வவுனியா.
3. எஸ். பெனிற்ரா, பள்ளமடு, விடத்தல்தீவு.
4. என். சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
5. செ. ஜெபராக்ஜினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
6. பி. நித்தியானந்தன், வட்டாரம் - 8, வங்காலை.
7. ஸ். நிலுஜன் யோசப் சில்வா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
8. வி. சுகிர்தா, பனங்கட்டுகொட்டு கிழக்கு, மன்னார்.
9. ஸ். நிருஜா சில்வா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
10. என். மேரி யோசப் குரூஸ், வட்டாரம் - 8, வங்காலை.
11. எஸ். நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
12. தே. ஆன் டிலைக்சனா, சிறுக்கண்டல்.
13. சஞ்சீவன் திவாரகா குலாஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
14. எஸ்.சி.சி. நவரத்தினராஜா, பா.வீதி, முதலியார்குளம், செட்டிகுளம்.
15. செ. அரியமலர், சாளம்பன், ஆண்டாங்குளம்.
16. என். செபமாலை மரியம்மா பீரிஸ், வட்டாரம் - 8 . வங்காலை.
17. பா. சுபாஜினி, கனகராயன்குளம் தெற்கு, வவுனியா.
18. கே. யோசப் பிறைற்றன் பீரிஸ், எமில் வீதி, தாழ்வுபாடு.
19. செ. ஜெபராஜ், சாளம்பன், ஆண்டாங்குளம்.
20. எஸ். சுதே பிரியசகி குலாஸ், அக்கினேஸ்புரம், வங்காலை.
21. செ. யூடிற் பிரசாந்தினி, கற்கிடந்தகுளம், முருங்கன்.
22. என். ஜீன்போல் குரூஸ், வட்டாரம் - 8, வங்காலை.
23. ஆர். றெறன்ஸ், எமில்நகர், மன்னார்.
24. ச. அன்ரனீற்ரா, பொன்தீவுகண்டல், அளவக்கை.
25. எஸ். அன்ரனி, பனிக்கார் புளியங்குளம், ஓமந்தை, வவுனியா.
26. அ. றேவதி, யோசவாஸ் நகர், தோட்டவெளி,
27. ஜே. நிசாந்தி மல்ராஜ், தெற்கிலுப்பைக்குளம், வவுனியா.
28. ந. அனஸ்ரினா, திருக்குடும்ப கன்னியர் மடம், தலைமன்னார்.
29. ச. மேரி அஞ்சலா, கள்ளப்பாடு தெற்கு, முல்லைத்தீவு.
30. டி. டிசாந்தி, இல-211 வீட்டுத்திட்டம், மகாறம்பைக்குளம், வவுனியா.
31. அ. எப்சிபா, கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்.
32. ஜே. நிறோசா, சாளம்பன், ஆண்டான்குளம்.
33. செ. மேரி கௌசிகா, தி.க.மா.இ, 121 பிரதானவீதி, யாழ்ப்பாணம்.
34. ஜே. வலன்ரீனா துரம், 8ம் வட்டாரம், பேசாலை.
35. ஜே. நித்தியன் துரம், 8ம் வட்டாரம், பேசாலை.
36. ச. அன்ரனிலா, கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்.
37. பா. மேரி சுதந்தினி, நித்தாவத்தை, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
38. எஸ். நாஸ்திகன், கமுனிஸ் கல்விசாலை, வன்னி.
39. மெல்போன், உயிலங்குளம், மன்னார்.
40. எஸ். ஸ்ரீபன், சிறுக்கண்டல், முருங்கன்.
41. செ. செல்வமலர், பனிக்கார் புளியங்குளம், ஓமந்தை, வவுனியா.
42. கெ. மேரி பிறிடா பீரிஸ், எமில் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
43. டல்ஸ்சன் றொய்ஸ் குரூஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
44. அ. எஜெக்கின். கட்டுக்காரன்குடியிருப்பு, தலைமன்னார்.
45. டி. டிலோயா, வீட்டுத்திட்டம், ஸ்ரீராமபுரம், வவுனியா.
46. பா. மேரி சுகந்தினி, நித்தாவத்தை, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
47. எஸ். ரஜலக்ஷன், பனங்கட்டுக்கொட்டு, மன்னார்.
48. அ. நிலா, ஆத்திக்குழி, முருங்கன்.
49. பெ. டண்சன் பருனாந்து, 8ம் வட்டாரம், பேசாலை.
50. பி. றாஜி, கற்கிடந்தகுளம், முருங்கன்.

### இல.138 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | பு | ன் | அ[18] | கா[10] | ❋ | வ[05] | லி | மை | த[02] |
| து[19] | ன் | ப | ம் | ல | து | மு | உ[11] | ன் | ம |
| ளை | அ[07] | ச் | ச[08] | ம் | ன | மா | ன் | தீ[04] | க் |
| க | வ | வே | டை | க | கை | ஈ[01] | கை | க் | கு |
| ல் | ர | ற | யா | ட் | தீ[20] | யோ | ர் | க | க் |
| ய | து | அ[13] | ர் | வெ[06] | ஞா[22] | த[15] | வ | று | வா[03] |
| செ[14] | ந் | ரு | வ | ❋ | ன | ய | சு | ன் | ழ் |
| ல் | வி | ள் | ட | யே[23] | ம் | ங் | ஞ் | க | வோ |
| ல | கு[12] | வா | ண் | சி | ரு | கா | அ[24] | அ[17] | ர் |
| ம் | வ | ர் | ஆ[09] | ரா | யா[21] | தே | ழா | கி | ம[16] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.139ற்கான முடிவுகளை 2014ம் ஆண்டு ஏப்ரல் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## அகவை ஒன்றின் நிறைவில் ........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

சிறப்பாக மாணவர்களின் வாசிப்புத்திறன் மற்றும் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் பாடசாலை மாணவர்களுக்கான இலவச கணித, விஞ்ஞான, மற்றும் ஆங்கில வகுப்புக்களுடன் உளவளத்துணை, கணனி மற்றும் ஆங்கில (Certificate Courses) கற்கைநெறியினை நூலகத்தின் வழமையான செயற்பாடுகளுடன் நடைமுறைப்படுத்தி வருகின்றது. முதலாவது ஆண்டின் நிறைவினைப் பூர்த்திசெய்யும் இக்கல்விசார் வள நிலையமானது சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு தரப்பினரின் கல்வித் தேவைகளை பூர்த்திசெய்தவாறு வளர்ச்சிப் போக்கில் பயணிக்கின்றது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொரு விடயமாகும்.

## இலங்கையில் முதற் தடவையாக ........

07ஆம் பக்கத் தொடர்ச்சி

இவ்வமைப்பே Conference of Major Religious Superiors (CMRS) in sri Lanka. **இலங்கைத் துறவற அதியுயர் அதிபர்களின் மன்றம்.** இலங்கையில் பணிபுரியும் அனைத்துத் துறவற சபைகளும் இம்மன்றத்தில் அங்கத்தவர்களாயுள்ளனர். இந்த அமைப்பின்கீழ்:

1. துறவற உருவாக்கத்திற்கான செயற்குழு
Committee for Religious Formation (CRF)
2. நீதி, சமாதானம், படைப்புகளுடனான ஒன்றிப்பு செயற்குழு.
Justice Peace and Integrity of Creation Committee (JPIC)
ஆகியன இயங்குகின்றன.

இவை தவிர, கடந்த ஆண்டு முதல் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை நாடு முழுவதும் செயற்படுத்தும் நோக்குடன் மறை மாவட்டங்கள், மறை வட்டாரங்கள் ரீதியாகத் துறவறத்தாரின் பிரதேசக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதேச துறவற அலகு
**Regional Religious Unit (RRU)**

இப்பிரதேச அலகுகள் தத்தம் பிரதேசங்களில் செய்யவேண்டிய ஒருங்கிணைந்த செயற்பாடுகளை உய்த்துணர்ந்து தத்தமது சபைகள் என நோக்காது ஒன்றுபட்ட துறவறத்தார் எனும் நிலையில் செயற்படத்தூண்டும்.

## அருட்சகோதரி கொலம்பா இறையடி சேர்ந்தார்

திருக்குடும்ப துறவற சபையின் யாழ் மாகாணத்தைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி கொலம்பா சிங்கராயர் (தி.க) அவர்கள் தனது எண்பத்தாறாவது வயதில் கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற செபிப்போம்.

## உண்மைத் தவம் .....

11ஆம் பக்கத் தொடர்ச்சி

### தவமும் ஒப்புரவு அருள்சாதனமும்

அருள்வாழ்வின் பரிமாணமாகிய தவம் எனும் பண்பை மன்னிப்பு, வழிபாடு மற்றும் ஒப்புரவு அருள்சாதனச் சூழலில் நன்கு புரிந்துகொள்ளலாம். ஒப்புரவு அருள்சாதனம் என்று பெயரிட்டு அழைப்பதே அதன் உறவுத்தன்மையையும் சமூகப்பண்பையும் வலியுறுத்துவதற்குத்தான். மனமாற்றம் என்பது ஒரு தொடர் செயல் எனவும் இது அன்றாடக் கிறிஸ்தவ வாழ்வு மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் ஒரு பகுதி எனவும் ஒப்புரவு அருள்சாதனம் வலியுறுத்துகிறது. ஒப்புரவு அருள்சாதனம் சமூக நீதியையும் வலியுறுத்துகிறது. இது திருச்சபை சார்ந்த பொறுப்பையும் வலியுறுத்துகிறது. இவ்வாறு ஒப்புரவு அருள்சாதனம் மற்றும் மன்னிப்பு வழிபாடு திருச்சபையின் நற்செய்திப்பணி மற்றும் வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளன. ஒப்புரவு அருள்சாதனத்தைத் தனிமனிதர் தூய்மையாக்கலாக மட்டும் பார்த்தலாகாது. இது திருவழிபாட்டுக் காலச்சுழற்சியுடன் பார்க்கப்பட வேண்டும். ஆகவே ஒப்புரவு அருள்சாதனம் கூறும் தவமும் திருச்சபையின் ஒட்டுமொத்த வளர்ச்சியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்பட வேண்டும்.

### முடிவுரை

தவத்தின் அடையாளமாக யூதர்கள் மூன்று காரியங்களை எண்ணியிருந்தனர். தர்மம் செய்தல் (லேவி 23:22, இச 24:19-22), செபித்தல் (விப 20:3,திபா63:6-8), நோன்பு இருத்தல் (1சாமு 7: 6, யோவே1:14, யோனா3:5-9, லேவி16:29-34, செக் 8:19, நீதி2:26,2 குறி 20:3-4,1 சாமு31:13, 2சாமு1:12). இயேசுபிரான் இம்மூன்று பண்புகளையும் குறித்து புது விளக்கமளித்தார். இவை தர்மம் செய்தல் (மத் 6:2-4), இறை வேண்டல் செய்தல் (மத் 6:5-6), நோன்பு இருத்தல் (மத்6:16-18) ஆகியன. இவை வெளிவேடக்காரரின் செயல்கள்போல் இருத்தலாகாது என இயேசு வலியுறுத்தினார். இதன் மூலம் தவத்தின் உண்மையான நோக்கத்தை அவர் தெளிவுபடுத்தினார். திருச்சபையின் இறையியல் சிந்தனையில் இந்நோக்கம் ஆழமாகப் பார்க்கப்பட்டு திருச்சபை நலன் சமுதாய நலன் ஆகிய கண்ணோட்டங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். (பதிப்பாசிரியர்)

ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்
காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம் -
பதிப்பாசிரியர்

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 18 07 1943 — உதிர்வு 10 01 2014



### திரு. மோசேஸ் கூஞ்ஞ
(தலைமன்னார் கிராமம்)

தாய்க்கு தலைமகனாய், சகோதர பாசத்தில் சிகரமாய்
குடும்பத்தின் குலவிளக்காய், உழைப்பில் கருத்தாய்
விசுவாசத்தில் உறுதியாய், கலையின் கருவியாய்
நகைச்சுவையில் வில்லனாய், கடமையில் கண்ணியமாய்
நான்கு பிள்ளைகளுக்கு பாசமிகு தந்தையாய்
தமிழ் இரத்தம் என மார்பு தட்டியவனாய்
இன்று எம் தேசம் விட்டு
விண் தேசம் சென்றாயே!
உம் பிரிவு எம்மை வாட்டி வதைக்குதையா!
உம் முகத்தை எம் கண்கள் தேடுதையா.
விண்ணில் இறைசந்நிதியில் நீர் வீற்றிருக்க
உம் மக்கள் நாம் வேண்டுகின்றோம்.

*உம் பிரிவால் துயருறும் :*
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.*

## 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 05 1968 — உதிர்வு 24 03 2009



### திரு. செபமாலை கொண்சாலஸ்
(ஆண்டாங்குளம்.)

*"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்" (2 திமெ. 4:7).*

வாழ்வின் போராட்டம் வலஞர் மடத்தில் முடிந்ததப்பா
கோர யுத்தம் உன் நெஞ்சைப் பிளந்து பதம் பார்த்ததப்பா
ஊற்றெடுத்த உதிரத்தில் உன் உயிர்மூச்சுத் துடித்ததப்பா
காற்றாய்ப் பறந்து கணப்பொழுதில் கடவுளிடம் சென்றாயே
என் அருமை அப்பா!
காலம் உங்களுக்கு! கல்லறை சொந்தமல்ல!
கடவுளின் விண்ணக அறைதான் உங்களுக்குச் சொந்தம்.
உமக்காகத் தினமும் இறைவேண்டல் செய்கின்றோம்.
உம் ஆன்மா ஆண்டவரில் அமைதி பெறட்டும்!

*உங்கள் பிரிவால் துயருறும் :*
*மனைவி, பிள்ளை, தாய், தந்தை, சகோதரர்கள்.*

## நன்றி நவிலல்



காலம் சென்ற திருமதி அக்னஸ் றூத் தம்பிநாயகம் - பிலிப்புப்பிள்ளை, (102) குடும்பத்தினராகிய நாங்கள் எங்கள் அன்னையின் இறுதி நல்லடக்கத் திருப்பலியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். குறிப்பாக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகைக்கு முதற்கண் எமது இதயூர்வமான நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம். கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு வியானி பெர்னான்டோ ஆண்டகை எங்கள் அன்னையின் ஆன்மீக வாழ்வில் வழிகாட்டியாகத் திகழ்ந்திருக்கின்றார். அவருக்கும் நன்றி.

அடக்கச்சடங்கின்போது திருப்பலியில் பங்கெடுத்த குருக்கள், துறவியர், உற்றார் உறவினர், உபகாரிகள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

பிரேத அடக்கத்தின்போதும் இறுதிப் பயணத்தின்போதும் முழுமையான ஆதரவை வழங்கிய ஏ. எப். றேமன்ஸ் உரிமையாளர் மற்றும் மன்னார் நகரசபைச் செயலாளர் திரு. றேனால்ட் பிரிட்டோ இன்னும் அனுதாபச்செய்திகளை அனுப்பியோர், மலர் வளையங்கள் வைத்தோர் அனைவருக்கும் நன்றி நவில்கிறோம்.

# பொது மக்களின் ஆதரவோடு வளர்ச்சிகண்டு வரும் முருங்கன் வைத்தியசாலை











பிரதேச மக்களின் ஆதரவோடும், வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் அயராத முயற்சியோடும் முருங்கன் வைத்தியசாலையானது பலவித அபிவிருத்திகளைக் கண்டுவருகின்றது. முருங்கன் பிரதேச வைத்தியசாலையில் 2009ம் ஆண்டு மாவட்ட வைத்திய அதிகாரியாக வைத்திய கலாநிதி ஒஸ்மன் சாள்ஸ் அவர்கள் தனது கடமையை பொறுப்பேற்று நோயாளிகளுக்கு சிறப்பான மருத்துவ சேவையினை வழங்கிவருகின்றார். அத்தோடு இவ்வைத்தியசாலையைத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையோடும், உத்தியோகத்தர், ஊழியர்களின் ஒத்துழைப்போடும் மேற்கொண்டு வருகின்றார்.

- நோயாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு சுகாதாரமான சிற்றுண்டி உணவினை வழங்குவதற்காக நானாட்டன் பிரதேச கமக்கார அமைப்புக்களின் உதவியுடன் சிற்றுண்டிச்சாலை கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது.
- நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களின் நலன்கருதி வெளிநோயளர் பிரிவில் அவர்களுக்கான தரிப்பிடம் நானாட்டான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உதவியுடன் (Waiting Hall) அமைக்கப்பட்டுள்ளது.
- வைத்தியசாலை வளாகத்தினுள் பிரதேச மக்கள், ஊழியர்கள், மன்னார் மறைமாவட்ட ஆயர் போன்றோரின் உதவியுடன் புதிதாக இறை இரக்க ஆலயம் அமைக்கப்படுகிறது.
- வைத்தியசாலையின் முன்தோற்ற சுற்றுவட்டத்தில் பிரதேச மக்களின் உதவியோடு பூமரங்களைப் பூச்சாடிகளில் நாட்டியதோடு பயன்தரும் மரங்களும் நாட்டப்பட்டுள்ளன.
- வெளிநோயாளர் பிரிவில் வரும் பாலூட்டும் தாய்மார்களுக்கான தாய்ப்பாலூட்டும் அறை உலக தரிசன நிர்வனத்தின உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- 20 வருட காலமாகக் கண்ணிவெடியுடன் காணப்பட்ட வைத்தியசாலைக்கு சொந்தமான காணியில் முருங்கன் பொலிஸ், இராணுவத்தின் உதவியுடன் கண்ணிவெடியினை அகற்றி வேலி அமைக்கப்பட்டுள்ளது.
- பாரிய மரங்களை வெட்டி, மணல் கொண்டு நிரப்பி, சுற்று வேலிகள் அமைத்து, உலக தரிசன உதவியுடன் சிறுவர்களுக்கான பூங்கா புனரமைக்கப்பட்டுள்ளது.
- கால்நடைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் வைத்தியசாலையின் உள்ளகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் வைத்தியசாலையைச் சுற்றி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது.
- குன்றும் குழியுமாகக் காணப்பட்ட வைத்தியசாலை வளாகத்தினை மணல், கற்கள் கொண்டு உழவு இயந்திரத்தின் மூலமும், மக்களின் உதவியுடனும் நிரப்பி சமநிலைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவிகள் புரிந்த பிரதேச மக்கள், கமக்கார அமைப்புக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், பொலீஸ், இராணுவம் ஏனைய நலன் விரும்பிகள் அனைவருக்கும் மாவட்ட வைத்திய அதிகாரி சார்பாகவும், வைத்தியசாலை அபிவிருத்திச் சபை சார்பாகவும் எமது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, பிரதேச வைத்தியசாலை, முருங்கன்.**

## தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த பெப்ரவரி மாத மன்னாவில் 16ஆம் பக்கத்தில் அமரர் திரு. கஸ்பார் அந்தோனிப்பிள்ளை அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியின் இறுதிப் பகுதிகள் கணனி எழுத்து மாறுபட்டதால் ஆங்கிலத்தில் பதிவாகியுள்ளது. இதற்காக வருந்துகிறோம். அதன் தமிழ் வடிவம் கீழே தரப்படுகிறது.

*உம் பிரிவால் துயருறும் :*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*
*தகவல் : ஜெனோ (கனடா), மரியதாஸ் (ஜேர்மனி).*

# விடத்தல்தீவுப் பங்கில் திருப்பாலத்துவ சபையினரின் விழா



கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி விடத்தல்தீவுப் பங்கில் திருப்பாலத்துவ விழா சிறப்பாக இடம்பெற்றது. அன்று காலை 6.30 மணிக்கு அருட்சகோதரி எம். ஜெயவதி அவர்களின் வழிநடத்தலில் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். சவுல்நாதன் தலைமையில் திருப்பலியுடன் இவ்விழா ஆரம்பமானது.

திருவிழாத் திருப்பலியை திருப்பாலத்துவசபைச் சிறுவர்களே பாடல் திருப்பலியாகச் சிறப்பித்தனர். திருப்பலி முடிவில் அருட்தந்தையினால் சிறப்பு ஆசீர்வாதம் வழங்கப்பட்டு சிறுவர்களுக்கு நல்வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மதியம் 11.30 மணிக்கு அருட்சகோதரியின் தலைமையில் திருப்பாலத்துவ சபைச் சிறுவர்கள் அனைவரும் மதிய உணவுப் பார்சல்களுடன் புனித யாகப்பர் ஆலயத்தில் ஒன்றுகூடினர். சிறுவர்கள் அனைவரும் தாம் கொண்டுவந்த உணவை ஒருவர் ஒருவரோடு பகிர்ந்துண்டு மகிழ்ந்தனர். சிறுசிறு விளையாட்டுக்களையும் நடத்தி, குளிர்பானமும் பரிமாறினர். இவ்வாறு திருப்பாலத்துவ சபையினரின் திருவிழா இனிதே நிறைவுற்றது. **தகவல் - விக்ரர் ஆன் சௌமியா.**

## விவிலிய அறிஞர் பீற்றர் ......

3ஆம் பக்கத் தொடர்ச்சி


திருப்பதி பல்கலைக்கழகத்தில் இலக்கியம் மற்றும் வரலாற்றில் முதுகலைப் பட்டமும், உரோம் கிரகோரியன் பாப்பிறைப் பல்கலைக்கழகத்தில் விவிலியத்தில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

சென்னை பூவிருந்தமல்லி புனித பவுல் விவிலிய நிறுவனத்தின் இயக்குனர், தமிழக ஆயர் பேரவையின் உதவிச் செயலர், தென்கிழக்கு ஆசிய கத்தோலிக்க விவிலியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர், தமிழக விவிலிய – மறைக்கல்வி மற்றும் திருவழிபாட்டு மைய இயக்குனர் எனப் பல முக்கிய பொறுப்புக்களை வகித்துள்ள புதிய ஆயர் பீட்டர் அபீர், 2004ஆம் ஆண்டில் இவர் தொடங்கிய எம்மாவுஸ் ஆன்மீக மையத்தின் இயக்குனராக 2010 ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகிறார். திருவிவிலியம் தொடர்பான பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01 ✝ 01 ✝ 1925



உதிர்வு
11 ✝ 03 ✝ 2013

"ஆண்டவர் தம் அடியாரின் மரணம்
அவருடைய பார்வையில் மிக
மதிப்பிற்குரியது" (தி.பா 115:6)

இறைவனில் நித்தியமாய் துயில்கொள்ளும் எங்கள் அன்பான
ஐயா! அறிவான ஐயா! ஆண்டு ஒன்று சென்றாலும்
எம் இதயத்துயரம் அகலவில்லையே!
தந்தையாய், சகோதரனாய், அன்பனாய், ஆசானாய்,
பக்திநெறியாளனாய் வாழ்ந்திட்ட காலங்களை
மறைக்காது கூறும் உம் வரலாறுகள்
மறக்க முடியவில்லையே! உம் இறப்புத் துயர்தனை.

பொறுமையின் சிகரமாய், இறைபக்தியில் தானியேலாய்,
உண்மை நேர்மையில் உத்தமனாய், பாசத்தின் நிறைகுடமாய்,
நடமாடும் ஆங்கில அகராதியாய் வாழ்ந்து
எம்மைவிட்டுப் பிரிந்த பாசமுள்ள எம் அருமைத் தந்தையே!
உயிர் உள்ளவரை உமதன்பை மறவோம்.

கொழும்பு சென்பீற்றஸ் கல்லூரி (26 வருடம்),
மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி,
வங்காலை புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயம்
ஆகிய இடங்களில் சிறப்பான கல்விப்பணியுடன் மறைக்கல்வி
ஆசிரியர், வின்சென் டி போல் சபை, மரியாயின் சேனை
கொமிசியத் தலைவராகவும் மகத்தான மறைப்பணி ஆற்றிய
மாதாவின் பக்தரே மறக்க முடியுமா உங்களை?
என்றும் இறைவனின் புகழ்பாடி அமைதியில் இளைப்பாறுங்கள்!

தகவல் : மனைவி றோஸ்மேரி,
மகள் - Dr. பெற்றா சில்வா (அமெரிக்கா)
மக்கள் - புஸ்பம், பொன்மணி, (லண்டன்)
மகன் - ஜீவா (பிரான்ஸ்)

ம. ஆபெல் றெவ்வல் குடும்பம் (மருமகன்)
முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் (மன்னார்)
அன்புப் பேரன் றூபன், அன்புப் பேத்தி றூபி (வங்காலை)

## திரு. செபமாலை அல்போன்ஸ் சில்வா
### (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

---

## குருத்துவ வெள்ளி விழா வாழ்த்துக்கள்
30.03.1989 – 30.03.2014



### அருட்பணி யூட் குலாஸ்

புராதன துறைமுக நகராம் வங்கம் தங்கும் காலைதனில்
நல்முத்தாய் அவதரித்த குருவே!
புனித அன்னாள் கல்விக்கூடமதில் ஆரம்பக் கல்வியும்
புனித பத்திரிசியார் கல்விக்கூடமதில் உயர்தரக் கல்வியும்
கற்றுத்தேறினீர் களிப்புடனே!
மெய்யியலும் இறையியலும் பொருள்பட
இந்திய பெங்களூர் கல்லூரி தந்தது.
மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர்
தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால்
திருப்பொழிவு பெற்று குருவானீர் செபமாலைத் தாசனாய்.
ஆண்டுகள் பல உருண்டோட தலைமையின் அனுமதியுடன்
சென்றீர்கள் டென்மார்க் நாட்டிற்கு!
மேற்றிராசனக் குருவாய் - டனீஸ் வாழ் மக்களுடன் இணைந்து
யூபிலி விழாக்காணும் உங்களை வைத்து பொன்விழா,
வைரவிழாக் காணும் தந்தை மகன் தூய ஆவியானவருடன்
அன்னை மரியாளும் ஆனாள் அன்னையும் ஆசீர் அருள
செபிக்கின்றோம்; வாழ்த்துகின்றோம்.
**அக்கா குடும்பத்தினர், வங்காலை**

(அருட்பணி யூட் குலாஸ் பற்றிய சிறப்புக் கட்டுரையை பக்கம் 12 இல் காணலாம்.)

---



## அமதிகளின் 'லெபாறா'

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகாம்பிகைக்குளம் என்னும் கிராமத்தில் யாழ் மாகாண அமதிகளினால் நடாத்தப்படும் 'லெபாறா' என்ற கல்விசார் வள நிலையத்தின் வெளிப்புறத் தோற்றத்தினை இங்கே காண்கின்றீர்கள்.

---

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
08
12
1948



உதிர்வு
26
01
2014

### திருமதி. செபமாலை வரோணிக்கா லெம்பேட் (மொனிக்கா) (வங்காலை)

உங்கள் அணைப்பால் அகமகிழ்ந்தோம்
உங்கள் பிரிவால் வெறுமையானோம்
இல்லத்தில் இன்பமெல்லாம் இழந்தோம்
உள்ளம் உடைந்து போனோம் அம்மா.

கண்நிறைந்த உங்கள் கட்டழகு
காதுகளில் ஒலிக்கும் உங்கள் இனிய குரலோசை
நீங்கள் விட்டுச்சென்ற நற்பண்புகள்
எம் நெஞ்சத்தை நெகிழ வைக்குதே அம்மா.

நாங்கள் சென்ற இடமெல்லாம் தேடித்தேடி ஓடிவந்தீர்களே
உங்கள் துன்பம் மறந்து எமக்கு இன்பம் தந்தீர்களே.
அம்மா நீங்கள் இல்லாத ஒரு வாழ்வை
நினைத்துப்பார்க்க முடியவில்லையே?
ஆண்டவன் அடியில் உங்கள் ஆன்மா அமைதிபெற
வேண்டுகின்றோம். சாந்தி. சாந்தி. சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும் : குடும்பத்தினர்.

---

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
15 ✝ 05 ✝ 1937



உதிர்வு
21 ✝ 03 ✝ 2013

### திருமதி. பேணடேத் ஞானப்பிரகாசம் (சில்லாலை, யாழ்ப்பாணம்.)

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணி முடியாகத் திகழ்வாய், உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்" (எசாயா 62. 3:4)

விண்ணகத் தந்தையே, உம் பதம் வந்த
எங்கள் அம்மாவின் ஆன்மாவுக்கு
வானதூதரின் கூட்டத்தோடு உம்மைப்
புகழ்ந்தேற்றும் பாக்கியத்தைக் கொடுத்தருளும்.
இவரின் பொறுமை, அன்பு, மன்னிப்பு, சகிப்பு ஆகிய
புண்ணியங்கள் நிறைந்த வாழ்வு இவரின்
மோட்ச வாழ்வுக்குத் துணைபுரிவதாக! ஆமென்.

உங்கள் நினைவில் வாழும் :-
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி,
மைத்துனி, உற்றார் உறவினர்

தகவல் : மகன் கிறேஸ், வவுனியா.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் ... அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org